இடி-02 ஒகஸ்ட் 18 - 24 , 2002 ரூ. 18/- முழக்கம் - 74

இடி IDI
பக்கங்கள் 24

# மலையகத்தில் மலிந்து வரும் மதுபான நிலையங்கள்

# டும்...டும்...டும்...
# பொதுத் தேர்தல் வருகிறது!






# புலிகளின் பொறுமை சோதிக்கப்படுகிறது



## வேற்றுக்கிரகவாசிகள் பூமிக்குப் படையெடுப்பு

## ரஜினியை கைவிட்ட ஏ.ஆர். ரஹ்மான்

## நேர்முகம்: மயோன் முஸ்தபா

## இந்துமத ஒற்றுமை கீதம்

இந்து சமய மக்களெல்லாம் ஒன்று சேருவோம்;
பந்தத்தோடு இணக்கமாக வாழ்ந்து காட்டுவோம்;
சந்தத் தமிழ் சூட்டி இறை தாழ் பணிகுவோம்; முந்து
புகழ் இந்து தர்மம் முழங்கச் செய்குவோம்.
ஆதி ஆதி காலந்தொட்டு வந்த மதமிது
ஆதி மூல நாயகனைக் கண்ட மதமிது
ஓதி ஓதி உண்மைதனை உரைத்த மதமிது
நீதி தேவன் கோயில் கொண்டு நிலைத்த மதமிது
பெற்ற தாயை தந்தைதனை தெய்வமாகவே
பேணி பாதுகாத்து வாழும் இந்து மதமிது
முற்றும் உணர்ந்து இந்து தர்மம் முறையறியா
தெற்று கூறும் தீயர்மனம் திருந்தச் செய்குவோம்
அன்பு வழி காட்டுவதும் இந்து தர்மமே
இன்பநிலை கூட்டுவதும் இந்து தர்மமே
முன்பு உலகை உயர்த்தியதும் இந்து தர்மமே
துன்ப நிலை போக்கியதும் இந்து தர்மமே!

*–சுவாமி மதுரானந்தர்*

## இஸ்லாமிய சிந்தனை

ஒரு ஜனசாவானது பெட்டியில் வைக்கப்பட்டு அதைத் ஆண்கள் தங்கள் தோள்களில் தூக்கிச் செல்லும் போது, அந்த ஜனாசா நல்லறங்கள் புரிந்ததாக இருக்குமானால் "என்னை விரைந்து கொண்டு செல்லுங்கள், என்னை விரைந்து கொண்டு செல்லுங்கள்" என்று கூறும். அது நல்லறங்கள் புரியாததாக இருக்குமானால் "கைசேதமே! என்னை எங்கே கொண்டு செல்கிறீர்கள்?" என்று கூறும். இவ்வாறு ஜனாசா கூறும் சப்தத்தை மனிதனைத் தவிர ஏனைய அனைத்தும் செவியுறும். மனிதன் அதனைச் செவியுற்றால் மயங்கி விழுந்து விடுவான்.

அறிவிப்பவர் : அபூ ஸயீதுல் குத்ரி (ரலி)
ஆதாரம் : புகாரி.

*—எம்.எஸ்.நஸீஹா, ஏத்தாலை*

## நிரந்தரமானது எது?

இன்றைய நவீன உலகம் பல புதிய கண்டுபிடிப்புக்களை, ஆக்கங்களை உருவாக்குவதில் தீவிர போட்டியுடன் செயற்படுகின்றது. ஆனால் வேதாகமம் *"....மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலவும் இருக்கிறது. கர்த்தரின் ஆவி அதின் மேல் ஊதும் போது, புல் உலர்ந்து, பூ உதிரும்; ஜனமே புல். புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது"* (ஏசாயா 40: 6-8) அந்த நிலையான வசனத்தைக் கண்டு பிடிக்க சுதந்தரிக்கப் போட்டியிடுவோம்.

*—ஜெக்குலின் கொரேரா, 44/57, St.Anthony's Mw, Col - 13.*

Millenium Advertising & Printers (Pvt) Ltd.
No. 417/ 2, Galle Road, Colombo -03
Telefax: 01-370992 E-mail: map@pan.lk

கதைகளில் இடம்பெறும் சம்பவங்கள், கதாபாத்திரங்கள் கதாசிரியர்களின் கற்பனையே. கட்டுரைகள் அவற்றை எழுதியோரின் கருத்துக்களேயன்றி, அக்கருத்துக்களோடு 'இடி'க்கு உடன்பாடு உண்டு அல்லது இல்லையென்று கருதக் கூடாது.

## வரவு இல்லாத செலவு

இடி வாசகர்களுக்கு இனிய வந்தனங்கள்

தோட்டத் தொழிலாளர்களுக்கு தினக் கூலி எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியான ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாமல் பிரதான இருமலையகக் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் முரண்பட்டு நிற்கின்றன.

ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் 151 ரூபாவைப் பெற்றுக் கொடுக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முயற்சி செய்தது. போராட்டம் எதுவுமின்றி 180 ரூபாவைப் பெற்றுக் கொடுக்க முடியுமென மலையக மக்கள் முன்னணி மார்தட்டியது. இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி 200 ரூபா சம்பள உயர்வை முன்வைத்துப் பிரசாரம் செய்கிறது.

இலங்கைக்கு மிக அதிகளவில் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் தொழிலாளிக்கு எவ்வளவுநாள் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதில் ஒத்துப் போக முடியாத நிலையில் மலையகத்தின் பிரதான கட்சிகளும், தொழிற்சங்கங்களும் உள்ளன.

ஆர்குத்தியாகிலும் அரிசியாக வேண்டும் என்ற எண்ணம் தொழிலாளர் மத்தியில் உள்ளது. கட்சி நலன்களை மறந்து தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்கு முடிவு கட்ட அரசியல் தலைவர்களும், தொழிற்சங்கங்களும் முன்வரவேண்டும்.

நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியாகவும் விலை வாசி உயர்வடைந்து செல்கிறது. வற்முறையினால் விலை வாசி குறைவடையும் எனவும், விலைவாசி உயர்வடையும் எனவும் மெத்தப்படித்த அரசியல்வாதிகள் கூச்சல் போடுகின்றார்கள். தொழிலாளர் சம்பள உயர்வுக்கு வழிமுறை எது என கேட்கும் கேள்விக்கு சரியான விடை தெரிவிக்காது அனைவரும் நழுவும் போக்கையே கடைப்பிடிக்கின்றனர்.

போராட்டம், வேலை நிறுத்தம், ஒத்துழையாமை இயக்கம் என நடைபெறும் போராட்டங்களினால் அப்பாவித் தொழிலாளர்களின் அன்றாட வருமானமே பாதிக்கப்படுகின்றது.

மலையகத் தொழிலாளர் நடத்தும் போராட்ட காலங்களில் அரசியல்வாதிகளினதோ அல்லது தொழிற்சங்க தலைவர்களினதோ ஒரு நாள் சம்பளத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

மலையகத் தொழிலாளர்களின் இன்றைய ஒரு நாள் வருமானம் ஒருநேரச் சாப்பாட்டுக்கே காணாது என்பது நிதர்சனம். தொழிலாளர்களின் தினச் சம்பளத்தை அதிகரிக்க மலையகத் தலைவர்கள் ஒரேகுரலில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். வரவின்றி செலவு செய்யும் அவல நிலையிலிருந்து மலையகத் தொழிலாளர்கள் விடுபட வேண்டும்.

*அன்புடன் ஆசிரியர்,*
**ஏ.ரவிவர்மா.**

# தனியார் போக்குவரத்து சேவையின் சீர்கேடு

(எம்.எம்.ஏ.ஸமட்)

தனியார் போக்குவரத்து சேவைக்கான பயணக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட நிலையில் தனியார் போக்குவரத்து சேவையின் திருப்தியின்மையினையிட்டு பயணிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

கடமைகளுக்குச் செல்லும் அலுவலகர்கள் உட்பட வேறு தேவைகளுக்காக தனியார் பேரூந்துகளைப் பயன்படுத்தும் பயணிகள் அப்பேரூந்துகளின் ஓட்டுனர்களினதும் நடத்துனர்களினதும் அசமந்தப் போக்கினையிட்டு விசனம் தெரிவிக்கின்றனர்.

நீண்ட நேரமாக தரிப்பிடங்களில் தரித்து நிற்பதால் உரிய நேரத்திற்கு தமது அலுவலகங்களுக்குச் செல்லவோ, தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவோ முடியாதிருப்பதாகவும், சில பேரூந்துகளில் அளவுக்கதிமாக பயணிகளை ஏற்றுவதால் அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும், சில நடத்துனர்கள் சில வேளைகளில் தாம் கொடுத்த பணத்தின் மீதியை தர மறந்து விடுவதாகவும் தெரிவிக்கும் பயணிகள் இத்தகையோர் தாம் உழைப்பதையே பெரிதுபடுத்துகிறார்களே தவிர, பயணிகளின் நலன்களைக் கருத்திற் கொள்வதில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தகைய சேவையினை மேற்கொள்ளும் ஓட்டுனர்கள், நடத்துனர்கள் குறித்து பொறுப்புள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மட்டக்களப்பில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு நகரில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனை ஏறாவூர், ஓட்டமாவடி, செங்கலடி, மட்டக்களப்பு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, கல்லாறு, மருதமுனை, கல்முனை போன்ற சன நடமாட்டம் கூடிய பிரதேசங்களில் தினமும் ஒன்றுக்கு மேற்பட்ட சாதாரண, பெரிய வாகன விபத்துக்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்விபத்துக்கள் தற்போதைய சமாதான சூழலில் மக்கள் நடமாட்டம், வாகனப் போக்குவரத்து அதிகரிப்பு போன்ற காரணங்களாலும், வீதி ஒழுங்கு விதிகளை பயணிகள் சரியாக கடைபிடிக்காமை போன்ற காரணங்களாலுமே நடைபெற்று வருவதாக வீதி ஒழுங்கு பொலிஸ் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இவற்றைத் தவிர்க்கும் வகையில் நகர்களில் பல பகுதிகளில் சன நடமாட்டம் கூடிய நேரங்களில் குறிப்பாக காலை, மாலை வேளைகளில் மேலதிக வீதி ஒழுங்குப் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை வீதி ஒழுங்கு விதிகளை மீறும் வாகனச் சாரதிகள் வீதி ஒழுங்குப் பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டும் வருகின்றனர்.



திகாமடுல்ல மாவட்ட பாரளு மன்ற உறுப்பி னர் மயோன் முஸ்தபாவின் ஏற்பாட்டில் கல்முனையில் நடைபெற்ற புலிகளுடனான பேச்சுவார்த்தை யையடுத்து இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தமிழீழ விடு தலைப் புலி கள் இயக்கத்தின் கிழ க்குப் பிராந்தி யத்தலைவர் கரிகாலனுடன் அமைச்சர் ஏ. ஆர். எம். ஏ. காதர் காணப்படுகின்றார்.
(படம்: அஸ்லம் எஸ். மௌலானா)

## அம்பாறையில் தொலைபேசி வசதி

(எம்.எம்.ஏ.ஸமட்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து கிழக்கு மாகாணத்திற்கு செலூலர் தொலைபேசி சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்திற்கு இத்தொலைபேசி சேவையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் உதவியோடு கல்முனையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் அம்பாறை மாவட்ட மக்களின் நெடுங்கால கையடக்க தொலைபேசி சேவையின்றிய குறை நிவர்த்தி செய்யப்படவுள்ளது. இவற்றினால் தொலைபேசி இணைப்பைப் பெறுவதற்காக விண்ணப்பித்து மாதக் கணக்கில் காத்திருக்கும் நிலைமையைத் தவிர்த்து, தமக்கு வேண்டிய நேரத்தில் கையடக்கத் தொலைபேசி வசதியைப் பெறுவதன் பயனாக, தொலைபேசி மூலம் அன்றாடம் மேற்கொள்ளும் தமது பணிகளை சிரமமின்றி நிறைவு செய்து கொள்ள முடியும் என செலூலர் தொலைபேசி பாவனை பெறுவதற்கு எதிர்பார்த்திருக்கும் பிரதேச மக்கள் நம்புகின்றனர்.

## இயங்காத மணிக்கூட்டுக் கோபுரம்

பதுளை நகரின் இரண்டு மணிக்கூட்டுக் கோபுரங்களும் இயங்காத நிலையிலுள்ளன. பதுளை பஸ் தரிப்பு நிலையத்திலும், முதியங்கன விகாரைக்கருகிலும் பொதுமக்களின் நலன் கருதி மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப்பட்டன. நீண்ட காலமாக இயங்காதிருக்கும் இரண்டு மணிக்கூட்டுக் கோபுரங்களின் மணிக்கூடுகளையும் திருத்தும்படி உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் அவை அப்படியே இருப்பதால் பொதுமக்கள் விசனமடைந்துள்ளனர்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டு - அம்பாறை தலைமைச் செயலகம் திறப்பு

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டு - அம்பாறை மாவட்டங்களுக்கான தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைமையகம் இக்கழகத்தின் இணைச் செயலாளர் பூ.கோபாலசிங்கம் தலைமையில் மட்டக்களப்பு மகிழடி வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

திருமலை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஈகைச் சுடரினை ஏற்றி வைக்க நாடாவினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்பு அரசியற் பொறுப்பாளர் கரிகாலன் காரியாலயத்தின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

மட்டு, மாவட்ட அரச அதிபர் எஸ். சண்முகம் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் றெஜி மட்டு - அம்பாறை மாவட்டங்களில் மேற்கொண்ட பல்வேறுபட்ட கலந்துரையாடல்களின் பின்னரே இவ்வலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## ஒலி நாடாக்கள் வெளியீட்டு விழா




அம்புறோஸ் பீற்றர் எழுதிய "திருப் பாடல்கள்" ஒலி நாடாக்களின் (பாகம் 4, 5, 6) வெளியீட்டு விழா இம்மாதம் 22ம் திகதி பி.ப.4.30 மணிக்கு மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தின் பேரில் சாள்ஸ் மண்டபத்தில் கிழக்கிலங்கை பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.எஸ். மூக்கையா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்வொலி நாடாக்களின் இசையமைப்பை பிரபல கிறிஸ்தவ இசையமைப்பாளர் ஏ.ஜே.பொஸ்கோ அவர்கள் செய்துள்ளார். தென்னிந்தியப் பாடகர்களான கிருஷ்ணராஜ், .'.பெபிமணி போன்ற முன்னணிப் பாடகர்களின் குரலில் இவ்வொலிநாடாவின் பாடல்கள் ஒலிக்கின்றன.

ஊர்மிளா களம்

# டும்... டும்... டும்...
# பொதுத் தேர்தல் வரப் போகிறது!

யுத்தத்தினால் பொருளாதாரச் சீர்கேடடைந்திருக்கும் இலங்கை இன்னொரு தேர்தலைச் சந்திக்கும் அரசியல் சூழ்நிலை உருவாகி வருகிறது.

புதிய அரசாங்கம் பதவியேற்ற டிசம்பர் 5ம் திகதிக்குப் பின் எந்த நேரமும் அரசாங்கத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அதற்கு முன் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் பகீரத முயற்சியில் இறங்கிய அரசாங்கம் தோல்வியையே சந்தித்தது.

பிரதமர் ரணில் தலைமையிலான அமைச்சரவையைக் கலைத்துவிட்டு, கதிர்காமர் தலைமையிலான புதிய அமைச்சரவையை நியமிக்க பொதுஜன ஐக்கிய முன்னணி திட்டம் தீட்டியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கைவிட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அந்தக் குற்றச்சாட்டை உடனடியாக மறுத்தது. பின்னர் மாற்று அரசாங்கத்தை அமைக்கும் முயற்சி சூழ்ச்சியல்ல என எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை விடுத்துள்ளார்.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் எதிரணி உறுப்பினர்களைத் தம் வலையில் சிக்க வைக்க திரைமறைவில் பெரும் முயற்சிகள் செய்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி அரசைக்கலைக்கு முன் புதிய பொதுத்தேர்தலைச் சந்தித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கலாம் என ஐக்கிய தேசிய முன்னணி கணக்குப் போடுகிறது.

நாட்டுப்பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை எல்லாவற்றையும் ஒருபுறம் வைத்துவிட்டு தேர்தலைச் சந்திக்க அரசியல் கட்சிகள் அனைத்தும் கச்சை கட்டி நிற்கின்றன.

இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கை அரசியல் அதிகார மாயவலைக்குள் சிக்கித்திணறுகின்றது. மக்கள் ஆணை ஒரு புறமும், நிறைவேற்று அரசியல் அதிகாரம் இன்னொருபுறமும் நின்று தமது சுயரூபத்தை வெளிக்காட்ட ஆயத்தமாகியுள்ளன.

1978ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவியேற்றார். அவரைத் தொடர்ந்து ஆர்.பிரேமதாஸ ஜனாதிபதியானார். பிரேமதாஸாவின் அகால மரணத்தின்பின் டி.பி.விஜயதுங்கவுக்கு ஜனாதிபதி பதவி இலவச இணைப்பாகக் கிடைத்தது.

ஜே.ஆர் காலத்திலிருந்து டி.பி.விஜயதுங்க காலம் வரை ஜனாதிபதியிடம் உள்ள அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குரலெழுப்பிவந்தது. ஐக்கியதேசியக் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகள் அனைத்தும் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி இலங்கைக்குத் தேவை இல்லை என்றே முழக்கமிட்டுவந்தன.

1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியானதும் தூக்கத்திலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி கண்விழித்து நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிய வேண்டும் எனக் கோஷம் எழுப்பியது.

1994ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும், வேட்பாளர்களும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அபரிமிதமான அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டும் எனப் பிரச்சாரம் செய்தன. சகலநிறைவேற்று அதிகாரங்களுடனும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க பவனி வந்தார்.

1999ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெற்றி பெற்று, மீண்டும் ஜனாதிபதியானார். 2001ம் ஆண்டுப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தபின்னர்தான் இலங்கையின் அரசியல் பற்றி பொதுமக்கள் அறியக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஜனாதிபதியும், அரசாங்கமும் ஒரே கட்சியாக இருந்தால் எந்தக் குழப்பமும் இல்லை. ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் அரசாங்கம் இன்னொரு கட்சியாகவும் இருந்தால் ஏற்படும் அரசியல் சிக்கல்கள் எப்படிப்பட்டதென்பதை இன்றைய நிலை துல்லியமாக வெளிக்காட்டுகிறது.

ஐக்கியதேசியக் கட்சி ஜனாதிபதி 16வருடங்கள் அதிகாரத்தில் இருந்தபோது இனிப்பாக இருந்த ஜனாதிபதிப் பதவி 1996ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியின் கைகளுக்குப் போனபின் வேம்பாகக் கசக்கத்தொடங்கியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கையில் இருந்தபோது சர்வாதிகாரமாகத் தெரிந்த ஜனாதிபதிப் பதவி கைக்கு வந்தபோது அதனை அனுபவிக்கத் துடிக்கிறது பொதுஜன ஐக்கிய முன்னணி.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியமுன்னணி ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமென்பதில் விடாப்பிடியாக நிற்கிறது.

ஆனால் ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரங்கள் எவை என்பதைப் பட்டியலிட்டுக் காட்டுவதில் குறியாக இருக்கிறார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடைபெற வேண்டிய பேச்சுவார்த்தை எப்போது ஆரம்பமாகும் எனத் தெரியாது குழம்பிப் போயுள்ள நிலையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு அடிக்கடி முட்டுக் கட்டை போடும் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்பதை விரும்புகிறார்.

பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக அறிக்கை விடும் பிரதமர் பேச்சுவார்த்தை நடைபெறுவதை விரும்பவில்லை.

பேச்சுவார்த்தையின் போது பிரதமர் முன்வைக்கும் திட்டங்கள் இலங்கையின் ஒற்றை ஆட்சிக்கும் இறைமைக்கும் முரணானது எனக் காரணம் காட்டி அரசைக் கலைக்கும் சந்தர்ப்பம் ஜனாதிபதிக்கு உண்டு.

ஜனாதிபதியின் கையில் அதிகாரம் இருக்கும் வரை பேச்சுவார்த்தையை சுமுகமான முறையில் கொண்டு செல்ல முடியாது என்பது பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் தெரியாமலில்லை. பேச்சுவார்த்தை மேசையில் வைக்கப்படும் தீர்வுகளில் சிங்கள மக்களின் சுதந்திரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் சரத்துக்களை மக்கள் முன்வைத்து அரசைக் கலைக்கும் சூழ்நிலையும் ஏற்படலாம்.

விகிதாசாரத் தேர்தல் முறையினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதென்பது முடியாத காரியம். விகிதாசாரத் தேர்தல் முறை இருக்கும் வரை தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவுடன் தான் ஆட்சியமைக்க வேண்டும் என்ற உண்மையையும் சிங்களக் கட்சிகள் கசப்புடன் ஏற்றுக் கொள்கின்றன.

தமிழ், முஸ்லிம் கட்சிகள் போடும் தாளங்களுக்கெல்லாம் ஆடவேண்டும். அப்படி ஆடாது போனால் அவைகள் ஆதரவை விலக்கிவிடும். அவைகளின் ஆதரவு இல்லையென்றால் அரசாங்கம் வீழ்ந்து விடும் என்பதைக் கடந்த காலங்களில் சிங்களக் கட்சிகள் பட்டறிந்துள்ளன.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமென்பது ஐக்கிய தேசிய முன்னணியின் நோக்கம். சகல அதிகாரங்களுடனும் 2005 ம் ஆண்டு வரை பவனி வரவேண்டும் என்பது ஜனாதிபதியின் விருப்பம்.

விகிதாசாரத் தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும் என்று சிங்களக் கட்சிகள் விரும்புகின்றன. விகிதாசாரத் தேர்தல்முறை இருக்க வேண்டும் என்பது தமிழ், முஸ்லிம் கட்சிகளின் விருப்பம். ஏறச் சொன்னால எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்ற நிலையிலேயே இலங்கை அரசியல் உள்ளது.

புதிய பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஐக்கிய தேசிய முன்னணிக்குக் கிடைக்காது போனால் இலங்கை அரசியல் மீண்டும் திரிசங்கு நிலைக்குத் தள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை.

பொதுத் தேர்தல் நடைபெற்றால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அதிக உறுப்பினர்களைப் பெற தமிழ்க்கட்சிகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் பெரும் போராட்டத்தில் இறங்கும் நிலை ஏற்படும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்க்கட்சியுடன் போட்டி போட்டு தனது அங்கத்தவர்களைக் கூட்ட வேண்டிய இக்கட்டான நிலையிலுள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு எதிராகக் கட்சிக்குள் சக்திமிக்கவர்கள் இருப்பதால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மிகுந்த அவதானத்துடன் களமிறங்கும்.பொதுஜனஐக்கிய முன்னணிக்குள் கோஷ்டிப் பூசல்கள் அதிகரித்துள்ளன. அரசியல்வாரிசுகளுக்கும், கட்சி விசுவாசிகளுக்கும் இடையே பாரிய பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறுவது அநேகமாக உறுதியாகிவிட்டது. புதிய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மக்கள் தலையில் சுமத்தப்படப்போகிறது.

யுத்த நிறுத்தம், சமாதான ஒப்பந்தம், இயல்பு வாழ்க்கை என்பன ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்குகளை அதிகரிக்கும் அஸ்திரங்களாக இருந்தாலும் விலைவாசி உயர்வு எதிர்க்கட்சியின் பிரதான அஸ்திரமாக இருக்கும்.

இந்நிலையில் பொதுத் தேர்தல் நடந்தால் அதன் முடிவுகள் 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற நிலையிலேயே இருக்கும்.

## பிந்திய நிலைவரம்

*அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக பொதுத் தேர்தல்கள் நடத்தும் எண்ணத்திற்கு அரசாங்கமும் எதிர்க்கட்சியும் முற்றுப் புள்ளி வைத்துள்ளன. கனவான் முறையிலான ஒப்பந்தம் மூலம் ஜனாதிபதியும் பிரதமரும் ஒத்துப் போகும் நிலைக்கு வந்துள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.*

*ஜனாதிபதியை அடிக்கடி சீண்டும் முக்கிய அமைச்சர்கள் சிலரை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கை எதிர்க்கட்சியால் விடுக்கப்பட்டுள்ளது. சக அமைச்சர்களைக் கைவிட விரும்பாத பிரதமர் அடக்கி வாசிக்கும்படி அவர்களுக்கு அறிவுரை கூறியுள்ளார் என அறியப்படுகிறது.*

*இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்திற்கு சுமுகமான முறையில் ஒத்துழைப்புக் கொடுத்தால் சர்வதேச அரங்கில் பொறுப்பான பதவி வழங்கப்படும் என ஜனாதிபதிக்கு அமெரிக்கா தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த செயலாளர் ஆசியாவிலிருந்தே தெரிவு செய்யப்பட வேண்டும். 2005ம் ஆண்டின் பின் ஜனாதிபதி இலங்கை அரசியலில் ஈடுபட சட்டம் இடமளிக்காது. ஜனாதிபதி பதவியின் பின் உலக அரங்கில் மிளிரும் எண்ணம் ஜனாதிபதிக்கு உண்டு என விசயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

# புலிகளின் பொறுமை சோதிக்கப்படுகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்திய அரசாங்கம் அடுத்து என்ன செய்வதென்று தெரியாத நிலையில் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

யுத்தத்தில் மோகம் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியான உடன்பாட்டுக்கு வரமாட்டார்கள் என்ற கருத்துக்குப் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் புலிகள் முற்றுப் புள்ளி வைத்தனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 30,60,90,160 நாட்களில் அரசும் புலிகளும் கட்டம் கட்டமாக செய்ய வேண்டிய பணிகள் எவை என விதந்துரைக்கப் பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளவற்றை குறித்த கால எல்லைக்குமுன் கச்சிதமாகச் செய்து முடித்துள்ளனர். அரசாங்கம் பெருத்த இழுபறியின் பின்னர் சிலவற்றை முடித்துள்ளது. இன்னும் சிலவற்றை முடிப்பதற்குரிய ஒத்துழைப்பைப் படைத்தரப்பு வழங்க மறுத்து வருகிறது.

ஜனாதிபதியின் அரசியல் அழுத்தங்களுக்கும், எதிர்க்கட்சிகளின் விசமப் பிரச்சாரங்களுக்கும் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது அரசாங்கம் திணறுகிறது.

தலைவரின் பணிப்புரைக்குக் கீழ்படிந்து நடக்கும் பாங்கை தமிழீழ விடுதலைப்புலிகள் பெற்றுள்ளனர். சமாதானம் ஏற்படக் கூடாது என்ற எண்ணமுள்ள சக்திகள், இனவாத அரசியல் குழுக்கள், இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆகிய பலரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து கருமமாற்ற வேண்டிய சூழ்நிலையில் அரசாங்கம் உள்ளது.

யுத்தத்தால் அவலமான மக்களின் வாழ்வு வளம் பெற வேண்டும் என்ற எண்ணம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருப்பதால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளனர்.

அமைதி, சமாதானம், யுத்தநிறுத்தம் என்ற வார்த்தைகளுடன் காலத்தைக் கடத்தும் அரசாங்கம் இன்னும் தெளிவான நிலைப்பாட்டுக்கு வரவில்லை. உள்நாட்டில் சமாதானத்துக்காக உரத்துக் குரல் கொடுக்கும் பிரதமர் அமெரிக்காவில் புலிகளைக் கடுமையாகச் சாடியிருக்கிறார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடுத்தக்கட்ட நடவடிக்கைக்காக புலிகள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கமோ புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளவற்றை நிறைவேற்ற முடியாமல் தவிக்கிறது.

யுத்தம் ஒன்று வருவதற்கான ஏதுநிலை இல்லை என்றே அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தெரிவித்து வருகின்றன. யுத்தம் மீண்டும் ஆரம்பமானால் அரசாங்கத்தையே உலக நாடுகள் குற்றம் சாட்டும்.

மூதூரில் ஆரம்பித்து கிழக்கு வரை வியாபித்த வன்செயல்களுக்குப் புலிகள்தான் காரணம் என ஒருசிலர் குற்றம் சாட்டினர். சமாதான எதிரிகளின் சூழ்ச்சியில் கிழக்கு மக்கள் அகப்பட்டதுதான் அச்சம்பவங்கள் வளர்ந்ததற்கு முக்கிய காரணம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள வாசகங்களுக்கு அமைவாக பாடசாலை, ஆலயம், பொதுக்கட்டடங்களில் இருந்து இராணுவம் வெளியேறியது. அதே வேளை அவற்றுக்கருகிலேயே முகாமிட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்வுக்கு இராணுவம் மிகுந்த சிரமத்தைக் கொடுத்து வருகிறது.

நாட்டைப் பாதுகாக்கவும், ஆபத்திலிருந்து மக்களை விடுவிப்பதற்குமே உலகின் பல இராணுவங்கள் முன்னுரிமை கொடுத்து வருகின்றன. நாட்டு வளங்களைச் சின்னா பின்னப்படுத்துவதிலும், மக்களை அச்சமடைய வைப்பதிலுமே இலங்கை இராணுவம் குறியாக உள்ளது.

யுத்தகாலத்தில் கண்மூடித்தனமான விமான, ஷெல் குண்டு வீச்சுகளினால் வடக்கு கிழக்கின் வாழ்விடங்களும், பொருளாதார வளங்களும் அழித்து ஒழிக்கப்பட்டன. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் அமைதியான சூழ்நிலையில் தென்மராட்சி, மன்னார் பகுதிகளில் உள்ள தென்னை, பனை என்பனஇராணுவத் தேவைகளுக்காக கபளீகரம் செய்யப்படுகின்றன. தென்மராட்சி மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்குக் காரணமாக இருந்த தென்னஞ் சோலைகள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்படுகின்றன. மன்னாரில் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான பனை மரங்கள் அனுமதியின்றி வெட்டிச் சாய்க்கப்பட்டன.

வடக்கின் வளங்களை இல்லாமல் செய்வதற்குப் புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசபடைகள் பயன்படுத்துகின்றன. ஒரு பிரச்சினைக்கு முடிவு வரும் என மகிழ்ச்சியுடன் மக்கள் இருக்கையில் இன்னொரு புதிய பிரச்சினை தலையெடுக்கத்தொடங்கியுள்ளது.

சமாதானத்திற்காகப் பல தியாகங்களுடனும் காத்திருக்கும் புலிகளின் பொறுமை அரசாங்கத்தினாலும் எதிர்க்கட்சியினாலும் படைத்தரப்பாலும் சோதிக்கப்படுவதாகவே மக்கள் எண்ணுகின்றனர். புலிகளின் பொறுமை எல்லை கடக்குமிடத்து ஏற்படும் விளைவுகள் பயங்கரமானவையாகவே இருக்கும்.

மேடை

எம்.ஏ.மாறன்

# அனல் பறக்கும் மூன்று கேள்விகளும் அரசியல்வாதிகளின் அதிரடி பதில்களும்

**நா**ட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக மூன்று அனல் பறக்கும் கேள்விகளை பத்து அரசியல்வாதிகளிடம் கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லி மிரர் நாளிதழ் முன்வைத்தது. மூன்று கேள்விகளுக்கு பத்து அரசியல்வாதிகள் வழங்கிய வெவ்வேறு விதமான விளக்கங்கள் இங்கு தரப்படுகின்றன.

**கேள்விகள்:~**


**(01) ஐக்கிய தேசிய முன்னணியின் சமாதானத்துக்கான நடவடிக்கைகள் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

**(02) அரசும் புலிகளும் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதைத் தடுக்கும் தடைகள் எவை?**

**(03) ஜனாதிபதிக்கும் ஐ.தே.மு அரசுக்கும் இடையில் நிலவும் உறவு பற்றிய உங்கள் கருத்து என்ன?**


ரவூஃப் ஹக்கீம்


ஆர்.சம்பந்தன்


சித்தார்த்தன்


விமல் வீரவன்ச


பி.பி.தேவராஜ்


பிரேமச்சந்திரன்

### ரவி கருணாநாயக்க

*வர்த்தக வாணிபத்துறை அமைச்சர்*

(01) யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டு $5^1/_2$ மாதங்கள் கடந்துவிட்டன. உடன்படிக்கையின் படி யுத்தநிறுத்தம் அமுலில் இருக்கிறது. யுத்த நிறுத்தம் 100% ஒழுங்காக நடைமுறையில் உள்ளது என்று கூறமுடியாது. அப்படி ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. எப்படியாயினும் சமாதானத்துக்கான நடவடிக்கைகள் 95% - 98% வெற்றிப்பாதை நோக்கிப் போகிறது எனலாம்.

(02) சமாதான நடவடிக்கைகளில் நான் நேரடியாகப் பங்குபெறாதவன் என்பதால் அதன் தற்போதைய நிலை பற்றிய தெளிவான கருத்து எனக்குத் தெரியாது. பேச்சுவார்த்தை தாமதமானாலும் இன்னும் அதற்கான திகதி ஒன்று குறிப்பிடப்படாமல் இருந்தாலும் அதற்கான நம்பிக்கை நிறையவே இருக்கின்றது.

(03) ஜனாதிபதிக்கும் ஐ.தே.மு அரசுக்கும் இடையிலான உறவு சுமுகமானதாக இல்லை என்பது கவலைக்குரிய விடயம். ஐ.தே.மு அரசு ஆட்சிக்கு வந்த நாள் முதல் இதே நிலைமைதான். ஜனாதிபதிக்கும் அரசுக்குமான அதிகாரப் பிரச்சினை இருந்து வருகிறது. அரசாங்கம் என்ற வகையில் நாம் உண்மையை உரைக்கக் கடமைப்பட்டுள்ளோம். இந்த சுமுகமான உறவற்ற நிலைக்கு தனியொரு நபர் சமாதான நடவடிக்கைகள் குறித்து எதிர்மறையான கொள்கைகளைக் கொண்டிருப்பதே காரணமாகும்.

### மகிந்த ராஜபக்ஷ

*எதிர்க்கட்சித் தலைவர்*

(01) பொ.ஐ.மு அரசாங்கம் அமைத்த பொழுது தொடங்கிவைக்கப்பட்ட சமாதான முயற்சிகளின் தொடர்ச்சியைத்தான் நோர்வே அரசின் உதவியுடன் ஐ.தே.மு செய்துகொண்டிருக்கிறது. தற்போது சமாதான முன்னெடுப்புகள் பாதி வழியைத்தான் கடந்துள்ளது. உலக வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நன்றாக முன்னெடுத்து செல்லப்பட்ட சமாதான நடவடிக்கைகள் ஏதோ ஒரு தரப்பினரின் நேர்மையின்மையால் முறிவடைந்துள்ளன.

(02) சரியான முன்னேற்பாடுகள் இல்லாமைதான் காரணம். புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் செய்யப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையில் பேச்சுவார்த்தைக்கான ஒரு அட்டவணையும் போடப்பட்டிருக்கவில்லையே!

(03) ஜனாதிபதி நாட்டின் தலைவர். அவரது உரிமைகள் சில சமயங்களில் அரசாங்கத்தினால் மீறப்படுகின்றன. சில விடயங்களில் அரசாங்கம் ஒன்றுக்கு இருமுறை சிந்தித்து செயற்பட வேண்டும்.

### ஆர்.சம்பந்தன்

*பொதுச் செயலாளர், தமிழர் விடுதலைக் கூட்டணி*

(01) அரசின் சமாதான நடவடிக்கைகள் சரியான வழியில் சென்று கொண்டிருக்கிறது. அதன் முன்னேற்றத்தில் எவ்வித சந்தேகங்களும் இல்லை. யுத்த நிறுத்தம் ஆறுமாத காலம் நல்ல முறையில் அமுலில் இருப்பது நம்பிக்கையைத் தருகிறது. பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது தொடர்பாக புலிகளும் அரசும் தகவல்களைப் பரிமாறிக் கொண்டுதான் இருக்கின்றன. மொத்தத்தில் சமாதான முன்னெடுப்புகள் நம்பிக்கையளிக்கின்றன.

(02) யுத்த நிறுத்த உடன்படிக்கையின் சில நிபந்தனைகள் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தடையாக உள்ளது. வடக்கு வாழ் தமிழர்களின் வாழ்க்கை முறை நாட்டின் மற்ற பாகங்களோடு ஒப்பிடுகையில் முன்னேற்றம் குறைந்ததாகவே இருக்கிறது. இடம்பெயர்ந்த தமிழர்கள் இன்னும் தம் சொந்த இடத்தில் குடியேற முடியாத சூழ்நிலை உள்ளது. இப்படிப்பட்ட சில பிரச்சினைகள் அரசால் தீர்த்து வைக்கப்பட்டால் பேச்சுவார்த்தைக்கான தடைகள் நீங்கலாம்.

(03) ஜனாதிபதிக்கும் அரசுக்கும் சுமுகமான உறவு இல்லையென்றால் சமாதான நடவடிக்கைகள் மட்டுமன்றி பொருளாதாரமும் மிக மோசமான நிலையை அடையும். தற்போதைய முறுகல் நிலைகள் தளர்த்தப்பட்டு நாட்டின் தேவைகளுக்கே இருதரப்பும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

### அமைச்சர் ரவூஃப் ஹக்கீம்

*ஸ்ரீ.ல.மு.கா தலைவர்,*

(01) யுத்த நிறுத்த உடன்படிக்கையின் சில நிபந்தனைகளை LTTE நிறைவேற்றத் தவறியதால் சமாதானத்தை முஸ்லிம் மக்களால் சந்தோஷமாக எதிர்பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொடரும் அசம்பாவிதங்களால் கிழக்கில் தமிழ் முஸ்லிம்களுக்கிடையிலான உறவு பாதிப்படைந்துள்ளது. இந்நிலையை சீர்படுத்த புலிகள் இதுவரை எதுவித நடவடிக்கை யையும் எடுக்கவில்லை.

(02) வடக்கு கிழக்கில் புலிகளால் யுத்த நிறுத்த ஒப்பந்த நிபந்தனைகள் மீறப்படுதலும், தெற்கில் அதிகாரப் பிரச்சினையுமே தடைகள்.

(03) ஸ்ரீ.ல.மு.கா எப்போதும் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையில் நல்ல புரிந்துணர்வொன்று இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. மக்களின் தேவைக்கேற்ப அரசால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதிகாரத் தரப்பினால் அமுக்கப்பட்டிருக்கின்றன.

### விமல் வீரவன்ச – JVP

(01) அரசு நிலையற்றதொரு தன்மையில் இருக்கின்றது. அரச தரப்பிலிருந்து எதிர்க்கட்சிக்குத் தாவவும் பலர் தயாராக இருப்பதாகத் தெரிகிறது. அரசு புலிகளின் முன்னால் சமாதானத்துக்காக மண்டியிட்டுள்ளது. இது அவர்களின் இயலாமையைக் காட்டுகின்றது.

(02) புலிகள் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவது, யுத்த நிறுத்தம் சரியான முறையில் அமுலில் இல்லாதது, அரச நிறுவனத்தின் கோட்பாடுகளை சிதைத்தது போன்றவையே தடைகள்.

(03) அதிகாரப் பிரச்சினையை சில அமைச்சர்கள் பெரிதுபடுத்திக் காட்ட முயற்சித்து விடுகின்றனர். அரசின் பல நிறுவனங்களை தனியார்மயப்படுத்த பிரதமர் முயன்றபோது அதைத் தடுக்கும் அதிகாரம் இருந்தும் ஜனாதிபதி அதைத் தடுக்கவில்லையே?

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

EPRLF *(தலைவர் சுரேஷ் அணி)*

(01) ஒப்பந்தப்படி இராணுவம் பாடசாலைகள், கோயில்கள் மற்றும் பொது கட்டடங்களை விட்டு விரைவில் வெளியேறினைப் பேச்சுவார்த்தை தாமதமின்றித் தொடங்கும். இராணுவமும் , ஜனாதிபதியும் அரசுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினால் சமாதானத்தை நோக்கிய இலக்கை விரைவில் அடைந்துவிடலாம்.

(02) சமாதான ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் அரசால் அமுல்படுத்தப்பட்டால் பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கும்.

(03) இருவரும் சேர்ந்து தான் தமிழரின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அதைவிட்டு ஒருவரை ஒருவர் குறைகண்டு கொண்டிருப்பது நல்லதல்ல. ஜனாதிபதி ஒரு தலைவரைப் போன்று செயற்படவேண்டுமேயொழிய ஒரு நடிகையைப் போல நடக்கக்கூடாது.

### பி.பி.தேவராஜ்

*இ.தொ.மு*

(01) கண்காணிப்புக் குழுவினர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி அரசு, புலிகள் இருவரும் நல்லமுறையில் நடந்து கொள்வதாகக் கூறியுள்ளனர். சமீபத்தில் அமைச்சர் மிலிந்த மொறகொட திரு.அண்டன் பாலசிங்கத்தைச் சந்தித்து நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தியது புதிய நம்பிக்கையைத் தந்துள்ளது.

(02) புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிபந்தனைகள், கிழக்கில் முஸ்லிம்களின் பிரச்சினை, ஜனாதிபதியின் ஒத்துழைப்பு போன்றவை பேச்சுவார்த்தைகளைத் தாமதப்படுத்துகின்றன.

(03) இரு தரப்பினரும் ஒரு புரிந்துணர்வுடன் நடக்க வேண்டும்.

### திலக் கருணாரட்ன

*தலைவர், சிஹல உருமய*

(01) அரசு, புலிகளுக்கு ஈழம் ஒன்றை ஏறக்குறைய வழங்கிவிட்டது. அதில் புலிகள் தமக்கான நிருவாகத்தையும் நடத்திவருகின்றனர். இந்நிலையிலேயே பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

(02) புலிகளே முதலாவது தடை. அவர்கள் பல சந்தர்ப்பங்களில் நேர்மையாக நடந்துகொள்ளவில்லை. புலிகள் முன் ரணில் மண்டியிட்டு பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் போதும் புலிகள் அதுபற்றிப் பெரிதாக அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

(03) நாட்டை சரியான முறையில் கொண்டு செல்ல இரு தரப்புக்கும் இடையில் நல்ல உறவு இருப்பது அவசியம். ஜனாதிபதியின் அதிகாரத்தில் ரணில் பங்கு கேட்பது நியாயமல்ல.

### D.சித்தார்த்தன்

*தலைவர், புளொட்*

(01) யுத்தம் இல்லாத காரணத்தால் சமாதானம் வந்துவிட்டது என்று கூறமுடியாது. அரசியல் தீர்வொன்று விரைவில் காணப்படும் பொருட்டு விரைவில் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும்.

(02) புரிந்துணர்வு உடன்படிக்கையின் நிபந்தனைகள் சரியாக நிறைவேற்றப்படாமையே தடைக்கல்லாக உள்ளது.

(03) ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் இல்லாமாக்கப்பட்டாலேயொழிய அரசுக்கும் ஜனாதிபதிக்கும் சுமுகமான உறவு இருக்காது.

### Dr.N.குமரகுருபரன்

*பொதுச் செயலாளர் (அ.இ.த.கா)*

(01) பொதுவாக நோக்கும்போது மகிழ்ச்சிகரமாக இருந்தாலும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் அரசு சற்று கவனம் செலுத்தவேண்டும்.

(02) அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றாமையே பிரதான தடை.

(03) ஜனாதிபதிக்கும் அரசுக்குமிடையில் நிலவிவரும் கருத்து வேறுபாடுகள் இனப்பிரச்சினைத் தீர்வில் சிக்கல்களை எழுப்பலாம். தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் என்ற வகையில் சிங்கள தலைவர்கள் தமிழரின் அபிலாஷைகளைப் புரிந்து நடக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

தமிழில் :
ஏ.டிரோன்

நன்றி : டெயிலி மிரர்

# முஸ்லிம் காங்கிரஸ் சம்பியனாக முயற்சித்திருக்கிறது

## ஐக்கிய தேசிய முன்னணி எம்.பி மயோன் முஸ்தபா

**புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதனைத் தொடர்ந்துள்ள நிலைமைகளும் பற்றி அம்பாறை மாவட்ட கல்முனையைச் சேர்ந்தவர் என்ற வகையிலும், ஐ.தே.மு. பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் நீங்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள்?**

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் முஸ்லிம்களிடம் ஓர் அதிருப்தி காணப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் பற்றி ஒன்றுமே இல்லை என்பது பற்றியும் முஸ்லிம்களை முஸ்லிம்கள் என்று சொல்லாமல் குழுக்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது பற்றியும் முஸ்லிம் மக்கள் அதிருப்தியுடனேயே அந்த ஒப்பந்தத்தை நோக்கினர். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் தலைவரை பல தடவைகள் சந்தித்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் எம்.பி.மார்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒரு கூட்டத்தைக் கூட்டுங்கள். இதுபற்றி நாம் பேசுவோம் என்று கூறினேன். ஆனால் அவர் அப்படியொரு கூட்டத்தைக் கூட்டவில்லை. இறுதியாக அமைச்சர் எம்.எச்.முஹம்மதுவிடம் நீங்களாவது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் சேர்த்து ஒரு கூட்டத்தைக் கூட்டுங்கள் என்று சொன்னேன். உடனே அவர் அப்படியான ஒரு கூட்டத்தைக் கூட்டினார். எல்லா முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எம்.எச்.முஹம்மதே அழைப்பிதழ்களை அனுப்பினார். அந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான எம்.எச்.முஹம்மத், ஏ.ஆர்.எம்.ஏ. காதர், பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம். பௌஸி ஆகியோர் இணைத் தலைவர்களாகவும், ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முகிதீன் அப்துல் காதருடன் நானும் இணைச் செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டோம். அதன் பின் இருவாரங்களாக நோர்வே தூதரக உயர் அதிகாரி, கண்காணிப்புக் குழுத் தலைமையகப் பொறுப்பதிகாரி, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற பல்வேறு தரப்பினருடனும் பல சந்திப்புக்களை ஏற்படுத்தினோம். பிரதமர் ரணிலையும், நோர்வே தூதுவரையும் சந்திக்க முயற்சித்தும் முடியாது போய்விட்டது. இவ்வாறு நாங்கள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து ஓர் அமைப்பாக இயங்கத் தொடங்கிய விடயம் வெளிவந்த போதுதான், புலிகள் தாங்கள் முஸ்லிம் தலைவர்களுடன் பேசுவதற்குத் தயார் என்று அறிக்கை விட்டார்கள். அதுதான் பின்னர் முஸ்லிம் காங்கிரஸாக மாறியது. அதுவரை ஹக்கீமின் 46 பக்க கடிதத்திற்கு ஒரு வரிதானும் பதில் கூறாத பிரபாகரன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓர் அமைப்பாக செயற்படத் தொடங்கிய பின்னர்தான் முஸ்லிம் தலைவர்களை சந்திப்பதில் ஆர்வம் காட்டினார் என்பதே உண்மை.

பிரபாகரன் - ஹக்கீம் சந்திப்புக்கான ஏற்பாட்டை பிரதமர் ரணிலும் நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேக்கும் இணைந்து செய்தனர். இதுபற்றி என்னிடம் ஹக்கீம் கூறிய போது, அமைப்போடு பேசுங்கள் என்றேன். ஆனால் அவர்கள் எமது அமைப்பைச் சந்திக்காமல் தாங்களே பிரபாகரனைச் சந்திக்கச் சென்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அந்தச் சந்திப்புப் பற்றி இதுவரை எமது அமைப்பிடம் ஒன்றுமே சொல்லவில்லை.

பிரபாகரனுடனான சந்திப்புக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கட்சிகளிலிருந்தும் சென்றால் தான் நல்லது. ஆனால், ஹக்கீம் தரப்பினரோ தாங்கள் தான் முஸ்லிம் சமூகத்தின் ஏக பிரதிநிதிகள் என்ற வகையில் தனியாகச் சென்றார்கள். ஒப்பந்தமும் செய்து கொண்டார்கள். ஆனால் அந்த ஒப்பந்தத்தில் நிறைய தவறுகள் ஏற்பட்டுவிட்டன.

ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் 12 பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு தாங்களே முஸ்லிம் சமூகத்தின் ஏக பிரதிநிதிகள் என்று காரியமாற்றுகின்றது. இது விபரீதமான விளைவுகளையே ஏற்படுத்தும். ஐக்கிய தேசிய முன்னணியின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் இருக்கிறோம்.

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்த சூழலில் எப்படி வந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

**(குறுக்கீடு) அப்படியானால் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸிற்கு இனப்பிரச்சினை விவகாரத்தில் முக்கிய பங்கு இல்லையென்று சொல்கிறீர்களா?**

இல்லை; அப்படிச் சொல்லவில்லை. இந்த விவகாரத்தில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸுக்கு முக்கிய பங்கு உண்டு. அந்த முக்கியப் பங்குடன் எல்லா முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு, அவர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு, முஸ்லிம் புத்திஜீவிகளின் கருத்துக்களையும் கேட்டுக் கொண்டு, உலமாக்களையும் இணைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினையில் இறங்கியிருந்தால் நல்ல பலன் கிடைத்திருக்கும். அது மட்டுமல்ல; முஸ்லிம்களில் 2/3 பேர் வடகிழக்கிற்கு வெளியே வாழ்கின்றார்கள். அவர்களின் ஆதரவும் நமக்குத் தேவை! வடகிழக்கு, முஸ்லிம்களினதும் தாயகமென்று சொல்லும் போது "அப்படியானால் நாங்கள் என்ன கள்ளத் தோணியா?" என்று அமைச்சர் அஸ்வர் போன்றோர் கேட்கின்றனர். இவ்வாறான விமர்சனங்கள் வராமலிருக்க வடகிழக்குக்கு வெளியே உள்ளவர்களையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

எம்.எச். முஹம்மதுக்கு நல்ல ஆளுமை இருக்கிறது. பிரதமரோடு மிக நெருக்கமானவர். ஏ.எச்.எம். பௌஸிக்கு சந்திரிகாவிடம் மதிப்பிருக்கிறது. எனவே, இவ்வாறானவர்களையும் சேர்த்துக் கொள்வது நல்ல பயன்களைத் தருமென்றே கூறுகிறேன்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான ஒப்பந்தத்தின் பிறகு முஸ்லிம்களிடையே பல சந்திப்புக்களை ஏற்படுத்தி பிரச்சினைகளை ஸ்ரீ.ல.மு.கா. அலசி ஆராய்ந்திருக்குமானால் வாழைச்சேனை - மூதூர் போன்ற இடங்களில் நடந்த அனர்த்தங்களைக் கூட தவிர்த்திருக்க முடியும்.

மூதூர் - வாழைச்சேனைப் பிரச்சினைக்குப் பிறகு ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் காரர்கள். அங்கு போனார்கள். பார்த்தார்கள். நாங்களும் முஸ்லிம் எம்.பிகள் தானே? எனவே, அரசாங்கத்திற்கு முஸ்லிகளின் பாதுகாப்பு உரிமை போன்றவற்றில் ஓர் அழுத்தத்தைக் கொடுப்பதற்காக இரு அமைச்சர்களையும் அழைத்துக் கொண்டு நாங்களும் அங்கு போனோம். எதிர்பாராத விதமாக கரிகாலனிடமிருந்து அழைப்பும் வந்தது. தலைவர்கள் மட்டத்தில் ஒப்பந்தங்களிலிருந்தாலும், பிராந்திய மட்டங்களில் அடிக்கடி பேசிக் கொள்வது நல்லதல்லவா? அதுமட்டுமன்றி பஷீர் சேகுதாவூத் எம்.பி கூட முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் பொறுப்பெடுக்க முடியாது. ஏனைய கட்சிகளும் இருக்கின்றது என்று பேசியிருக்கிறார்.

கரிகாலனுடனான எமது சந்திப்புக்குப் பின்னர் பிரச்சினைகள் கொஞ்சம் கொஞ்சமாக முடிவுக்கு வந்துவிட்டன. மட்டுமன்றி, கல்முனையில் நடக்கவிருந்த ஒரு பெரிய அனர்த்தமும் எமது அந்தச் சந்திப்பினால் தவிர்க்கப்பட்டது.

எமது சந்திப்புப் பற்றித் தெரிய வந்த போது அது ஸ்ரீ.ல.மு.காங்கிரஸுக்குப் பிரச்சினையாகி விட்டது.

சமாதானம், புரிந்துணர்வு எல்லாமே அடிமட்டத்திலிருந்து வெளிவரவேண்டும். கிராம மட்டங்களில் அவை விவாதிக்கப்பட வேண்டும். ஸ்ரீ.ல.மு.காங்கிரஸும், புலிகளும் ஒப்பந்தம் செய்தபிறகு அந்த ஒப்பந்தம் பற்றியும், சமாதானம் பற்றியும், இன உறவுகள் பற்றியும் கிராம மட்டத்தில் பிரசாரங்களை மேற்கொண்டிருக்கலாம்.

அனர்த்தம் நடந்த பிறகு புலிகளைக் குற்றம் சாட்டினார்கள். ஆனால் இந்த அனர்த்தத்திற்குப் புலிகளே பொறுப்பு என்பதை மறுக்க முடியாது.

இந்த அனர்த்தத்தில் ஐந்தில் நான்கு பங்கு முஸ்லிம்களுக்கும் ஐந்தில் ஒரு பங்கு தமிழர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளன. தமிழ் மக்கள் எனப்படுவோர், புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள். எனவே, நடந்து முடிந்த அனர்த்திற்குப் புலிகள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

நாங்கள் தனியான ஓர் இனம். எங்கள் தாயகமும் வடக்கு கிழக்கு. அதில் சுதந்திரமாக, நிம்மதியாக வாழ எங்களுக்கு உரிமை உண்டு. எனவே, முஸ்லிம்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழக்கூடிய சூழலை உருவாக்குவது புலிகளின் கடமையாகும்.

பேச்சுவார்த்தைகளில், ஒப்பந்தங்களில் எவ்வளவுதான் பின்னடைவுகள் ஏற்பட்டாலும் தொடர்ந்து பேசவேண்டும். ஆனால், ஸ்ரீ.ல.மு. காங்கிரஸுக்கு தற்போது களைப்பு வந்துவிட்டது. அப்படியல்லாமல் சளைக்காமல் பேசவேண்டும். அதை விடுத்து இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டி தப்பான வழியிலேயோ இரு சமூகங்களுக்கிடையில் பிரச்சினைகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவோ கூடாது.

எங்களுக்குரிய நியாயமான உரிமைகள் முற்று முழுதாக நிராகரிக்கப்படும் என்று இறுதியாகத் தெரியும் பட்சத்தில் நாம் சும்மாயிருக்கவும் தேவையில்லை. அப்படியான ஒரு சூழல் ஏற்படும் பட்சத்தில் நாம் என்ன செய்வதென யோசிக்கலாம். அதற்கு இன்னமும் காலமிருக்கிறது.

**தற்போதும் முஸ்லிம் மக்களிடம் புலிகள் கப்பம் பெறுவதாகச் சொல்லப்படுகிறதே...**

எங்களுக்குள்ள ஆகப் பெரிய பிரச்சினை அதுதான். முஸ்லிம் காங்கிரஸ் - புலிகள் ஒப்பந்தத்திற்கு முன்னரும் புலிகள் முஸ்லிம்களிடம் கப்பம் பெற்றார்கள். ஆனால் அப்போது மீன் பிடிப்போரிடமிருந்து,வயலுக்குச் செல்வோரிடமிருந்து, வியாபாரிகளிடமிருந்து கப்பம் பெற்றதோடு முஸ்லிம்களைப் பலவந்தமாக கடத்தி வைத்துக் கொண்டும், கப்பம் பெற்றார்கள். ஆனால் ஆட்களைக் கடத்தி கப்பம் பெறுவது தற்போது 90 வீதம் குறைந்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பந்தத்தில் ஒரு மாபெரும் தவறைச் செய்து விட்டு வந்த நிற்கிறது. அதாவது வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை வெளியேறிய முஸ்லிம்கள் என்றுள்ள ஒப்பந்தத்தில் அது கையெழுத்து போட்டு விட்டு வந்திருக்கிறது. ஆனால் சகல முஸ்லிம்களையும் ஒன்றுசேர்த்து ஆராய்ந்து முஸ்லிம் காங்கிரஸ் இந்த ஒப்பந்தத்தை செய்திருக்குமானால் இந்தச் சரித்திரத் தவறு நடந்திருக்காது. இது முஸ்லிம் காங்கிரஸ் தான் மட்டும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்ற முயற்சி செய்ததால் வந்த வினை.

சமாதானம் நிரந்தரமாக இருக்க வேண்டுமானால் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள், ஆதங்கங்களை எல்லாம் உணர்ந்து, ஏற்கனவே உள்ள குறைபாடுகளை, மனக்கசப்புகளை நிவர்த்தி செய்து முஸ்லிம்களுடனான உறவைப் பலப்படுத்த வேண்டிய தேவை புலிகளுக்குள்ளது.

நாங்கள் முஸ்லிம்களைக் கோழைகளாகவோ, அடிமைகளாகவோ வாழச் சொல்லவில்லை. அப்படி வாழவும் கூடாது. ஆனால், தமிழ் - சிங்கள மக்களோடு எவ்வளவுக்கு இணங்கி வாழ முடியுமோ அவ்வளவுக்கு இணங்கி வாழுதல் அவசியமாகும்.

**அண்மையில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தலைவர் றவூஃப் ஹக்கீம் எவ்வித நிபந்தனையுமில்லாமல் கட்சியில் வந்து சேரும்படி உங்களுக்குப் பகிரங்க அழைப்பு விடுத்திருக்கிறாரே... இது பற்றி உங்கள் கருத்தென்ன?**



இப்படியொரு அழைப்பு பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்ததாகப் பலர் என்னிடம் சொன்னார்கள். நான் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கொள்கைகளுக்கோ, யாப்புக்கோ எதிரானவன் அல்ல. நான் ஏற்கனவே ஸ்ரீ.ல.மு.காவை விட்டு விலகியதற்குக் காரணம் அந்தக் கட்சி கொள்கை, கோட்பாடுகளிலிருந்து விலகிப் போனதுதான். அதனால்தான் தேசிய அமைப்பாளர் பதவியை இராஜினாமாச் செய்தேன். ஆனால் அங்கத்துவத்தை ராஜினாமா செய்யவில்லை. பின்னர் ஸ்ரீ.ல.மு.கா எனக்கெழுதிய ஒரு கடிதம் நெருக்கடியைத் தந்ததால்தான் அங்கத்தவர் பதவியையும் ராஜினாமா செய்தேன். அப்போது முஸ்லிம் காங்கிரஸின் முக்கியமானோர் யாரும் ஏன் நான் ராஜினமாச் செய்தேன் என்றோ ராஜினாமாவை வாபஸ் பெறுங்கள் என்றோ என்னிடம் கேட்கவில்லை. பின்னர் யூ.என்.பி.யில் சேர்ந்தேன். ஜனாதிபதித் தேர்தலையும் பயங்கரமான சூழலில் சந்தித்த பின்னர், 2000ம் ஆண்டில் வேட்பாளனாகவும் நியமிக்கப்பட்ட பிறகு, தற்போது ஹக்கீம் விடுத்திருக்கும் அழைப்புப் போல் அஷ்ரஃப் ஓர் அழைப்பை விடுத்திருப்பதாக அறிந்தேன்.

முஸ்லிம் காங்கிரஸ் தனது கொள்கைகள், கோட்பாடுகள் என்பவற்றைச் சரியாகப் பேணிக் கொண்டு, முஸ்லிம்களின் பாதுகாப்பு, உரிமைகளை பெற வேண்டுமென்பதுதான் எனது விருப்பம். ஆனாலும் தற்போது கட்சிக்குள் இருப்போர்களது தகுதிகள் பற்றியும், கொள்கைகள் பற்றியும், வழிகாட்டுதல்கள் பற்றியும், போராட்டங்கள் பற்றியும் எனக்குள் சந்தேகங்கள் உள்ளன. நான் தற்போது முஸ்லிம் காங்கிரஸில் சேர்ந்தால் அது கட்சிக்குள்ளிருக்கும் பலரிடையே அதிருப்தியைத் தரும். முதலில் ஃபேரியல், ஹிஸ்புல்லாஹ் போன்றோரை அவர்கள் சேர்க்கட்டும், அதன் பின் தகுந்த சந்தர்ப்பமும், சூழ்நிலைகளும் ஏற்படும் பட்சத்தில், சகலரினதும் ஒருமித்த அழைப்பு வரும் போது முஸ்லிம் காங்கிரஸில் இணைவது பற்றி யோசிப்பேன்.

## கோழி பால் கொடுத்த கதை தெரியுமா...? பேருவளைப் பகுதியில் நடக்கிறது!

முலையூட்டிகள் குட்டி ஈன்று, தம் குட்டிகள் ஆரோக்கியமாகவும் திடகாத்திரத்துடனும் வளர்வதற்குத் தம் உதிரத்தில் ஊறிய பாலைக் கொடுக்கின்றன என்பது அனைவரும் அறிந்ததே!

ஆனால் 'கோழியொன்று தன் 'குஞ்சு'களுக்குப் பால் கொடுக்கும் அதிசயம் பேருவளையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நடக்கிறது...!

என்ன ஆச்சரியப்படுகிறீர்களா...? கீழே படியுங்கள்.

ஓர் அரசியற் கோழிக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஆயிரக்கணக்கான 'தொண்டர்' குஞ்சுகள் கோழியிடம் போய் 'உதவி'ப் பால் கேட்கும் போதெல்லாம் அது ஓர் உண்மையான கோழி தன் குஞ்சுகளுக்கு பால் கொடுப்பது போன்றே நடந்து கொள்கிறதாம்.

அதாவது ஆடு, மாடு, குதிரை போன்ற முலையூட்டிகள் தம் குட்டிகளுக்குப் பால் கொடுக்கின்றன. காகம், புறா, மைனா போன்ற பறவைகளும் எங்கெங்கெல்லாமோ அலைந்து திரிந்து தம் குஞ்சுகளுக்கு உணவூட்டுகின்றன. ஆனால், கோழியிடம் குஞ்சுகள் ஒவ்வொரு நாளும் 'அம்மா... எல்லோரும் தத்தம் பிள்ளைகளுக்குப் பாலூட்டுகிறார்கள்; உணவூட்டுகிறார்கள். நீங்களும் எங்களுக்குப் பால் தாருங்களேன்' என்று கேட்டால், கோழி "பொறுங்கள்... இரவைக்குத் தருகிறேன்..." என்று சொல்லுமாம்.

இது கேட்டுக் குஞ்சுகளும் இரவைக்குப் பால் கிடைக்குமெனச் சந்தோஷப்பட்டுக் கொள்ளுமாம். ஆனால் இரவில் குஞ்சுகளைத் தன் சிறகுகளுக்குள் அமுக்கி, சூடாக்கி, அப்படியே தூங்கப் பண்ணி விடுமாம் கோழி. மறுநாள் காலை மேய்ச்சலுக்குக் குஞ்சுகளைக் கூட்டிப் போகையில் பால் ஞாபகம் குஞ்சுகளுக்கு வர, மீண்டும் கேட்குமாம். "அம்மா... பால் தாருங்களேன்!"

"இன்று இரவு நிச்சயம் தருகிறேன்!" என்று கோழி சொல்லுமாம். ஆனாலும் அன்றிரவும் அதே கதை தானாம்.

இந்த ஏமாற்றுக் கோழி போலவே பேருவளைப் பகுதியிலுள்ள ஓர் அரசியற் கோழி தன் தொண்டர் குஞ்சுகளை 'இரவைக்குப் பால் தருகிறேன்' என்ற ரீதியில் ஏமாற்றிக் கொண்டிருக்கிறதாம்.

இந்தக் கதை அந்தப் பகுதியில் பிரபல்யமாகப் பேசப்படுகிறதாம்.

# மலையகத்தில் மலிந்து வரும் மதுபான நிலையங்கள்

**மலையோசை**

பா. யோகராஜன்

இலங்கைப் பொருளாதாரத்தில் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் தொழிற்துறையாக இருந்து வந்த பெருந்தோட்ட பயிர்ச்செய்கைத் துறை, இன்று கைத்தொழில் துறையின் வளர்ச்சியின் காரணமாக இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இருந்தாலும் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் பிரதான தொழிற்துறைகளில் ஒன்றாகவே இது விளங்குகின்றது.

அடர்ந்த காடுகளை பசுமையான விளைச்சல் நிலங்களாக மாற்றியமைத்து, இலங்கைத் திருநாட்டின் வருவாயை சர்வதேச மட்டத்தில் இருந்து ஈட்டித்தருவதற்கு, அன்றும் இன்றும் கடுமையாக உழைத்து வருபவர்கள் மலையகத் தொழிலாளர்கள்தான். பரம்பரையாக சகல உறவுகளும் ஒரே தொழிலில் ஈடுபட்டு வரும், தொழிற்துறை "பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைதான்". இன்று உலகம் நாளுக்கு நாள் புதிய கண்டுபிடிப்பு, புதிய உலகம் என எங்கோ சென்று கொண்டிருக்கையில் சுமார் 180 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட லய(ம்)க் கட்டிடங்களிலேயே இவர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

வெள்ளையர்கள் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தில், தோட்டங்களின் உட்புற வீதிகளுக்கும், தார் ஊற்றி, உறுதியான வீதிகளை அமைத்துக் கொடுத்தனர். அவர்கள் சுதந்திரம் கொடுத்துவிட்டு, நாட்டை விட்டு வெளியேறிய பின், அவர்கள் அமைத்துக் கொடுத்திருந்த ஒரு சில வசதிகளும் அவர்களுடன் சென்றுவிட்டன. இன்று மலையக பிரதான வீதிகள் மண் வீதியாக மாறிக்கொண்டிருக்கின்றன.

ஏராளமான இன்னல்களுக்கு முகம் கொடுத்து வரும் மலையக மக்கள் இன்று மது அரக்கனின் பிடியில் சிக்கி சீரழிகின்றனர். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லாமல் எத்தனையோ போராட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும், சத்தியாக் கிரகங்களையும் சந்தித்துவிட்ட நிலையில், இன்றுவரை நியாயமான ஊதியத்தை பெற முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் மலைய்க மக்களின் மது மீதான நாட்டமும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

மலையகத் தொழிற்சங்க அரசியல் தலைவர்களோ தங்களது அரசியல் எனும் தாயக்கட்டை விளையாட்டில் மலையக மக்களை பகடைக்

**-கா.சுபாஷ்-**
-டிக்கோயா-

காய்களாகப் பயன்படுத்தி அரசியலையும், தொழிற்சங்கங்களையும் நடத்திவருகின்றனர். தேர்தல் காலங்களிலும், அரசியலில் இக்கட்டான் சூழ்நிலைகளிலும், 'சம்பள உயர்வு, பேச்சு வார்த்தை நடத்தப்படும்' என அறிக்கைகளை போட்டி போட்டு விடுவதிலேயே முன்னிற்கின்றனர். இவர்கள் அழைப்பு விடுத்ததும், வேலை நிறுத்த போராட்டங்களில் குதித்து, அவ்வேலை நிறுத்த நாட்களிலும் நஷ்டம் அடைவது அப்பாவி மக்களே. நாட்டின் விலைவாசிக்கேற்ப மலையக தொழிற்சங்க, அரசியல் கட்சிகளும் தாமும் எதற்கும் சோடை போனவர்கள் அல்ல என்று அங்கத்தவர்களின் மாதாந்த 'சந்தா'ப் பணத்தை உயர்த்திக் கொண்டே செல்கின்றனர். இவ்வாறு மலையக மக்களின் உழைப்பைச் சுரண்டி வாழும் அட்டைகளாகவே, மலையக அரசியல், தொழிற்சங்க தலைமைகள் இருக்கின்றன.

இத்தனை இன்னல்களுக்கு மத்தியில் மதுபான நிலையங்களின் அதிகரிப்பால் மலையகம் திணறுகிறது. முன்பெல்லாம் சம்பள நாட்களிலும், முற்பண நாட்களிலும், பெருநாட்களிலும், மது நிலையங்களைச் சூழ்ந்து கொண்டிருந்த மலையக மக்கள், இன்று காலை, பகல், மாலை என்று நேர வித்தியாசமின்றி சூழுகின்றனர்.

இலாபமீட்டிய முதலாளிமார் தமது வியாபாரத்தினை விஸ்தரிக்குமுகமாக, கிளை ஸ்தாபனங்களை கிராமங்கள் தோறும் பரப்பி வருகின்றனர். அத்துடன் தமது முகவர்களான ஒரு சில தோட்டங்களில் தோட்டத் தொழிலாளர்களைக் கொண்டே தமது வியாபாரத்தினை நடத்துகின்றனர்.

'கசிப்பு' பாவனையும் மலையகத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. இவற்றைத் தடுக்க மலையக அரசியல்வாதிகள் முன்வரவேண்டும். அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய, பல மைல்களுக்குச் செல்லவேண்டிய நிலை இன்றும் இருக்கையில், ஒவ்வொரு தோட்டங்களிலும், குறைந்தது மூன்று மினிபார்களாவது காணப்படுவது வேதனையே.

## மஸ்கெலிய அபிவிருத்திக்கு அமைச்சர் அத்திவாரம்

**செ.தி.பெருமாள்**

அமைச்சர் பெ.சந்திரசேகரன் மஸ்கெலியாவில் திறந்த பல்கலைக் கழகம் அமைக்க மேற்கொள்ளும் முயற்சியால் மஸ்கெலியா நகரம் அபிவிருத்தி அடையும் வாய்ப்பு உள்ளது.

1969ம் ஆண்டு மஸ்கெலியா நகரம் பாரிய மலை மீது அமைக்கப்பட்டது. 1977ம் ஆண்டு மஸ்கெலியா, நுவரெலியா என்ற தேர்தல் தொகுதி அமைக்கப்பட்டது. பெயரளவில் நுவரெலியாவுடன் இணைக்கப்பட்ட மஸ்கெலியா சகல அபிவிருத்திப் பணிகளிலும் புறந்தள்ளியே வைக்கப்பட்டது.

மஸ்கெலிய நகரத்தைச் சுற்றியுள்ள தோட்டங்களில் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் மட்டுமே வாழ்கிறார்கள். அவர்களும் சம்பள முற்பணமும், சம்பளமும் எடுக்கும் நாட்களில் மட்டுமே நகருக்குச் சென்று பொருட்களை வாங்குகிறார்கள்.

சிவனொளிபாத மலை யாத்திரை செல்பவர்கள் மலையகத்தில் பல பகுதிகளையும் சுறறிப் பார்ப்பது வழமை. இந்த யாத்திரீகர்கள் கூட மஸ்கெலியா நகரை எட்டிப் பார்ப்பதில்லை.

1969ம் ஆண்டு அன்றைய பிரதமர் அமரர் டட்லி சேனநாயக்கவின் முயற்சியினால் மஸ்கெலிய அரச வைத்தியசாலை நவீன மயப்படுத்தப்பட்டு புதிய உபகரணங்கள் வழங்க முடிவுசெய்யப்பட்டது. அடுத்த தேர்தலில் டட்லி சேனநாயக்கவின் கட்சி தோல்வியடைந்ததால் வைத்தியசாலையின் அபிவிருத்தி கிடப்பில் போடப்பட்டது.

அமரர் காமினி திஸநாயக்கவினால் கட்டப்பட்ட பஸ் நிலையமும் எதுவித நவீனப்படுத்தலும் இன்றி அப்படியே இருக்கிறது. வைத்தியசாலை, பஸ் நிலையம் ஆகியன அபிவிருத்தி செய்யப்பட்டால் அது மஸ்கெலியா நகரின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணை புரியும்.

மஸ்கெலியாவைச் சுற்றியுள்ள பெரிய, சிறிய நகரங்களான நுவரெலியா, தலவாக்கலை, ஹற்றன், டிக்கோயா, நோர்வூட் ஆகியன பெருமளவிலான அபிவிருத்தியைக் கண்டுள்ளன. மஸ்கெலியா நகரம் அமைக்கப்பட்டு 30 வருடங்கள் கழிந்த பின்னும் அரசியல்வாதிகளின் கடைக்கண் பார்வை கிடைக்காததால் எந்தவிதமான அபிவிருத்தியையும் காணவில்லை.

நுவரெலியா, மஸ்கெலியா தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு அரசாங்கத்துடனும் இணைந்து பிரதம அமைச்சர்களாக வலம் வந்தனர். தற்போதும் அமைச்சர்களாக உள்ளனர். இவர்கள் மஸ்கெலியாவை ஏன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்ற காரணம் தெரியாது. இங்கு வாழும் மக்கள் தவிக்கின்றனர்.

மஸ்கெலியாவில் அமையவிருக்கும் திறந்த பல்கலைக்கழகம் மஸ்கெலியா நகரின் அபிவிருத்திக்கு அத்திவாரமிடும் என மக்கள் நம்புகின்றனர்.

## முன்னணிப் பத்திரிகையான உங்கள் இனிய "இடி" வாரப் பத்திரிகையின் அந்தஸ்துமிக்க சந்தாதாரர்களாகுங்கள்

"இடி" வாரப் பத்திரிகை வெளியானதும் பரபரப்பாக விற்றுத் தீர்ந்து விடுவதால் அது பலருக்கும் கிடைக்காமற் போவதைக் கருத்திற் கொண்டு, இப்போது விஷேட சந்தாத் திட்டம் ஒன்றை உங்களுக்காக நாம் அறிமுகப்படுத்துகின்றோம்.

'இடி வாரப் பத்திரிகையின் விற்பனை விலை ரூ.18/-

'இடி' வாரப் பத்திரிகையைத் தபாலில் அனுப்பக் கட்டணம் ரூ.04/- எனவே 'இடி' வாரப் பத்திரிகையைத் தபாலிற் பெற ரூ.22/- ஆகும். ஆயினும் ரூ.20/- வீதம் எமது சந்தாதாரர்களுக்கு 'இடி'யை வாராவாரம் தபாலில் அனுப்ப நாம் முடி வு செய்துள்ளோம்.

இந்த வகையில் 'இடி'யின் சந்தா விபரம் பின்வருமாறு அமையும்:

| நாடுகள் | ஒரு வருடம் (52 வாரங்கள்) | 6 மாதங்கள் (26 வாரங்கள்) | 3மாதங்கள (13 வாரங்கள்) |
|---|---|---|---|
| இலங்கை | ரூ.1040/- | ரூ.520/- | ரூ.260/- |
| ஐரோப்பிய நாடுகள் | ரூ.3400/- | ரூ.1700/- | ரூ.850/- |
| அமெரிக்கா,கனடா | ரூ.4000/- | ரூ.2000/- | ரூ.1000/- |
| மத்தியகிழக்கு நாடுகள் | ரூ.3000/- | ரூ.1500/- | ரூ.750/- |

குறிப்பிட்ட காலத்திற்குள் 'இடி' வாரப் பத்திரிகையின் விலை அதிகமானாலும் கட்டப்பட்ட சந்தாத் தொகை அதற்கேற்ப அதிகரிக்கப்படமாட்டாது. இதனால் நீங்கள் மேலும் நன்மையடைகிறீர்கள்.

உங்கள் பெற்றோர், மனைவி, சகோதர சகோதரிகள், நண்பர்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் ஏற்ற அறிவுக் கருவூலங்களை அள்ளி வழங்கும் 'இடி'யின் சந்தாதாரர்களாவது உங்களுக்குப் பெருமையையும், கௌரவத்தையும் நிச்சயம் வழங்கும்.

சிறப்பும் தரமும் நிறைந்த 'இடி' வாரப் பத்திரிகையின் அந்தஸ்துக்குரிய சந்தாதாரர்களாகுவதற்கு மகிழ்ச்சியுடன் முடிவு செய்துவிட்ட நீங்கள் உங்கள் பெயர், தபால் விலாசம் என்பவற்றோடு உரிய சந்தாத் தொகையை எமக்கு அனுப்புங்கள்.

நீங்கள் நீட்டும் ஆதரவுக் கரங்களைப் பற்றிப் பிடித்து இன்னும் பல சாதனைகளை நாம் படைப்போம்!

நன்றி!

-இடி நிர்வாகத்தினர்-


மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே!

இதையொட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு. எண்ணியவன் எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா? திருமணமே நடக்காதா என்ற ஏக்கமா? காதல் தோல்வியாகிவிட்டதா? கணவன் - மனைவி ஒற்றுமை குறைகிறதா? கையில் பணம் தங்கவில்லையா? பணவருவாய் குறைவா? கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா? குடும்ப வாழ்க்கை இனிமையாக அமையவேண்டுமா? லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா? வெளிநாட்டுப் பயணத்தில் தங்குதடை ஏற்படுகின்றதா? தான்பெற்ற பிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா? பெருவாழ்வு - குபேர வாழ்வு பெறவேண்டுமா? குழந்தை பேறு கிட்டவில்லை எனக் கவலையா? கல்வியில் சித்திபெற வேண்டுமா? கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட்கடாட்சத்தால் 100க்கு 100 வீதம் வெற்றிபெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம். வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்படக்கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத் சேவை நிமித்தம் வெற்றி கிட்டுவது மிகமிகச் சுலபம். மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான் திட்ட வட்டமான சரிவரும் திகதியில் கொடுப்பதென்றால் அது எமது திருவருளே. அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங்களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும் அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சினைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால் எண்ணற்ற வாடிக்கையாளர்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிர்வாகப் பதிவேட்டில் காணலாம்.

வெளிநாட்டவர்களுக்கென அதிதொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியாலத் தொலைபேசிச் சேவை உண்டு.

TEL:- 00941-342463, 00941-470615

தேவைகளுக்கு

39 வருட மாந்திரீகத் துறையில் நிலையான சேவை புரியும்

உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூஷணம் சொல்லின் செல்வர்

டாக்டர் பி.கே.சாமி (J.D.G.A.N) JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Samy J.D.G.A.NL Jp Hon.Prof. (IUMA)
Sri Durgadevi Manthrika
Uchchada Peedam.

கொழும்பில் :
No.162, Kotahena Street,
Mayfield Road,
Colombo-13. SriLanka.

நுவரெலியாவில்:
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 05235097.

வெளிநாட்டார் தொடர்பு:
கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL: 00941-431137
FAX: 00941-344831

உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இல.:
01-342463, 431137, 470615, Fax-344831
E-mail:drpksamy @ sltnet.lk
www.imexpolanka.com/drpksamy.

## வெள்ளைக்கார சிவாஜி



"சிவாஜி கணேசனுக்கு இணையான நடிகர்கள், உலகில் யாருமேயில்லை. ஒரு வேளை மார்லன் பிராண்டோ முயன்றால் அவரைப் போல் நடிக்கக் கூடும்" என்ற கருத்து பலர் மத்தியில் இருந்து வந்தது. யார் இந்த மார்லன் பிராண்டோ? ஹொலிவுட் படவுலகில் யதார்த்தமாக நடிப்பதில் புகழ்பெற்று விளங்கிய சுப்பர் ஸ்டார் அவர். 1924இல் அமெரிக்காவில் உள்ள ஓமாஹாவில் பிறந்த பிராண்டோ, திரைப்படத்தில் முதலில் வில்லனாகத்தான் அறிமுகமானார். பின் உலகப் புகழ்பெற்ற 'தி மென்', 'ஜூலியஸ் சீசர்' போன்ற படங்களில் தோன்றி தன் நடிப்புத் திறமையால் உலகெங்கும் ரசிகர்களைப் பெற்றார். 1954இல் ஒஸ்கார் விருதையும் பெற்றுக்கொண்டார். எவ்வகை வேடமாயினும் அதனைச் சவாலாக ஏற்றுப் புகுந்து விளையாடி 'வசூல் சக்கரவர்த்தி' என்று பாராட்டப்பட்டார். இவர் நடித்து 1971இல் வெளிவந்த 'கோட் ஃபாதர்' (God father) திரைப்படம் உலகப் புகழ் பெற்றது. அப்படத்தைத் தழுவி 'நாயகன்' மற்றும் இன்னும்பல தமிழ்த் திரைப்படங்கள் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

## சுறாவுக்கு எச்சரிக்கை மணி



அவுஸ்திரேலியாவின் கடற்கரைப் பகுதிகளில், படகுகளில் செல்பவர்கள் ஆராய்ச்சி செய்ய ஆழமான இடங்களுக்குச் செல்வார்கள். ஆழத்தில் இவர்களை வரவேற்கும் சுறா, திமிங்கிலம் போன்றவை இவர்களுக்கு ஆபத்தை உண்டாக்குகின்றன. எனவே, ஆராய்ச்சிக்கு ஆழ்கடலுக்குள் அலைபவர்கள் சிகரெட் டப்பா அளவில் உள்ள சிறிய சாதனத்தைக் கட்டிக் கொண்டால் போதும். நாம் இருக்கும் மூன்று மீட்டர் சுற்றளவுக்குள் எங்கே சுறா, திமிங்கலம் போன்றவை வந்தாலும் பெரும் சத்தத்துடன் இந்தக் கருவி மணி அடிக்கும். இதைக்கேட்டு சுறாக்களும் ஓடிவிடும். நாமும் சுறா வருவதை அறிந்து கொண்டு தப்பிவிடலாம். கடலில் இதுபோல் படுக்கையில் மிதந்தபடியே ஓய்வெடுப்பவர்கள் இந்தச் சாதனத்துடன் உயிர்காக்கும் தன்னார்வத் தொண்டரையும் பாதுகாக்க ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

## எனது பழைய டயரி! 02

**ஜே.பாலா**

எனக்கு ஒரு ஏழை நண்பன் இருந்தான். ஆற்றங்கரையோரத்தில் அவனதுகுடிசை இருந்தது. ஓய்வு நேரங்களில் மீன் பிடிப்பது தான் அவனது பொழுதுபோக்கு.

ஒரு இறால் சீசன் காலத்தில் 'இறால் பிடித்துத் தருகிறேன்... வாடா!' என்று என்னை அழைத்தான். நானும் போனேன்.

அடர்த்தியான இருட்டு. ஆனாலும் டோர்ச் வெளிச்சத்தில் நிறைய இறால்கள் பிடித்துத் தந்தான். ஒரு காகிதப் பையில் அவற்றைப் போட்டபடி, முழங்கால் அளவு நீரில் நின்று கொண்டிருந்தேன்.

'போதுமாடா?" என்று கேட்டான் நண்பன்.

'போதும்..' என்றேன்.

'கொண்டா பார்ப்போம்?' என்றபடி பையை வாங்கிய நண்பனுக்கு அதிர்ச்சி!

'என்னடா... இதில் இறாலையே காணலியே..!' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்ட எனக்கும் அதிர்ச்சி!

ஆம்! காகிதப் பையில் ஒரு இறாலைக் கூடக் காணோம்!

அதிகமான இறால்களின் பாரத்தினாலும், ஈரலிப்பினாலும் காகிதப் பையின் கீழ்ப் பகுதியில் வெடிப்புவிழுந்து, அவற்றினூடாக அத்தனை இறால்களும் ஆற்றில் விழுந்து விட்டன.

ஆண்டவன் அளந்ததுதான் ஒருவனுக்குக் கிடைக்கும். அவன் அனுமதிக்காமல் எவருக்கும் எதுவுமே கிடைப்பதில்லை.

மீன் பிடித்து மீண்டும் ஆற்றில் விட ஆசை என்ற பாடல் வரிகளைக் கேட்கும் போதெல்லாம் இந்த நிகழ்ச்சிதான் என் நினைவுக்கு வருகிறது.

## சிலேடைச் சிதறல்

தினமணி ஆசிரியர் ஏ.என்.சிவராமனைச் சந்திக்க கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன் பத்திரிகையாளர் திருப்பூர் மணியுடன் தினமணி அலுவலகத்துக்குச் சென்றார். உடல்நிலை சரியில்லாத கி.வா. அடிக்கடி இருமினார்.

"நீங்கள் பேச்சாளர் ஆயிற்றே. குரலைக் கவனித்துக் கொள்ள வேண்டாமா? என்ன இப்படி இருமல்" என ஏ.என்.எஸ் அன்போடு விசாரித்தார்.

"இரு மல் எங்கே? நான், நீங்கள், நா.பா, திருப்பூர் கிருஷ்ணன் எல்லோரும் மேலே கதர்ச்சட்டை, இடுப்பில் கதர்வேட்டி என்று இரு கதர் அல்லவா கட்டுகிறோம் மல் கிடையாதே" என்றார்.

"உங்கள் தொண்டை பற்றிச் சொன்னேன்" என்றார் ஏ.என்.எஸ்.

"என் தொண்டைப் பற்றியா சொன்னீர்கள் நான் என்ன அப்படிப் பிரமாதமாகத் தொண்டு செய்துவிட்டேன்" என பிடிகொடாமல் பேசினார் கி.வா.

"உங்கள் வொய்ஸ் இன்று சரியில்லை என்று சொன்னேன்" என ஏ.என்.எஸ் தொடர்ந்தார்.

"என் வொய்ஸ் என்றுதான் சரியாக இருந்தது. நீங்கள் தான் மேலிடத்திலெல்லாம் வொய்ஸ் உள்ளவர். இன்று இருமல் காரணமாக என் வொய்ஸ் மேலிடம் போனால் பிசிறுகிறது" என்றார்.

"அடடா! உங்கள் குரல் பற்றி அல்லவா கூறினேன்" என்றார் ஏ.என்.எஸ்.

"என் குரல் சரியில்லாவிட்டால் என்ன எப்போதும் எனக்காகக் குரல் கொடுக்க நீங்கள், நா.பா எல்லோரும் இருக்கிறீர்களே" என கி.வா.ஜகந்நாதன் மடக்கினார்.

## பரிகாரம்

தன் மகனை அழைத்த தந்தை, "நாம் இருவருமே இனிமேல் தவறு செய்யக்கூடாது. எந்தத் தவறு செய்தாலும் அதற்கு அபராதமாக இந்த உண்டியலில் ஒரு ரூபாய் போட வேண்டும். அப்படிச் சேரும் தொகையை கோவிலுக்குக் காணிக்கையாகச் செலுத்தி விட வேண்டும்" என்றார்.

மகனும் இதற்கு ஒப்புக் கொள்ள அவரின் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒருநாள் தந்தை அவசரமாக வெளியூருக்குப் புறப்பட்டார். புறப்பட முன்னர் உண்டியலில் இருந்த பணத்தையெல்லாம் கோவிலில் கொடுத்துவிட்டு மகனைப் பார்த்து, "நான் இல்லாத போதும் இந்தப் பழக்கத்தை விட்டுவிடாதே. ஒரு தவறுக்கு ஒரு ரூபாய் உண்டியலில் போட்டுவிடு" என்றார்.

மூன்று மாதம் கழித்து தந்தை வீடு திரும்பினார். உண்டியலைத் திறந்து பார்த்தார். அதில் ஒரே ஒரு ரூபாய்தான் இருந்தது. மகிழ்ச்சியடைந்த அவர் மகனை அழைத்து "இந்த மூன்று மாதத்திலும் ஒரேயொரு தவறுதான் செய்திருக்கிறாயா?" என்று கேட்டார். அதற்கு அவன் "இல்லையப்பா, உண்டியலில் முந்நூறு ரூபாய் சேர்ந்தது" என்றான். உடனே தந்தை "அப்படியானால் அப்பணத்தை கோவிலுக்குக் கொடுத்திருப்பாயே?" என்றார்.

"அப்பா! உண்டியலைத் திறந்து நானே அப்பணத்தை எடுத்துச் செலவழித்துவிட்டேன். அந்தத் தவறுக்காக நான் போட்ட ஒரு ரூபாய்தான் இப்போது உண்டியலில் இருக்கின்றது" என்றான் அந்தக் கெட்டிக்கார மகன்.

## பூமராங்

'இயந்திரப் பறவை' தொலைக்காட்சி நாடகம் பார்த்த அனைவரையும் வியப்பிலாழ்த்திய 'பூமராங்' ஞாபகமிருக்கிறதா? ஆஸ்திரேலியப் பழங்குடியினர் இன்னமும் உபயோகப்படுத்தும் இவ்வாயுதத்தில் இரண்டு வகைகளுண்டு. ஒன்று திரும்பி வரும் வகை, மற்றது திரும்பி வராத வகை. சரியான முறையில் எறிந்தால் சுமார் 300 அடிவரை உயர்ந்து ஐந்து அல்லது ஆறு தடவை சுழன்று மீண்டும் வீசியவர் காலடியில் வந்து விழும், இந்த முதல் வகை பூமராங். பூமராங் ஒரு வளைந்த வாழைப்பழ வடிவில் இருக்கும். விமானத்தின் இறக்கைகளின் தொழிநுட்பம் கிட்டத்தட்ட பூமராங்கின் தொழில்நுட்பத்தோடு ஒத்ததுதான். அவுஸ்திரேலியர்கள் தவிர பண்டைய எகிப்தியர்களும் இதனை உபயோகித்திருக்கிறார்கள். 1970ஆம் ஆண்டு முதல் உலகளாவிய ரீதியில் பூமராங் வீசும் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. 1982ல் பீட்டர் ரஃப் என்பவர் வீசிய பூமராங் 375 அடி தொலைவு சென்று திரும்பி அவரிடமே வந்தது. இதுவே அதிகூடிய தூரமாக சாதனைப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

ஆபிரிக்காவின் தென்முனையிலுள்ள கேப்டவுன் தான் உலகிலேயே அதிகமான கொலைகள் நிகழும் இடமாகத் திகழ்கின்றது (!). இவ்விடயத்தில் அமெரிக்கா இரண்டாம் இடம்தான். இதற்குமுன் அமெரிக்காவிலுள்ள மியாமி நகரம்தான் முதலிடத்தில் இருந்தது. லட்சம் பேருக்கு 48 பேர் என்ற விகிதத்தில் ஆண்டு தோறும் கேப்டவுனில் கொல்லப்படுகின்றனர். மியாமியில் 32 பேர்தான்.

## நெட்டில் சுட்டவை




WE BRUSH 3 TIMES A DAY...



காரையெல்லாம் படகில ஏத்தமுடியாதுன்னா கேட்கனும்.



விலைவாசி ஏறுற வேகத்த பார்த்தா கடைசியில இந்த நிலைமைதான் போல இருக்கு..!



ஆக்கபொறுத்தவனுக்கு ஆறப்பொறுக்கேலாதோ?

# அலை கடலுக்கு அப்பால்

# விண்வெளி மனிதரின் விபரீத சோதனை

பூமியைத் தவிர ஏனைய கிரகங்களில் உயிரினம் உண்டா என்பதைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சியில் ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன. இதுவரை நடைபெற்ற ஆராய்ச்சிகளில் புல், பூண்டு இருப்பதற்கான ஆதாரங்கள் கூடக் கிடைக்கவில்லை.

சந்திரன், செவ்வாய், புதன், சனி என்று பல கோள்களில் நடைபெற்ற ஆராய்ச்சிகளின் முடிவு உயிரினம் இருக்கலாம் என்ற சந்தேகங்களுடன் முடிவுற்றதே தவிர இருந்தது அல்லது இருக்கின்றது என்று அறுதியிட்டுக் கூறவில்லை. நிலவில் மனிதனின் சோதனையும், செவ்வாயில் இயந்திரத்தின் சோதனையும் நடைபெற்றது.

கோடி கோடியாகச் செலவு செய்தும் உயிரினம் இருப்பதைப் பற்றி சரியான தகவலைத் தெரிவிக்காத விஞ்ஞானிகள் பூமிக்கு வரும் பறக்கும் தட்டுக்களையும், வேற்றுக் கிரக மனிதர்களையும் கண்ட பலர் கூறும் சாட்சியங்களைப் பிரமை என மறுதலித்து, கண்ணால் கண்ட சாட்சிகளைத் திசை திருப்புகின்றனர். பறக்கும் தட்டுக்களையும், வேற்றுக்கிரக வாசிகளையும் பார்த்ததாகப் பலர் கூறி இருக்கின்றனர். ஆனால் வேற்றுக் கிரகவாசிகள் புவியில் மனிதர்கள் மீது செய்த பரிசோதனைகள் பற்றிய விபரங்கள் வல்லரசுகளுக்கும், UFO என்று அழைக்கப்படும் (UNIDENTIFIED FLYING OBJECTS) அமைப்புக்கும் மட்டுமே தெரிந்த உண்மை.


நிலம், நீர், தாவரம் ஆகியவற்றை ஆய்வு செய்த விண்வெளிவாசிகள் மனிதர்களை ஆய்வு செய்தவிதம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒரு சிறுமியை ஐந்து வயதிலும், பருவமடைந்தபின்னும், 65 வயதிலும் ஆய்வு செய்த விபரத்தை UFO வெளியிட்டுள்ளது.

ஆண்களின் விந்து, பெண்களின் கருமுட்டை ஆகியவற்றைப் ப..ச்.தும் தட்டில் வந்தவர்க..ள் எடுத்துச் சென்றிருக்கலாம் என த் தெரியவருகிறது. பறக்கும் தட்டில் வந்தவர்களால் சோதனை செய்யப்பட்டு தவிர்க்கப்பட்ட நபர் வாசக்டமி ஒப்ரேசன் (கருத்தடை சத்திர சிகிச்சை) செய்தவர் என்ற செய்தியால் ஆய்வாளர்கள் மேற்கண்ட முடிவுக்கு வந்துள்ளனர்.

உலகின் பல பாகங்களிலும் கடந்த 35 வருடங்களில் 85 ஆயிரம் தடவை பறக்கும் தட்டுக்கள் பார்க்கப் பட்டதாகப் பதியப்பட்டுள்ளது. இன்னும் எத்தனையோ பேர் பார்த்து விட்டுச் சொல்லாமல் இருந்திருக்கலாம். மனிதர்களின் தொடர்பற்ற காட்டுப் பகுதிகளில் அல்லது கடல் பகுதிகளில் அவை இறங்கியிருக்கலாம்.

வான்வெளியில் மில்கிவே என்ற நட்சத்திரக் கூட்டம் உண்டு. அந்தத் தொகுதியில் மட்டும் 25 கோடி நட்சத்திரங்கள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள். அந்த நட்சத்திரக் கூட்டத்தில் உள்ள நட்சத்திரத்தில் உயிரினங்கள் இருக்கலாம் எனவும், நம்மிடமிருந்து மாறுபட்ட நாகரீக மனிதர்கள் இருக்கலாம் எனவும் பிரபல வானாராய்ச்சி நிபுணர் ஹாரஸ்சாகன் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

ராதா



வான்வெளியிலுள்ள கோடிக்கணக்கான நட்சத்திரங்களில் சூரியன் மிகச் சிறிய நட்சத்திரம். சூரியக் குடும்பத்தில் நாம் வசிக்கும் பூமி மிக மிகச் சிறிய கிரகம் என்பதை வானியல் ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். அப்படி இருக்கும்போது பூமியைத் தவிர வேற்றுக் கிரகங்களிலும் மனிதனைப் போன்ற நாகரீகமடைந்த உயிரினம் இருக்கமுடியாது என எண்ணுவது அறியாமை என்பதையும் ஆய்வாளர்கள் உணர்ந்துள்ளார்கள்.

விமானிகளும், விண்வெளிக் கப்பல்களில் பயணம் செய்த ஆராய்ச்சியாளர்களும் பறக்கும் தட்டுக்களைப் பார்த்ததாகக் கூறுகிறார்கள். ஜெமினி-7 என்ற விண்கலத்தில் சென்ற ஆராய்ச்சியாளர் கேர்ணல் பிராங் போர்மன் பறக்கும் தட்டைப் புகைப்படம் எடுத்துள்ளார். நிலவில் கால் வைத்த நீல் ஆம்ஸ்ரோங் சந்திரமண்டலத்தில் இரண்டு பறக்கும் தட்டுக்களைப் பார்த்ததாகக் கூறியுள்ளார். பஸ் அல்ரின் சந்திரமண்டலத்தில் இருநது பறக்கும் தட்டுகளைப் படமெடுத்தார்.

கேர்ணல் கூப்பர் என்பவர் புதன் கிரகத்தை நோக்கி விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டபோது அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரத்துக்கு மேல் மிகப் பெரிய பறக்கும் தட்டைப் பார்த்திருக்கிறார். தன்னுடைய விண்வெளிக் கலத்தில் இருந்தபடியே பறக்கும் தட்டில் இருந்த மனிதர்களின் பேச்சை ஒலிப்பதிவு செய்துள்ளார். அந்தப் பாஷை பூமியில் யாரும் பேசாத பாஷை என்பது ஆராய்ச்சி மூ... ..ரியவந்துள்ளது.

இநத ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும்தான் விண்வெளி மனிதர்கள் பேசி உள்ளார்கள். பூமியில் அவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசாது, வந்த காரியத்தை கச்சிதமாக முடித்து விட்டுச் சென்றுள்ளார்கள். டெலி பதி முறையில் அவர்கள் தமக்குள் பேசி இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

விண்வெளி மனிதர்களால் சோதனைக்குள்ளாக்கப்பட்ட மனிதர்களின் உடலில் அதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. சோதனைக்குட்பட்ட மனிதர்கள் பறக்கும் தட்டைப் பார்த்ததாக மட்டும் கூறுகிறார்கள். அவர்கள் மீது நடத்தப்பட்ட சோதனைகள் அவர்களின் ஞாபகத்தில் இருப்பதில்லை. ஹி... ..ம் எனும் ஆழ்நிலை உறக்கத்தில் UFO நிபுணர்கள் கேட்கும் கேள்விகள் மூலமே இவர்கள் தமக்குள் நடந்ததைச் கூறுகிறார்கள்.

பறக்கும் தட்டு மனிதர்கள் விஞ்ஞான அறிவில் பூமியில் உள்ள மனிதர்களைவிட ஆற்றல் கூடியவர்கள். மணிக்கு 15 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் மைல்கள் பறக்கும் தட்டுகள் செல்லக் கூடியவை என அனுமானிக்கப்பட்டுள்ளது. இந்த வேகத்தைக் கற்பனை செய்துபார்க்க முடியாது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பறக்கும் தட்டில் வருபவர்களால் மனிதருக்கு எந்த விதமான அச்சுறுத்தல்களும் இதுவரை ஏற்படவில்லை. ஆனால் பறக்கும் தட்டை ஆராய்ச்சி செய்தவர்கள் மர்மமான முறையில் மரணமானார்கள். 1982-86 காலப்பகுதியில் 22 விஞ்ஞானிகள் மரணமானார்கள். ரகசியத்தைப் பாதுகாக்க தற்கொலை, விபத்து என்ற பெயர்களில் இவர்கள மௌனமாக்கப்பட்டார்களா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

திருமணமாகாத இளம் பெண்ணுக்கு இரண்டு மாதங்களாக மாதவிலக்கு ஏற்படவில்லை. அவள் குழம்பிப்போயிருந்தாள். தாய்க்கு அவள் மீது சந்தேகம். வைத்தியரிடம் சென்று பரிசோதித்தபோது கர்ப்பம்தான் என உறுதியாகியுள்ளது. ஆடவருடன் தொடர்பு கொள்ளாமல் கர்ப்பமடைவது சாத்தியமா என அவள் வைத்தியரைக் கேட்டாள். வைத்தியரும் அவளைச் சந்தேகப்பட்டாரே தவிர பதிலளிக்கவில்லை.

கருச்சிதைவு செய்து கொள்ளும்படி தாய் வற்புறுத்தினாள். கர்ப்பம் இல்லை என மகள் வாதாடினாள். மூன்றாவது மாதம் மாதவிலக்கு ஏற்பட்டது. அதே வைத்தியர் பரிசோதித்துப் பார்த்தபின் இயற்கையான மாத விலக்கு என்றும் கருச் சிதைவு அல்ல என்றும் கூறினார். ஆனால் அப்பெண் கருத்தரித்ததற்கான எந்தவித அடையாளமும் இருக்கவில்லை. மருத்துவத்துறையிலுள்ள அபூர்வ நிகழ்ச்சி என்று கூறி அந்த வைத்தியர் இப்பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டார்.

மனக் குழப்பத்துக் குள்ளான அப்பெண் தன குழப்பங்களுக்குத் தீர்வு காண மனவியல் நிபுணரை நாடிச் சென்றாள். ஹிப்னாடிச உறக்கத்தில் மனவியல நிபுணர் கேள்வி கேட்ட போது பறக்கும் தட்டில் வந்தவர்கள் தன்மீது மேற் கொண்ட பரிசோதனையைக் கூறினாள்.

(பறக்கும்.........)

## அப்பலோ மருத்துவமனையில் அசத்தலான சிகிச்சை

பக்கவாதம், மூளை வளர்ச்சி குன்றுதல் உட்பட மத்திய நரம்பு மண்டலப் பாதிப்பு நோயாளிகளுக்கு உறுப்பு அசைவில் முன்னேற்றம் தரும் நவீன ஃபிஸியோதெரப்பி சிகிச்சையை சென்னை அப்பலோ மருத்துவமனை அறிமுகப்படுத்தியுள்ளது.

'எலெக்ட்ரோமையோகிராஃபிக் பயோஃபீட்பேக்' என்று அழைக்கப்படும் இந்த நவீன சிகிச்சை மையம் ரூ 1 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நியூயார்க்கைச் சேர்ந்த ஆஷா பவுண்டேஷன் நிறுவனத்துடன் இணைந்து அப்பலோ மருத்துவமனை இம்மையத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவிலேயே முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ள இம்மையம் தொடர்பாக மருத்துவமனையின் தலைவர் பி.சி.ரெட்டி கூறியிருப்பதாவது...

'பக்கவாதம், மூளை வளர்ச்சி குன்றுதல் உட்பட நரம்பியல் நோய்களால் பாதிக்கப்படுவோருக்கு நிவாரணம் அளிக்க, மூளை செல்ககளின் உதவியின்றி உறுப்பு அசைவுப் பயிற்சி அளிக்கும் சிகிச்சை மட்டுமே தற்போது நடைமுறையில் உள்ளது. ஆயுள்வேத முறையில் தைலங்களைக் கொண்டு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த டொக்டர் பேர்னார்ட் எஸ்.புரூக்கர் இத்துறையில் தொடர்ந்து 30 ஆண்டுகளி ஆராய்ச்சி செய்து, நரம்பியல் நோயாளிகளுக்கு வரப்பிரசாதமாக நவீன ஃபிஸியோதெரப்பி சிகிச்சை முறையைக் கண்டுபிடித்து வெற்றி அடைந்துள்ளார். அவரது கண்டுபிடிப்பு மூலம் இதுவரை 8000 நோயாளிகளின் உடல் உறுப்பு அசைவு முன்னேற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மனித மூளையில் கோடிக்கணக்கான செல்கள் உள்ளன. ஆரோக்கியமான மனிதர்கள் கூட 10 முதல் 15 சதவீத செல்களைத்தான் பயன்படுத்துகின்றனர். இந்த செல்கள் தான் முதுகுத் தண்டு நரம்பு மண்டலம் மூலம் கை, கால் போன்ற உடல் உறுப்புகளுக்குக் கட்டளைகளைப் பிறப்பிக்கின்றன.

மத்திய நரம்பு மண்டல நோய்களால் பாதிக்கப்படுவோருக்குக் கட்டளையிடும் செல்கள் இறந்து போய், தொடர்புடைய உறுப்பு அசைவு நின்று போய் விடுகிறது. இறந்த செல்களுக்கு மறு உயிர் கொடுக்க முடியாது. ஆனால் 'பயோஃபீட்பேக்' கருவி மூலம் வேலை செய்யாமல் இருக்கும் மீதமுள்ள மூளை செல்களைத் தூண்டி, பாதிக்கப்பட்ட உறுப்புகளில் அசைவை ஏற்படுத்துவதே டாக்டர் பெர்னார்ட் எஸ்.புரூக்கரின் நவீன ஃபிஸியோதெரப்பி சிகிச்சையின் சிறப்பம்சமாகும்.

இச்சிகிச்சை முறையில் பாதிக்கப்பட்ட உறுப்பின் தசைப்பகுதியில் வயர்கள் பொருத்தப்படுகின்றன.

இதையடுத்து மூளையிலிருந்து மின் சிக்னல்கள் பாதிக்கப்பட்ட பகுதியை அடைந்து கட்டளையைப் பிறப்பிக்கத் தொடங்குகின்றன. பாதிக்கப்பட்ட உறுப்பின் அசைவுக்கு ஏற்ப மூளை செல்களின் செயற்பாட்டை நோயாளியே நேரடியாக கம்ப்யூட்டரில் பார்ப்பதால் உளவியல் ரீதியாக நல்ல முன்னேற்றம் ஏற்படுகிறது.

பல ஆண்டுகளாக பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் இச்சிகிச்சை உதவும். தினமும் ஒரு மணி நேரம் வீதம் தொடர்ந்து 15 முதல் 21 நாட்கள் சிகிச்சை அளிக்க பலன் கிடைக்கும். இச்சிகிச்சைக்கு மொத்தம் ரூ. 35 ஆயிரம் (இந்திய ரூபாக்கள்) செலவாகும் என்றார் பிசிரெட்டி.

## 'ஜீன்ஸ்' பிரசாந்தின் இரட்டைப் பிறவி அதிசயம்!

# ஜீனத் தொழிற்சாலை

08

கதாநாயகனோ கதாநாயகியோ இரட்டை வேடத்தில் நடிப்பது என்பது, சினிமாவில் நாம் அடிக்கடி பார்க்கும் விஷயம். 'ஜீன்ஸ்' திரைப்படத்தில் பிரசாந்த் இரட்டையரில் யார் தனது காதலன் என்று நெருக்கமான காதலியே குழம்பிப் போகுமளவுக்கு அண்ணனும் தம்பியும் ஒரே மாதிரியிருப்பார்கள்!

'ஒரே மாதிரி' இருக்கும் இந்த விஷயம் சினிமாவுக்காகச் சற்றே மிகைப்படுத்தப்பட்டாலும் ஏறக்குறைய அச்சில் வார்த்தது போன்ற தோற்றமுடைய இரட்டைப் பிறவிகளை நாம் நேரிலும் கூட சில சமயம் பார்த்திருக்கிறோம்.

இதுபோன்ற இரட்டைப் பிறவிகளை Uniovular Twins என்று குறிப்பிடுகிறார்கள்.

இரட்டைப் பிறவிகள் அச்சு அசலாக ஒரே மாதிரி இருப்பதற்குக் காரணமிருக்கிறது. ஃபெலோப்பியன் குழாயில் சினை முட்டையோடு உயிரணு சேர்ந்து கருவானவுடனே அந்தக் கரு எதிர்பாராத விதமாக இரண்டாக உடைந்து விடும். உடைந்த கருவின் இரு பகுதிகளும் தனித்தனியா... ஏற்கனவே சொன்னதுபோல் செல் பிரிந்து வளர்ந்து கொண்டுபோய் ஒவ்வொன்றும் குழந்தையாக உருவெடுக்கிறது!

ஒரே கரு, இரண்டாக உடைவதில் ஏற்படும் இரட்டைக் குழந்தைகள் என்பதால், நிறம், உயரம், ரத்த குரூப் என்று இருவரும் ஒரே மாதிரியாக இருப்பார்கள். சமயத்தில் கரு, இரண்டாக உடையும்போது, இரு துண்டுகளாக உடையாமல் லேசாக ஒட்டியபடியே கூட நின்றுவிடும். அதன் விளைவுதான் ஒட்டிப் பிறக்கும் இரட்டைக் குழந்தைகள்! குழந்தைகள் எந்த அளவுக்கு ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பதைப் பொறுத்து அந்தக் குழந்தைகள் இருவருக்கும் பொதுவாக ஒரே இதயம், இரண்டே கிட்னி, இரண்டே கால்கள் என்று அமைகின்றன. இதுபோன்ற இரட்டையர்களைத்தான் 'சயாமிஸ் ட்வின்ஸ்' என்று சொல்கிறார்கள்.

இன்னொரு வகை இரட்டைப் பிறவியும் இருக்கிறது. அதில் ஒரு குழந்தை ஆணாகவும், இன்னொரு குழந்தை பெண்ணாகவும் கூட இருக்கும். ஒன்று செக்கச் செவேலென்றும் இன்னொன்று காபித்தூள் கலரிலும் கூட இருக்கும். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் ஒரே பிரசவத்தில் பிறக்கும் இதுபோன்ற இரட்டைப் பிறவிகளை Binovular Twins என்கிறார்கள்.

இதுபோன்ற இரட்டையர்கள்தான், ஜெராக்ஸ் இரட்டையர்களை விட நாலு மடங்கு அதிகம் பிறக்கிறார்கள்.

இந்த டைப் இரட்டைப் பிறவிகள் உருவாகக் காரணம், ஒரே சமயத்தில் சினைப் பையிலிருந்து இரண்டு சினை முட்டைகள் வெடித்து வெளிவந்து.

**டாக்டர்**
**பிரேமாகிருஷ்ணசாமி**
நன்றி:-
**உச்சி முதல் உள்ளங்கால் வரை**

இரண்டும் தனித்தனி உயிரணுக்களோடு சேர்ந்து, இரண்டு கருவாகி ஒரே சமயத்தில் பிறப்பதுதான்! வெவ்வேறு நிறம், வெவ்வேறு சாயல் எல்லாம் அதனால்தான்!

கர்ப்பிணிகள் இரட்டை வாழைப்பழம் சாப்பிட்டால் இரட்டைக் குழந்தை பிறக்கும் என்று சும்மானாச்சும் ஒரு காரணம் சொல்லப்படுவதுண்டு! அப்படியெல்லாம் ஏதும் கிடையாது. இரண்டு சினை முட்டை வெடித்து வெளிவருவதற்கு, பரம்பரை குணங்கள் ஒரு காரணம் என்றால், குழந்தைப் பிறப்புக்காக பெண்கள் எடுத்துக் கொள்ளும் Clomiphene போன்ற நவீன மருந்துகளும் இன்னொரு முக்கியக் காரணம்! இரண்டு சினை முட்டைகள் மட்டுமல்ல... இது மாதிரியான மருந்து சாப்பிடுவதால் சமயத்தில் மூன்று, நான்கு ஏன்... ஏழு சினை முட்டைகள் கூட ஒரே நேரத்தில் வெடித்து வெளிவரக்கூடும்.



குழந்தை இல்லாத தம்பதிகள் தற்போது இதுபோன்ற Infertility மருந்துகளை அதிகமாகச் சாப்பிட ஆரம்பித்திருப்பதால்தான் சமீபகாலமாக பேப்பர்களில் 'ஒரே பிரசவத்தில் பெண்ணுக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன!' என்பது மாதிரி செய்திகளையும் அடிக்கடி பார்க்க முடிகிறது.

அதிகபட்சமாக இப்படி ஏழு குழந்தைகள் கூட




பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் ஒரு பெண்ணுக்கு எட்டுக் குழந்தைகள் உருவானதுதான் சமீபத்திய அதிசயம்! அத்தனை குழந்தைகளையும் அவள் கர்ப்பப்பை தாங்காது என்று வாதாடிய ஒரு குரூப், அதில் பாதி கருக்களையாவது கலைத்துவிடச் சொல்ல...

'ஒரு மனிதகுல அதிசயத்தைப் பார்க்க விடாமல் ஏன் தடுக்கிறீர்கள்... அந்தப் பெண் எட்டுக் குழந்தைகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும்' என்று இன்னொரு குரூப் அவளை ஆதரிக்க... பரபரப்பாகப் பேசப்பட்டது அவளது கர்ப்பம்! கடைசியாக அவள் கர்ப்பப்பை அத்தனை குழந்தைகளின் கனத்தைத் தாங்க முடியாமல் கருக்கள் மொத்தமும் கலைந்துவிட்டதுதான் பரிதாபம்.

## கொதித்தாறிய நீரை அருந்துவதே சிறந்தது

அசுத்தமான நீரை அருந்துவதால் ஏற்படும் நோய்களின் விளைவாக வருடாந்தம் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் மரணமடைந்து வருவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) தெரிவிக்கின்றது.

பெரியவர்களின் கவனயீனத்தாலும், அறியாமையாலும் சிறுவர்கள் அசுத்தநீரை அருந்துகின்றனர். இதனால் விஷக்கிருமிகள் அவர்களின் உடம்பினுள் சென்று பல வித பயங்கர நோய்களை ஏற்படுத்துவதோடு சிலவேளைகளில் உயிராபத்தையும் உருவாக்கிவிடுகிறது.

குடிநீரை நன்குகொதிக்க வைப்பதால் கிருமிகள் அழிக்கப்பட்டு நீர் சுத்தமாகிறது. இத்தகைய நீரை அருந்தவேண்டும் என்பதே சுகாதார ஆலோசனையாகும். சுகவாழ்வுக்கான ஆதாரமுமாகும்.

எனினும் எம்மில் அநேகமானோர் கொதித்தாறிய நீரை அருந்த பின்வாங்குகிறார்கள். இதனால் உண்டாகும் பின்விளைவுகளை அவர்கள் ஏனோ மறந்துவிடுகிறார்கள். கொதித்தாறிய நீரைக் குடித்தால் திருப்தியாக இல்லை. தாகமும் தீருவதில்லை என்று பல நொண்டிச் சாட்டுக்கள் கூறுவார்கள். இவை ஏற்கமுடியாதவை. வாய்க்கு ருசியானதை ஏற்பதைவிட உடல்நலத்துக்கு ஊறுவிளைவிப்பதைத் தவிர்ப்பதே சிறந்தது.

—எம்.எஸ்.நஸீஹா, ஏத்தாலை.

## நாட்டு வைத்தியர் நல்லதம்பி



மாட்டுப்பால் அருந்துவது கொடுமை என்பதெல்லாம் பழைய கதையாய்ப் போச்சு. இருதய நோய் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமானால் மாட்டுப்பால் அருந்தியே ஆக வேண்டும். பால் அருந்துவதை வழக்கமாக்கிக் கொண்டால் நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தவிர்க்கவும் முடியும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். பாலால் செய்யப்பட்ட உணவு வகைகளைச் சாப்பிடும் பழக்கமுள்ளவர்களுக்கு இரத்த அழுத்த நோய் வரவே வராது. நீங்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டால் அதிகம் அதிகமாக பால் அருந்துங்கள்.

## வெற்றிலையிலும் விற்றமின்கள்

வெற்றிலைக்கொடி முதலில் பிறந்தது தென்கிழக்கு ஆசியாவிலும் தென் இந்தியாவிலும்தான். வெற்றிலைக் கொடி வளர நல்ல, வளமான மண்ணும் அதிக சூரிய வெளிச்சமும் தேவை. ஒரு செடிக்கு வித்திட்டால் அதன் இலையைப் பறிக்க இரண்டு மாதங்களாகும். அத்துடன் இதற்கு அதிகளவு தண்ணீர் வசதியும் வேண்டும்.

இந்த வெற்றிலையில் அநேக சத்துக்கள் அடங்கியுள்ளன. விட்டமின் ஏ, பி, பி-2, பி-6, பி-12, மற்றும் குளுக்கோஸ், சுக்ரோஸ், பிரக்டோஸ், அமினோ அசிட் என்பனவும் உள்ளன.

எனவே வெற்றிலை சாப்பிட்டால் உடலுக்கு நல்ல சத்து கிடைக்கும். இது தவிர உணவு ஜீரணிக்கும். சக்தியும் கிடைக்கும். ஆனால் வெற்றிலையுடன் பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு சேர்ப்பது உடலுக்கு தீங்கை விளைவிக்கும்.

—எம்.எஸ்.நஸீஹா, ஏத்தாலை.

## விட்டமின் C

உடலில் பற்றீரியாவினால் தோன்றும் தீய விளைவுகளைத் தடுத்து எம்மைக் காப்பது விட்டமின் C யின் பணிகளில் ஒன்றாகும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டிவிட்டு பல்வேறு வகையான பற்றீரியாக்களை உடலினுள் தொழிற்பட முடியாமற் செய்துவிடுகின்றது. விசேடமாக தடிமனை ஏற்படுத்தும் பற்றீரியாக்களின் எதிரி இந்த விட்டமின் C தான். ஒரு நாளைக்கு 1000 மில்லி கிராம் அளவுள்ள விட்டமின் C உடலிற் சேர்ந்தால் நன்மையான விளைவுகள் கிடைக்கும் என்று அமெரிக்காவின் தேசிய சுகாதார ஆய்வு நிலையம் தெரிவிக்கின்றது. இந்த 1000 மில்லிகிராமும் ஒரே தடவையில் உடலினுள் எடுக்கப்படாமல் பகுதி பகுதியாகவே எடுக்கப்பட வேண்டும் என்றும் எச்சரித்துள்ளது. சிறுவர்களுக்கு நாள்தோறும் 200 மில்லி கிராம் அளவுள்ள விட்டமின் C அவசியமாகின்றதாம். வெறும் தடிமனிலிருந்து மட்டுமன்றி, புற்றுநோய் மற்றும் இதயநோய்களிலிருந்து எம்மைக் காத்துக்கொள்ளவும் விட்டமின் C துணைபுரிகின்றது. புளிப்புச் சுவையுடைய உணவுப் பதார்த்தங்களில் விட்டமின் C காணப்படுகின்றது. விட்டமின் C மாத்திரைகள் மூலமும் உடலினுள் விட்டமின் C செலுத்தப்படலாம்.

## அல்சர் (குடல் புண்நோய்)

இந்நோயைச் சில இடங்களில் குறும வயிற்று வலி என்று சொல்கிறார்கள். சாப்பாட்டு நேரம் கடந்துவிட்டால் வலி மிக அதிகமாக இருக்கும். குடலில் அதிக அளவில் ஜீரண நீர் சுரந்து வயிற்றின் சுவர்களை அரித்துப் புண் ஏற்படுத்துவதாகக் கருதப்படுகின்றது. என்றாலும் இந்நாளில் இது ஒரு வகை நுண்கிருமிகளால் ஏற்படுத்தப்படும் நோய் என்ற கருத்து பரவி வருகின்றது. குடல் மடிப்புக்களில் இக்கிருமிகள் தங்கி குடல் சுவருக்குச் சேதம் ஏற்படுத்துவதே இதன் காரணமென்று சொல்லப்படுகிறது. வேளாவேளைக்கு உணவு உட்கொள்வது, காரமான உணவுகளைத் தவிர்ப்பது, மதுப்பழக்கத்தைக் கைவிடுவது, எரிச்சலூட்டும் உணவு வகைகளைத் தவிர்ப்பது ஆகியவை இந்நோயின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துகின்றன. புண் ஏற்பட்டுள்ள குடல் பகுதியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றுவதும் மேற்கொள்ளப்படுகிறது. வேளைக்குச் சாப்பிட இயலாத நிலை ஏற்படும்போது (பயண காலம் போன்ற நாட்களில்) மாத்திரை உண்டு வயிற்று அமிலத்தின் வீரியத்தைக் குறைக்கவும் செய்யலாம். என்றாலும் இதையே தொடர்ந்து செய்யக் கூடாது.

—ஏ.டபிள்யூ.முஹம்மட் ஸுஹைர், வடுகொட.

## வண்ணங்கள்

பக்ஷிராஜா

ஓர் அழகான காலைப் பொழுது. சூரியனை மறைத்துக் கார்மேகங்கள் உண்ணாவிரதமிருந்ததால், வெளிச்சக் கதிர்கள் பூமியைத் தழுவ முடியாமல் முடங்கிப் போயிருந்தன. குளிர் காற்று மெதுவாக வீச, உடல் சிலிர்த்துக் கொண்டது. காலை ஆறரை மணிக்கெல்லாம் குளித்து முடித்துவிட்டிருந்த எனக்கு அந்த சிலிர்ப்பில் சுகம் கிடைத்தது. அனுபவித்துக் கொண்டே ஆட்டோவை ஓட்டிக் கொண்டிருந்தேன்.

கொம்பனித் தெரு வழியாகச் சென்று, இராணுவத் தலைமையகம் வழியாகத் திரும்பி, ஹொலிடே இன் ஹோட்டலைக் கடந்து காலி வீதிக்குள் நுழைவதற்காக இடப்புறம் திரும்புகையில் அந்த அழகிய வெளிநாட்டு தேவதை கையை நீட்டினாள்; நிறுத்தினேன். செக்கச் சிவந்த மேனி; சற்று ஒடுங்கி முட்டை வடிவத்துக்கு நீண்டிருந்த அழகான முகம். கறுப்புக் கண்கள், கூந்தலும் கறுப்புத்தான். பழுத்த மிளகாய் நிறமொத்த சிறிய உதடுகள். முகம் பார்க்குமளவுக்கு வளவளப்பான கன்னங்கள்.

ஐந்தடி உயரத்தில் இருந்தாள். அளவான தேகக் கட்டு. கருநீல நிறத்தில் டெனிமும், இளநீல நிறத்தில் டீ ஷேட்டும் அணிந்திருந்தாள்.

தினம் தினம் எத்தனையோ பெண்களைப் பார்க்கிறோம்தான். ஆனால் எல்லோரைப் பற்றியும் இதயம் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் இந்த வெளிநாட்டு இளவரசி என் இதயத்தை அலட்டிக் கொள்ள மட்டுமல்ல ஆலோலம் பாடவும் வைத்து விட்டாள்.

இவள் எங்கு போவதென்றாலும் இலவசமாகவாவது ஏற்றிச் செல்வதென மனது தீர்மானித்துக் கொண்ட நேரத்தில் அழகான ஆங்கிலத்தில் கேட்டாள்.

"மவுண்ட்லெவினியா போக வேண்டும்!"

"ஏறுங்கள்"

'எவ்வளவு வேண்டும்?' என்று கேட்பாளென எதிர்பார்த்தேன். ஒரு வார்த்தை கூடப் பேசாமல், கீழே வைத்திருந்த சற்றுப் பெரிதான பையைத் தூக்கி ஆட்டோவுக்குள் வைத்து விட்டு ஏறிக் கொண்டாள்.

பேசிப் பார்க்கலாமென நினைத்தேன்.

"நீங்கள் எந்த நாடு...?"

"ஜேர்மன்..."

"எப்பொழுது இலங்கை வந்தீர்கள்?"

"முந்தா நேற்று வந்தேன்...!"

"எங்கள் நாடு எப்படி...? அழகாக உள்ளதா...?"

"ஆமாம்... மிகவும் அழகு. எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது!"

"உங்கள் பெயர் ....?"

"மார்கிரட்...!"

போகும் வழியில் ஒரு ஹோட்டல் முன் நிறுத்தச் சொன்னாள். தனக்குப் பசிக்கிறதென்று கூறிப் போனாள். இரண்டு மூன்று சிற்றுண்டிகளுடனும் இரு கொகாகோலாவுடனும் வந்தாள். எனக்கும் தந்தாள்.

சாப்பிடும் போது திரும்பி அவள் முகம் பார்த்து நன்றாகப் பேசக் கூடியதாகவிருந்தது.

அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"அழகாக ஆங்கிலம் பேசுகிறீர்களே. எங்கு கற்றுக் கொண்டீர்கள்?"

நான் மறைக்காமல் அந்த உண்மையைச் சொன்னேன்.

"நான் ஓர் ஆங்கில ஆசிரியன். எனினும், எனது சம்பளம் எனது குடும்பத்தினருக்கு செலவுக்குப் போதாது. எனவே மாலை நேரங்களிலும், சனி ஞாயிறு தினங்களிலும் ஆட்டோ ஓட்டுகிறேன்...!"

"ஏன்... டியூசன் வகுப்புகள் நடாத்தி மேலதிகமாகச் சம்பாதிக்கலாமே!"

"ஆட்டோவில் கிடைக்கும் வருமானம் போல அதிற் கிடைப்பதில்லை. தவிரவும் ஆட்டோ ஓட்டும் போது பல்வேறு வித்தியாசமான அனுபவங்கள் கிடைக்கின்றன. உதாரணமாக நான் டியூஷன் வகுப்பு நடாத்துவதாக இருந்தால் உங்களைப் போன்ற ஓர் அழகான ஜேர்மன் நாட்டுப் பெண்ணோடு இப்படி சாவகாசமாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்திருக்குமா?"

அவள் ஒப்புக் கொண்டு சிரித்தாள். பின்னர் திருமணம் ஆகிவிட்டதா என்றாள். இல்லை என்றேன்.



### ஓடுகிற ஓட்டோ ஓட...

### இன்னும் தான் அழுகிறேன்! 74

குடும்பம் என்று நான் குறிப்பிட்டது எனது தாய், தந்தை, மூன்று தங்கைகள், இரண்டு தம்பிமார் ஆகியோரைத்தான் என்று விளக்கம் சொன்னேன்.

அன்று மவுண்ட்லெவினியா ஹோட்டலில் அவளது அறைக்குள் என்னை அழைத்துச் சென்றாள். இயல்பாகப் பேசினாள். மதியம் வரை பேசிக் கொண்டிருந்தோம்.

தான் ஒரு கோடீஸ்வரரின் பெண் என்றாள். தனியாக உலகம் சுற்றுவதாகச் சொன்னாள். இங்கிருந்து நாளை மறுநாள் இந்தியா போய், பின்னர் சிங்கப்பூர் போய், அதன் பின்னர் ஜேர்மன் போய்விடுவாளாம்.

பகல் மிருகக் காட்சிசாலைக்குக் கூட்டிப் போனேன். மியூஸியம் அழைத்துப் போனேன்.

மாலை கோல்பேஸில் நடந்தோம். ஹோட்டலில் விட்டு வீடு திரும்பும் போது பணம் தந்தாள். கண்டிப்பாக மறுத்துவிட்டேன்.

அடுத்த நாளும் என்னை வரச் சொன்னாள். ஆட்டோவிலேயே ஹிக்கடுவ போய் வந்தோம். என்னை ஒரு நல்ல நண்பனாக ஏற்று, எனது விலாசம் எல்லாம் வாங்கினாள்.

அதற்கடுத்த நாள் நானே எயார் போட்டில் போய் ஏற்றிவிட்டு வந்தேன். பிரிகையில் என் இரு கன்னங்களிலும் முத்தம் தந்தாள்.

பதினைந்து தினங்களுக்குப் பின்னர் ஜேர்மனி வந்துவிட்டதாக போன் பண்ணினாள். தொடர்ந்து நான்கு மாதங்கள் கடிதங்கள், தொலைபேசி உரையாடல்கள். அவள் என்னை மணமுடிக்க விரும்புவது போலிருந்தது.

எனினும், இது விடயமாக நான் யோசிக்க வேண்டியிருந்தது. குடும்பத்தோடு பேசி, சம்மதம் தெரிவிப்பதற்காக ஒருநாள் தொலைபேசியை எடுத்தேன். மார்கிரட் இல்லை. தந்தைதான் பேசினார். அதிர்ச்சியான அந்த செய்தியைச் சொன்னார்.

அன்று காலை ஒரு வாகன விபத்தில் சிக்கி மார்கிரட்டும் அவளது தாயாரும் மரணமாகி விட்டார்கள் என்பதுதான் அந்தச் செய்தி.

இன்னும்தான் நான் அழுகிறேன்!

## திசைமாறிய பறவைகள்

தருபவர் : மணவை அசோகன்

### மர்லின் மன்றோ

இன்றைக்கும் அமெரிக்காவின் ஒரு கோடியில் இருந்து மறு கோடி வரை இருக்கும் முப்பது வயதுக்கு மேற்பட்ட எந்த அமெரிக்கனையும் தூக்கத்தில் தட்டி எழுப்பிக் கேட்டாலும் "ஓ! மர்லின் மன்றோவா? அவளைப் போல வருமா?" என்பான்!

ஆம்; "செக்ஸ் பாம்" என்று அழைக்கப்பட்ட அந்த மர்லின் மன்றோவின் எந்த அங்கத்தில் கவர்ச்சி இருந்தது என்று எவராலுமே கணித்துச் சொல்ல முடியவில்லை. ஒட்டு மொத்தமாக அவளைப் பார்த்தால் சுண்டியிழுக்கும் காந்த சக்தி மேனியழகின் ஒவ்வொரு அணுவிலிருந்தும் "குப்"பென்று பரவுவதைத்தான் மற்றவர்கள் பார்த்தார்கள்!

ஒவ்வொரு பெண்ணைப் பார்க்கிற போதும் ஒருவகை உணர்வு தோன்றும் என்பார்கள்.

சில பெண்களைப் பார்த்தால் காலில் விழுந்து வணங்க வேண்டும் போல் தோன்றும்! இன்னும் சில பெண்களைப் பார்த்தால் தாய்க்குத் தரவேண்டிய மரியாதையை, பக்தியைத் தரவேண்டும் போல் தோன்றும். சில பெண்கள் விளையாட்டுப் பொம்மைகளைப் போல!

ஆனால், சில பெண்களைப் பார்த்ததும் ஒரு முறையாவது அவளை தொட்டுப் பார்த்தால் என்ன, என்ற வெறி வயதேறியவர்களுக்குக் கூட வந்து விடுமல்லவா?

அப்படிப்பட்ட பெண்ணாக மர்லின் மன்றோ இருந்தாள்!

ஆரம்பத்திலிருந்தே செக்ஸ்தான் அவளைக் கைதூக்கி விட்டது!

சினிமாவில் நடிக்க வேண்டும்-நடித்துப் பேரும் புகழும் பெரும்பணமும் பெறவேண்டும் என்ற தணியாத ஆவலுடன் அவள் சொந்த ஊரிலிருந்து ஹாலிவூட்டுக்குப் புறப்பட்ட போது அவள் கையில் இருந்தது மூன்றே மூன்று டாலர்கள் தான்!

அவள் ஊருக்கும் ஹாலிவூட்டுக்கும் இருந்த தூரமோ ஆயிரம் மைல்கள்! இந்த ஆயிரம் மைல்களையும் வெறும் மூன்றே மூன்று டாலர்களுடன் மர்லின் எப்படிக் கடந்து சென்றாள்?



பறவை: 3 சிறகு: 1

அவளிடம் வெறும் மூன்று டாலர்கள் மட்டுமா இருந்தது?

விலைமதிக்க முடியாத இளமை அவள் உடலில் கொப்பளித்துக் கொண்டல்லவா இருந்தது?

பருவம் அவள் உடலில் கூத்தாடியது.

பாற்குடங்கள் அவள் நெஞ்சத்தில்!

தேன்குடங்கள் இதழோரத்தில்!

விழியோரங்களோ, காந்த மலைகள்!

இந்த மூன்றில் ஒன்றே ஒன்று இருந்தால் போதுமே - உலகத்தையே முப்பது முறை சுற்றி வரலாமே!

ஆயிரம் மைல் கடந்து ஹாலிவூட்டுக்குப் போய்ச் சேருவது மன்றோவுக்குப் பெரிய வித்தையாகப் படவில்லை. ரொம்பச் சுலபமாகப் போய்ச் சேர்ந்தாள். அங்கே போய் சேர்ந்து விட்டால் போதுமா?

நடிக்க சான்ஸ் கிடைக்க வேண்டாமா? ஏன் கிடைக்காது?

ஹாலிவுட்டில் இருப்பவர்களும் ஆண்கள் தானே? அந்த ஆண்களும், முற்றும் துறந்த முனிவர்களா என்ன?

பசி எடுத்து அலையும் வேங்கைக் கூட்டமாக ஹாலிவூட் இருந்தது. அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் குறையாத அட்சயப் பாத்திரமாக மன்றோ இருந்தாள்! மன்றோவுக்கு சான்ஸ் கிடைக்கக் கேட்பானேன்!

அவள் நடித்த முதல் படம் வந்தது. பிரமாத வெற்றி பெற்றது!

ஒரே இரவில் மர்லின் மன்றோ ஒரு தேசத்துக்கே காதலியாகி விட்டாள்.

மனைவி தூங்கிய பிறகு மன்றோவின் படத்தை எடுத்து முத்தம் கொடுக்காமல் தூங்கிய அமெரிக்கக் கணவன்மார்கள் ரொம்பக் கொஞ்சம் பேர்தான்.

அப்படி அமெரிக்கர்கள் அனைவரின் கண்களிலும் மர்லின் பட்டு விட்ட பிறகு -

அப்பொழுது

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடியின் கண்களில் மட்டும் படாமல் தப்ப முடியுமா, என்ன?

கென்னடியின் கண்களில் மன்றோ பட்டாள்!

பட்டுத் தெறித்தாள்!

அவ்வளவுதான்!

மறுநாளே, மர்லினுக்கு அழைப்பு வந்தது ஜனாதிபதியிடமிருந்து!

அமெரிக்காவில் ஜனாதிபதி அழைக்கிறார் என்றால் அது மிகப் பெரிய கௌரவம்! யாருமே அதைத்தட்ட மாட்டார்கள்! மர்லினும் போனாள்!

ஜனாதிபதியின் "ஓவல் ஆபீஸ்" என்று அழைக்கப்படும் அலுவலகத்துக்குப் போனாள்.

ஆனால். அங்கே போன பிறகுதான் தெரிந்தது ஜனாதிபதி தமது படுக்கையறையில் ஓய்வெடுப்பதாகவும் அங்கேயே போய் அவரைப் பார்க்கலாம் என்றும்!

அழைப்பது அதிபர் அல்லவா?

அது படுக்கையறையாக இருந்தால் என்ன பள்ளியறையாக இருந்தால் தான் என்ன?

பறந்தோடிப்போனாள், மர்லின்!

அங்கே படுத்தபடி முனகிக் கொண்டிருந்தார் கென்னடி.

(இரண்டாவது உலகப் பெரும்போரில் கென்னடி கலந்து கொண்டபோது, ஒரு துப்பாக்கி ரவை அவர் முதுகெலும்பைத் துளைத்ததிலிருந்து அவருக்கு அடிக்கடி இப்படி வலி வருவதுண்டு என்று அமெரிக்கர்கள் அனைவருக்குமே தெரியும்)

*(சிறகுகள் விரியும்....)*

## கேட்டால் கிடைக்கும்

தருபவர் : ஸகீ

📖 காமம் இல்லாத காதல் கிடையாது! இது உண்மை தானே?

*-எஸ்.எச்.எம்.ரி:பாய், கல்முனை.*

✍ காதலுக்குள் காமம் ஒளிந்திருப்பது நிஜம்தான்! அதற்காக காதலையே கொச்சைப்படுத்துவது அநாகரிகமானது. இயல்பான பருவ உணர்ச்சிகளுக்கு வாழ்க்கை முழுவதிலும் வரக்கூடியதான ஒரு வடிகாலைத் தேடுவது குற்றமல்லவே!

📖 நடிகை ரோஜா கொடுத்த காசோலை ஒன்று திரும்பி விட்டதாமே..?

*-வாணி ராகவன், காரைதீவு.*

✍ மார்க்கட் இல்லாத ரோஜா இப்போது ஒரு காகிதப்பூ! காகிதப் பூவில் தேனைத் தேடினால் எப்படி வரும்?



📖 எவ்வித இலட்சியங்களுமின்றி வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்களைப் பற்றி?

*ஜெயந்தி சிதம்பரம், புத்தளம்.*

✍ இலக்கு என்ற ஒன்று வாழ்க்கைப் பயணத்தில் இருக்க வேண்டும்! அப்போதுதான் அதை நோக்கி முன்னேற முடியும்! இலட்சியங்களோ, தேடல்களோ அற்ற வாழ்க்கை சூன்யமானது! பிறந்தோம்! வாழ்ந்தோம்! மறைந்தோம்! என்பதெல்லாம் அஃறிணைகளுக்குத்தான்! இதுவரை காலமும் பூஜ்யங்களாக இருந்து விட்டதற்காகக் கவலைப்படாதீர்கள்! இனியாவது ஒரு சின்ன இலக்கத்தை உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள் அப்புறம் பெறுமதி கூட்டப்பட்ட வரி போல உங்கள் வாழ்க்கையும் உச்சத்துக்குப் போய்விடும்.

📖 எம்.ஜி.ஆரின் நடிப்பு உங்களுக்குப் பிடிக்குமா?

*-சுகுமாரன், பண்டாரவளை.*

✍ பிடிக்காது! என்னைப் பொறுத்தவரை அவர் நடிக்கவே தெரியாத ஒரு நடிகர்! ஆனால் அவரின் படங்கள் அனைத்திலும் நல்ல பல கருத்துக்கள் பரவியிருக்கும். அவற்றால் மக்கள் பயனடைந்தார்களோ என்னவோ... எம்.ஜி.ஆர் பயன் அடைந்தது உண்மை தான்! நடிக்கத் தெரியாமல் விட்டாலும் பிழைக்கத் தெரிந்த மனிதர் அவர்!

📖 ஸகீ...! கேட்காமலே கிடைப்பது என்ன?

*-வேலன் நிதாஜினி, பெரிய கல்லாறு.*

✍ வண்ணக் கனவுகள்! ஆகவே இலவசமாகக் கிடைக்கும் கனவே... கலையாதே!

📖 ஒன்றை இழந்துதான் மற்றொன்றை அடைய வேண்டுமா? இது உண்மையா?

*-என்.திருக்கேஸ், கொழும்பு 13.*

✍ உண்மைதான்! ஒரு நாடு உருவாகுவதே பல்லாயிரம் உயிர்களின் இழப்பில்தான்! உழைப்பின் இழப்பில்தான் பணம் வருகிறது. பணத்தின் இழப்பில் தான் பண்டங்கள் வாங்குகின்றோம். நிம்மதியை இழந்து தான் வாழ்க்கையை நடத்துகிறோம். இப்படி ஒவ்வோர் இழப்பும் ஒவ்வொரு ஆரம்பம்தான்! ஆரம்பம் இல்லாத இழப்பு, மரணம் ஆகும்! ஏனெனில் அது வாழ்வின் முற்றுப் புள்ளி.

📖 டியர் ஸகீ... கோபம் 50 கிராம், சந்தோஷம் 650 கிராம், சிரிப்பு 300 கிராம், நட்பு 1கிலோ இவற்றைத் தர முடியுமா?

*-எம்.எஸ்.எம்.பாஹிர், வெலிகம.*

✍ நீங்கள் கேட்டவை எல்லாமே கிடைக்கும்- கோபத்தைத் தவிர! அது ஒரு சாபம்! அதையேன் கேட்டு வாங்க வேண்டும்?

📖 மறைந்த நடிகர் கே.ஏ. ஜவாஹர் பற்றி?

*-எம்.ஐ.அப்துல் காதர், அக்கரைப்பற்று.*

✍ இலங்கையின் சிவாஜி!

## மின்னல்

என்.அமிராம்

# மணக்கும் முற்றத்து மல்லிகை

## சகலகலா சக்கரவர்த்தி சாந்தி முகைதீன்

பல்துறைக் கலைஞர், சகல கலா வல்லவர் சாந்திமுகைதீன் இவ்வார முற்றத்து மல்லிகையாக மணம் பரப்புகிறார்.

வில்லுப்பாட்டு, களிகம்பு, சிலம்பு, நாடகம், விவாதம், கவிதை, பேச்சு, விமர்சனம் போன்ற ஏராளமான துறைகளில் கால் பதித்து இன்றும் அத்துறைகளோடு நெருக்கமான ஈடுபாடு கொண்டிருக்கும் அற்புதமான கலைஞர் சாந்தி முகைதீன். காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டு அங்கேயே வசித்து வரும் இவரின் பெயர் அகமது லெவ்வை. இலக்கியத்துக்காக தனது பெயரைச் சாந்தி முகைதீன் என வைத்துக்கொண்ட இவரின் கவியரங்குகள், விவாத மேடைகள் தேசிய ரீதியாகப் பிரபலம் வாய்ந்தவை.

'கம்பன் வீட்டுக் கைத்தறியும் கவிபாடும்' என்பது போல, கவிஞர் சாந்தி முகைதீன் அவர்களின் கவியரங்கு கேட்டால் கதிரை மேசை கூட கைதட்டிப் பாராட்டும். சொல்லாடல் அரங்குகளில் இவரின் தர்க்கித்தல் முறை தனித்துவமானது. சிந்து பாடுவதிலும், சிரிப்பாய்க் கருத்துகளை நகர்த்துவதிலும் இவருக்கென்று தனியிடமொன்றுள்ளது.

**எம்.எம். ஜுனைதீன்,**
**காத்தான்குடி.**

பல்கலைச் சக்கரவர்த்தி சாந்தி முகைதீன் அவர்களின் கலை - இலக்கியப் பணிகளை கௌரவிக்குமுகமாக அண்மையில் வடகிழக்கு மாகாண ஆளுனர் விருது வழங்கப்பட்டது. அவரை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது...

**எத்தனையாம் ஆண்டு இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்தீர்கள்?**

இளவயதிலேயே கலை இலக்கிய ஈடுபாடு என்னில் துளிர்விடத் தொடங்கிவிடட்து. 1958ம் ஆண்டளவில்தான் எனது இலக்கியப் பயணம் முதலாவதாக ஆரம்பித்தது என எண்ணுகிறேன்.

**தாங்கள் முதலாவதாக எழுதிய கவிதை எது? அண்மையில் எழுதி வெளியான கவிதை எது?**

14.09.1963ம் ஆண்டு வீரகேசரி பத்திரிகையில் "இஸ்லாமிய உலக மலர்" என்ற சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. அதில் 'வெண்ணிலாவே' என்ற தலைப்பில் எழுதியதுதான் எனது முதல் கவிதை. 06-05-2002ல் நவமணி பத்திரிகையில் "எங்கள் தலைவா நீ வருக" என்ற தலைப்பில் எழுதியது கடைசியாகப் பிரசுரமான எனது கவிதை. இலங்கையின் அனைத்து தேசிய நாளிதழ்களிலும் வாரப் பத்திரிகைகளிலும் எனது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இந்தியப் பத்திரிகைகள் கூட எனது கவிதைகளைப் பிரசுரித்திருக்கின்றன.

**இலக்கியப் போட்டிகளில் கலந்துகொண்டு பெற்ற பரிசுகள் பற்றி கூறுங்கள்?**

1960ல் காத்தான்குடி கல்வி சகாய நிதியம் நடாத்திய பேச்சுப் போட்டி முதல் அண்மையில் நடைபெற்ற மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களது ஞாபகார்த்தக் கவிதைப் போட்டிவரை பங்கேற்று பல பரிசில்கள், சான்றிதழ்களைப் பெற்றுள்ளேன். "சாந்தி முகைதீன்" என்ற எனது புனைப் பெயர் கூட 1960ம் ஆண்டு மர்ஹூம் நாவலர் தாவூத்ஷா அவர்களால் வழங்கப்பட்டதுதான். வித்துவான் எம்.ஏ.றஹ்மான் அவர்களால் 01-10-2000ம் ஆண்டு "பாவலர் விருது" வழங்கப்பட்டது. 01-10-2001ல் வடகிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சினால் "ஆளுனர் விருது" வழங்கப்பட்டது. 17-03-2002 ல் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையினால் "இலக்கியச் சுடர்" எனும் இலக்கியச் சேவைக்கான விருது வழங்கப்பட்டது. 09-06-2002ல் இலக்கிய வித்தகர் என்ற கௌரவப்பட்டம் காத்தான்குடி ஜாமிஅதுஸ் ஸித்தீக்கிய்யா அரபிக் கலாபீடத்தில் எனக்கு அளிக்கப்பட்டது.

**இதுவரை நீங்கள் வெளியிட்டுள்ள நூல்கள் பற்றிச் சொல்ல முடியுமா?**

காரணக்குரிசில், அரங்கக் கவிதைகள், வில்லிசைக் காதை, பதற்சோறு ஆகியவற்றை கையெழுத்துப் பிரதிகளாகத் தொகுத்து வைத்திருக்கிறேன். இன்னும் அச்சுருவில் நூலாக வெளிக்கொணரவில்லை. இதற்குக் காரணமும் உண்டு. நூல் வெளியிடப் போய் பல சிறந்த எழுத்தாளர்கள் புத்தக வியாபாரிகளாக மாறியுள்ள அவலம் பரிதாபகரமானது. நாணயம் மிக்கவர்களையும், நல்ல கவிஞர்களையும், பல நூல்களை வெளியிடும் ஆற்றல் உள்ளவர்களையும் நான் உருவாக்கிவிட்ட திருப்தியில் இருக்கிறேன். எனது எச்சங்கள் வேண்டுமானால் எனது படைப்புகளை நூலுருவில் வெளிக்கொண்டு வரட்டும்.



மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை, சாந்தி முகைதீன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கிறது.

**கலை ~ இலக்கிய வாழ்வில் மறக்கமுடியாதவை?**

ஏதாவது ஒரு சிறப்பு கிடைக்கும் போது எம்முடன் இணைந்திருந்தவர்களே எமக்கெதிரிகளாக மாறி 'அனாமதேயப் பெட்டிசன்கள்' அடிப்பதை மன்னித்தாலும் மறக்கமுடியாது.

**தாங்கள் முன்னெடுக்கும் இலக்கியப் பணிகள் பற்றி...?**

கடந்த 42 ஆண்டுகளாக காத்தான்குடியில் மிகச்சிறப்பாக இயங்கி வரும் "நல இலக்கிய மன்றம்" என்ற அமைப்பின் ஸ்தாபகர்களில் நானும் ஒருவன். அதன் தலைவராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன். மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையை ஆரம்பித்தது முதல் அதன் நிர்வாக ஆலோசனைப் பணிப்பாளராக இருந்து வருகிறேன். மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை உறுப்பினராகவும், காத்தான்குடி பிரதேச கலாசாரப் பேரவையின் உப தலைவராகவும் அங்கம் வகித்து கலை - இலக்கியப் பணிகளைத் தொடருகின்றேன்.

**இலக்கிய உலகில் புதிதாக நுழைபவர்களுக்கு உங்களின் ஆலோசனை என்ன?**

நிறையப் படியுங்கள். ஆழமாகச் சிந்தியுங்கள். அற்புதமாகப் படையுங்கள். அனைவருக்கும் புரியக்கூடியதாக எழுதுங்கள்.

**தங்களது இலக்கிய வழிகாட்டியாக யாரைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்?**

எவரையும் குறிப்பிட முடியாது. இறைவனின் அருளாளும், சுயமான தேடல்களாலும் எனக்குக் கிடைத்த வெற்றி இது. ஆனாலும் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன், தமிழ் முழக்கம் முகம்மது காசிம் ஆலிம் புலவர், எம்.ஐ.தாவூத்ஷா, பாவலர் எல்.கே. முகைதீன் பிச்சை, கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பை, உமறுகத்தா அண்ணாவியர், கலாநிதி வித்துவான் கமலநாதன் ஆகியவர்ங்களை என்னால் மறக்கமு டியாது.

**மரபுக் கவிதையிலேயே கூடுதல் பரிச்சயம் கொண்ட நீங்கள் புதுக்கவிதை பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

கவிதைகள் அனைத்தும் புதுக்கவிதைகள் தான். ஒவ்வொரு கவிதையும் கவிஞன் எண்ணத்தில் கருக்கொண்டு உயிர்பெறும்போது புதுசு புதுசாகத்தான் பிறக்கின்றது. ஆகவே கவிதைகள் அனைத்தும் புதியவையே!

**கவிதை எழுதுபவர்களுக்கு என்ன கூறுகிறீர்கள்?**

உனது கவிதைக் குழந்தை இசைந்து - அசைந்து நடனமிடுவதை நீ பார்க்கவிரும்பினால் ஓசை, அசை, எதுகை ஆகியவைகளைச் சேர்த்துக்கொள். அது நடனமிடத் தேவையில்லை. அது அதுவாகவே இருந்தால் போதும் என்று நினைக்கின்றாயா? மேற்சொன்ன இலக்கண வரப்புகளை நீக்கிக் கொள். ஆனால் நீக்க வேண்டியவைகளையும், சேர்க்க வேண்டியவைகளையும் நீ சரியாகத் தெரிந்துகொள்ளத் தவறிவிடாதே! அப்போதுதான் நீ ஒரு முழுமையான கவிஞனாய் ஆகலாம்.

## ஒரு வாசகியின் உள்ளக் குமுறல்

நமது வானொலிக் கலாசாரம் எத்தனை பெரிய சீரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை அறியும்போது வேதனையாக இருக்கிறது. குறிப்பாக தனியார் வானொலிகள் உதயமாகி சொற்ப காலங்கள்தான் சென்றிருக்கின்றன. அதற்குள் அவை ஒன்றோடு ஒன்று முட்டி மோதுகின்ற கேவலத்தைப் பார்க்கின்றபோது வானொலி கேட்பதையே நிறுத்திவிட வேண்டும் போல் தோன்றுகின்றது. அண்மைக்காலமாக ஒரு தனியார் வானொலி, மற்றொரு தனியார் வானொலியை "கடலுக்குள் விழப்போகிறார்கள்" என்று அடிக்கடி தாக்கி வருகிறது. இவை தவிர ஒலிபரப்பப்படும் சண்டித்தனமான திரைப்பட வசனங்கள் கூட தனியார் வானொலிகள் பொறாமையின் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. தனியார் வானொலிகள் ஒன்றை ஒன்று தாக்கி வசைபாடுவதை காதால் கேட்கமுடியாதிருக்கிறது. முதல்தர வானொலி என்று கூறிக்கொண்டு மோதலுக்கு நிற்கிறார்கள் ஒரு சாரார். இவர்கள் வானொலியை வம்பு செய்யும் ஒரு களமாக மாற்றிக்கொண்டு வருகிறார்கள். இந்நிலைமை தொடர்ந்தால் வானொலிக் கலாசாரம் எங்கு போய் நிற்குமோ தெரியவில்லை. சண்டையையும் - பொறாமையையும் வளர்ப்பதற்காக வானொலியைப் பயன்படுத்துவதை விட்டுவிட்டு அறிவிப்பாளர்கள் தரமான நிகழ்ச்சிகளை நேயர்களுக்கு வழங்குவதற்குப் பாடுபட வேண்டும் என 'மின்னல்' மூலம் கேட்டுக்கொள்கிறேன்

*—எஃப்.றிம்ஸா, புத்தளம்.*

## நந்திராஜன் எங்கே?

இலங்கை வானொலி தென்றலின் ஒரு இளம் அறிவிப்பாளர் ஏ.ஆர்.நந்திராஜன். ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை தனது புயல் வேக அறிவிப்பினால் ரசிகர்கள் பலரிடையே வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டாலும், அவரின் அறிவிப்பில் இனிமை கண்ட ரசிகர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவருக்கு சிறந்த குரல் வளம், பொது விடயங்களில் சிறப்புத் தேர்ச்சிகள் பல இருந்தும் அவரது அவசர அறிவிப்பினால் அவையெல்லாம் சுவையிழந்து போகிறது. ஆனாலும் இங்கே பிரச்சினை அதுவல்ல. அண்மைக்காலமாக ஏ.ஆர்.நந்திராஜனை தென்றலில் காணவில்லை. அவர் சிறப்பாகத் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்த சுவடுகள் நிகழ்ச்சியிலும் அவரது குரலைக் கேட்கமுடிவதில்லை. இலங்கை வானொலியின் வேறு சேவைகளில் அவர் பணிபுரிகிறாரா? வானொலி அபிமானிகள் அவரது வருகையை மீண்டும் எதிர்பார்தது காத்திருக்கின்றனர்.

*—எஸ்.ஐனூாஸ், சாய்ந்தமருது-03.*

## தனித்துவ வானொலி

கடந்த மாதம் சக்தி எப்.எம் நடாத்திய "பாட்டு மேடை" நிகழ்ச்சி மலையக நேயர்களுக்குப் புதியதாக இருந்தாலும், கேட்பதற்கு மிக இனிமையாக அமைந்திருந்தது. பழைய பாடல்களைப் பாடிய அபர்ணா, பிரேம் ஆகியோர் மிகவும் அற்புதமான முறையில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். புதிய இளம் கலைஞர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட "பாட்டு மேடை" நிகழ்ச்சி உண்மையிலே தரமானதாகவும், தனித்துவமானதாகவுமே அமைந்திருந்தது. உலக வானொலி சக்தி எப்.எம்மால் மாத்திரம்தான் இவ்வாறான அருமையான நிகழ்ச்சிகளைத் தரமுடியும் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகின்றது.

*—க.ஜெயக்குமாரி, லிந்துல.*

## குழறுபடிக்கு முற்றுப்புள்ளி

ரூபவாஹினியிலும் சரி, சக்தி டி.வியிலும் சரி செய்தியறிக்கை வாசிக்கும்போது வெளிநாட்டுச் செய்திகளை விளையாட்டுச் செய்திகள் என்றும், விளையாட்டுச் செய்திகளை வெளிநாட்டுச் செய்திகள் என்றும் மாற்றிச் சொல்வது சில சமயங்களில் வாடிக்கையாகிவிட்டது. இதறகுக் காரணம் அறிவிப்பாளர்களின் அவசரம் மட்டுமல்ல, இந்த இரண்டு சொற்களுக்கும் உச்சரிப்பில் உள்ள ஒற்றுமையும்தான். உச்சரிப்பில் உள்ள ஒற்றுமையைத் தகர்ப்பதன் மூலம் இந்தக் குழறுபடிக்கு முடிவு கட்டலாம். வெளிநாட்டுச் செய்திகளை சர்வதேசச் செய்திகள் என்றும், விளையாட்டுச் செய்திகளை ஆடுகளச் செய்திகள் என்றும் வாசித்தால் எந்தக் குழறுபடியும் ஏற்படாது.

*—சுபி, அனுராதபுரம்.*

## தனித்துவம் எங்கே?


சக்தி எப்.எம் கொஞ்சம் கொஞ்சமாகத் தனது தனித்துவத்தை இழந்து வருவது போலத் தெரிகிறது. "தமிழுக்குத் தனியிடம்! தரத்துக்கு முதலிடம்!" என்ற வாக்கியங்கள் இப்போது சக்தி எப்.எம்மில் ஒலிப்பதில்லை. எஸ்.எழில்வேந்தன் பணிப்பாளராக இருந்த சமயத்தில் 'வணக்கம் தாயகம்' நிகழ்ச்சியில் மாணவர்கள் பாடசாலை நேரத்தில் பங்குபற்றக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. இப்போது அது இல்லை. பாடசாலை மாணவர்கள் இப்போது தொடர்ச்சியாக 'வணக்கம் தாயகம்' நிகழ்ச்சியில் பங்குபற்றி வருகிறார்கள். இது மாணவர் சமுதாயத்தைப் பாதை மாறச் செய்யும் ஒரு செயலாகும். அத்துடன் தமிழ்மொழி தெரியாத ஒருவர் பணிப்பாளராக சக்தி எப்.எம்மிற்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. சிலவேளை இதனால்கூட சக்தியின் தரம் குறைந்துபோக இடமுண்டு. எனவே, தமிழ் தெரிந்த ஒருவரே சக்தி எப்.எம்மிற்குப் பணிப்பாளராக இருக்கவேண்டும். அப்போதுதான் தமிழுக்குத் தனியிடம் வழங்கி தரத்தில் முதலாவதாக சக்தி எப்.எம் மாறும்.

*—க.ஜீவானந்தன், தெஹியோவிற்ற.*

## தொலைபேசி தொல்லைபேசியானது

எம் நாட்டு சொந்த வானொலிதான் தென்றல். தென்றலில் தொகுத்து வழங்கப்படும் நிகழ்ச்சிகளுள் அனேக நிகழ்ச்சிகள் தொலைபேசி நிகழ்ச்சிகளாகத்தான் உள்ளன. இதனால் வானொலி கேட்டு ரசிப்பதில் ஒரு அருவருப்பை ஏற்படுத்தி வானொலியை மூடுமளவுக்கு நேயர்களைத் தள்ளிவிடுகிறது தென்றல். தொலைபேசி நிகழ்ச்சிகளைக் குறைத்து நேயர்களைக் கவரும் விதமாக தென்றல் வானொலி மாறவேண்டும் என்பது எனது கருத்து.

*—ஜமால்தீன் றிபாய்தீன், சாய்ந்தமருது-10.*



அண்மையில் புனித ஜோஸப் கல்லூரி விளையாட்டரங்கில் சக்தி எ.ப்.எம், சக்தி ரீ.வி. அனுசரணையில் இடம்பெற்ற 'சின்னத்திரை மசாலா' நிகழ்ச்சியின்போது கலந்துகொண்ட தென்னிந்திய சின்னத்திரை நட்சத்திரங்களைப் படங்களில் காணலாம்.

(படங்கள் : எஸ்.ஆர்.தாஸ்)

கேள்வி பதில் சினிமனம்

ஷாம் நடிக்கும் புதிய படம் எது?
—எம்.எஸ்.நஸீஹா, ஏத்தாலை.

பெப்சி, கண்மணி நீவரக் காத்திருந்தேன்.

பேசாமல் சிரிக்க வைத்த நடிகர்கள் உண்டா?
—எம்.எம்.பாரிஸ், காத்தான்குடி.

என்.எஸ்.கிருஷ்ணன், தங்கவேல், சந்திரபாபு, சுருளிராஜன், தேங்காய் சீனிவாசன் எனப் பெரிய பட்டாளமே உண்டு. ஆனால், படம் முழுவதும் பிணமாக நடித்து சிரிக்க வைத்த நாகேஷை வெல்ல யாராலும் முடியாது.

நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவதால் யாருக்கு நன்மை?
—பி.பார்த்திபன், வவுனியா.

அரசியல் கட்சிகளுக்கு நன்மை. நடிகர்களுக்கு சிலவேளை தீமை ஏற்படுவதும் உண்டு.

கதாநாயகனாக நடித்து வந்த ஜெய்சங்கர் எந்தப் படத்தின் மூலம் வில்லனாக மாறினார்?
—எஸ்.ஜெயந்தி, மன்னார்.

முரட்டுக்காளை. வில்லனாக நடித்து வந்த ரஜினி இப்படத்தின் மூலம் கதாநாயகனாக மாறினார்.

சொந்தக் குரலில் பாடக் கூடிய நடிகை யார்?
—எம்.அகல்யா, வவுனியா.

தற்போதைய நடிகைகளில் மனோரமா மட்டும்தான் பாடக்கூடியவர்.

என்றைக்கும் இல்லாத வகையில் புதிய நடிக, நடிகையர் அறிமுகமாகியுள்ளனரே இது ஆரோக்கியமானதா?
—ஜி.முருகுந்தன், கண்டி.

திறமை உள்ளவர்கள் நிலைப்பார்கள். ஏனையவர்கள் காணாமல் போய்விடுவார்கள்.

விபச்சார விடுதி நடத்திய குற்றச்சாட்டில் முன்னாள் நடிகை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளாரே?
—எம்.சுபத்திரன், மருதானை.

உரிய மாமூல் கொடுக்காததால் காட்டிக் கொடுக்கப்பட்டார்.

ஜெயலலிதா சிறந்த நடிகையா? அரசியல்வாதியா?
—ஜே.சஹானா, வாழைச்சேனை.

அவர் இன்னும் சிறந்த நடிகைதான்.

இன்றைய திரைக் கதைகளுக்கும் தலைப்புகளுக்கும் தொடர்பு இல்லையே?
—எச்.எம்.பர்ஹானா, கொழும்பு-02

பல படங்கள் ரசிகர்கள் மத்தியில் பேசப்படாததற்கு இதுவும் ஒரு காரணம்.

ஒருவரைக் காதலித்து இன்னொருவரைத் திருமணம் செய்பவரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
—கே.சுதாகர், அக்கரைப்பற்று-09

இது சினிமாவுக்கு ஒத்துவரும். வாழ்க்கைக்கு இலகுவில் ஒத்துவராது.

# ரஜினியை கைவிட்ட ரஹ்மான்

ரஜினி ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு என்னால் இசையமைக்க முடியாதென ஏ.ஆர்.ரஹ்மான் மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார். ரஹ்மானின் பெயருக்காகவும், ரஜினி என்ற பெயரின் மந்திர சக்தியாலும் மட்டுமே ஒலிநாடா பல கோடிகளுக்கு விற்பனையானது.

"ஓம்" என்ற ஒலியுடன் "பாபா" தீம் ஆரம்பமாகிறது. இப்பாடலை ரஜினி ரசிகர்கள் பொறுமையாகக் கேட்கமாட்டார்கள். அவசர அவசரமாக அடுத்த பாடலுக்குத் தாவிவிடுவார்கள்.

"பாபா சினிமா சினிமா" என்ற பாடல் ரஜினியின் அறிமுகப் பாடலாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. கடந்த கால ரஜினி படங்களில் அறிமுகப் பாடலை எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடியிருந்தார். இம்முறை அந்தச் சந்தர்ப்பம் சங்கர் மகாதேவனுக்குக் கிடைத்துள்ளது.

வாழ்க்கையை மூன்று காலங்களாகப் பிரித்துள்ள இத்தத்துவப் பாடல் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டவில்லை. என்றாலும் திரையில் இப்பாடலின்போது ரஜினியைக் கண்டதும் ரசிகர்கள் கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். பாடலின் வெற்றி ரஜினியை மாத்திரம் சார்ந்திருக்கும்.

"பாபா கிச்சு கிச்சுதா" என்ற டூயட் பாடல் ஓரளவு ரசிக்கக்கூடியதாக உள்ளது. எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் இளமையான குரல் பாடலுக்கு மெருகூட்டுகிறது. "நானாக நானிருந்தால் நாட்டுக்கே நல்லதடி" என்ற வைரமுத்துவின் வரிகள் யாருக்குச் சவால் விடுகிறது என்பதை படம் பார்க்கும் ரசிகர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

ஏனைய மூன்று பாடல்களிலும் ஆன்மீகமும், தத்துவமும் கலந்துள்ளன. "வெற்றிக் கொடிகட்டு", "கிக்கு ஏறுதே" ஆகிய பாடல்கள் போல் இப்பாடல்கள் இல்லை என்பது ரஜினி ரசிகர்களின் ஒட்டுமொத்த அபிப்பிராயம்.

மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டாலும் தமிழ்ப் பாடல்கள் மூலமும் தேசிய விருது பெற்ற ஜெயச்சந்திரனின் குரலில் "ராஜ்ஜியமா இல்லை இமயமா" என்ற பாடல் கணீரென ஒலிக்கிறது. பல்லவி நெஞ்சை உருக்குகிறது. ஆனால் சரணம் வழமைபோல களை இழந்துவிடுகிறது. கார்த்திக் பாடிய "மாயா மாயா" பாடலும் தரமற்றதாகவே உள்ளது. "பாபா" படத்தின் இறுதிக்கட்ட பாடலான "என் நடை கண்டு" வெகு சாதாரணமாக அமைந்துள்ளதால் பாடலாசிரியர் வைரமுத்துவும், பாடகர் கார்த்திக்கும் காணாமல் போய்விடுகிறார்கள்.

# அல்போன்சாவின் அதிரடி ஆட்டம்

எஸ்.எஸ்.ஆர். மூவிஸ் தயாரிக்கும் "கார்மேகம்" படத்தில் அல்போன்சா கவ... நடனம் ஆடியுள்ளார். "ஸ்ரீரங்க பட்டணத்தில் சிங்காரியா நான் பொறந்தேன். கா... பட்டணத்தில் கச்சிதமா நான் வளர்ந்தேன்" என்ற பாடலுக்கு அல்போன்சா அ... காட்சி கோபி செட்டிபாளையத்தில் படமாக்கப்பட்டது. மம்முட்டி, அபிராமி ஜோடி... நடிக்கும் இப்படத்தில் மனோரமா, ராதாரவி, வடிவேல், சி.ஆர்.சரஸ்வதி, வினுச்சக்கரவ... தலைவாசல் விஜய், ஆகியோருடன் சுபாஷ், ஜீவா, பிரியதர்ஷினி அறிமுகமாகிறார்...


'பாபா' ரஜினிகாந்த், கவுண்டமணி, மனிஷா, காவியாமாதவன்

# சிம்ரனின் ஆசை

சினிமாவின் நெளிவு சுளிவுகளை மிகச்சரியாகத் தெரிந்து கொண்ட சிம்ரன் தேசிய விருது பெறும் ஆசையில் உள்ளார். "கோவில்பட்டி வீரலட்சுமி" படத்தில் சிம்ரன் இது வரை ஏற்றிராத வித்தியாசமான பாத்திரத்தில் நடிக்கிறார். பொலிஸ் அதிகாரியால் பாதிக்கப்படும் தவித் பெண்ணான சிம்ரன் ஆயுதம் தூக்கி நியாயத்துக்காகப் போராடுகிறார்.

ஜாக்கெட் அணியாது அசல் கிராமப் பெண்ணாகத் தோன்றும் சிம்ரன், சாம்பல், மண் என்பனவற்றை உடலில் பூசி நடித்துள்ளார். சண்டைக்காட்சிகளில் உண்மையான ஆயுதங்கள் பாவிக்கப்பட்டுள்ளன. சிம்ரனின் ஜோடியாக மும்பை சோனு நடிக்கிறார். இவர் "க்ள்ளழகர்", "ராஜா" ஆகிய படங்களில் நடித்துள்ளார். சினிமா உலகி... வரை எந்தவொரு படத்து... கொடுக்காத முக்கியத்துவ... சிம்ரன் இப்படத்துக்குக் கொ... வருகிறார். கமலைப் போன்று... விருது பெறும் ஆசையில் ... சிரமப்பட்டு நடிக்கிறார்


'ரன்' மாதவன் — மீராயாஸ்மின்




'தில்' சீயான் விக்ரம்

# 'என் தாய் மீது கை வைப்பதா?' ரவுடிகளோடு கட்டிப்பிடித்து உருண்ட உதயா!

ருத்ரா தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவன். அவனது ஒரே குறிக்கோள் வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்பது அவன் எதிரே என்ன மாதிரி யான தவறுகள் நடந்தாலும் கண்டுகொள்ள மாட்டான்.


மார்க்கெட்டில் போய்க் கொண்டிருந்த அவனை நோக்கி ஓடி வந்த பக்கிரி, 'டேய் ருத்ரா மார்க் கெட்டில் ஒரு பெண்ணை ரவுடி கும்பல் ரொம்ப மோசமாக கலாட்டா செய்துட்டு இருக்காங்கடா' என்றான்.

அதைக் கேட்டும் கண்டுகொள்ளாமல போய்க் கொண்டிருந்தான் ருத்ரா. 'அந்த ரவுடிகளை தட்டிக் கேட்கப்போன உங்க ம்மாவை தள்ளிவிட்டுட்டாங்கடா' என்றான் பக்கிரி.

அதைக் கேட்டு ஆவேசமடைந்த ருத்ரா, வெறிபிடித்தவன் போல் ரவுடிகளை நோக்கி ஓடினான். எல்லோரையும் ஓட ஓட அடித்து விரட்டினான். ருத்ராவின் தாய் எவ்வளவோ தடுத்தும் கேட்காமல், வெறிவந்த மாதிரி அடித்தான்.

இப்படியொரு காட்சி ராமையயா கிரியேஷன்ஸ் 'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்திற்காக படமானது. ருத்ராவாக உதயா, பக்கிரியாக பாலாஜி, தாய் கண்ணம்மாவாக கலாராணி நடித்தனர். மற்றும் மான்யா, ராம்ஜி, சாப்ளின்பாலு, வினுசக்கரவர்த்தி, டெல்லி கணேஷ் ஆகியோரும் நடிக்கிறார்கள்.


'கார்மேகம்' மம்முட்டி — அபிராமி



'பாப்கோன்' மோகன்லால் — சிம்ரன்

# செட்டிலாயாச்சு

ஜோதிகாவின் அக்கா என்றவுடன் நினைவுக்கு வருபவர் நக்மாதான். ஆனால் ஜோதிகாவின் அக்கா, ரோஷினி 'சிஷ்யா' படத்தில் கார்த்திக் ஜோடியாக நடித்தாரே. அவருக்குத் திருமணம் நடந்து அமெரிக்காவில் செட்டிலாகிவிட்டார்.


# கால்ஷீட் டைரி

| | | |
|---|---|---|
| ரஜினி | - | பாபா |
| கமல் | - | அன்பேசிவம் |
| விஜயகாந்த் | - | ஆதி, |
| விஜய் | - | உதயா, வேலன் |
| அஜீத் | - | திருடா, அச்சமில்லை, மகா |
| விக்ரம் | - | கிங், அதிசயம், தூள், திலீபன், ஜனா, துரை |
| பிரசாந்த் | - | என்ன விலை அழகே, வின்னர், விரும்புகிறேன். |
| மாதவன் | - | ரன், அச்சம் தவிர், அன்பே சிவம். |
| சூர்யா | - | மௌனம் பேசியதே, பின்குறிப்பு |
| முரளி | - | லவ்வர்ஸ், நம்ம வீட்டுக் கல்யாணம், சுந்தரா ட்ராவல்ஸ், |
| சத்யராஜ் | - | மிலிட் டிரி, சவுண்ட் பார்ட்டி, ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ, அடிமைகள், |
| பார்த்தீபன் | - | இவன், ஏலேலோ |
| சிம்ரன் | - | பாப்கார்ன், உதயா, ஐ லவ் யூடா, கோவில்பட்டி வீரலட்சுமி |
| லைலா | - | த்ரீ ரோஸஸ் |
| ஜோதிகா | - | த்ரீ ரோஸஸ், அச்சம் தவிர், மௌனம் பேசியதே. |
| சினேகா | - | கிங் |
| மும்தாஜ் | - | பாபா, |
| மீனா | - | லவ்வர்ஸ், க்ளிக், காதலே சுவாசம், நம்ம வீட்டுக் கல்யாணம், சிவகாமி |



## திரடி ஆட்டம்

படத்தில் அல்போன்சா கவர்ச்சி
ரியா நான் பொறந்தேன். காவேரி
பாடலுக்கு அல்போன்சா ஆடும்
. மம்முட்டி, அபிராமி ஜோடியாக
சி.ஆர்.சரஸ்வதி, வினுச்சக்கரவர்த்தி,
பிரியதர்ஷினி அறிமுகமாகிறார்கள்.



நடித்துள்ளார். சினிமா உலகில் இதுவரை எந்தவொரு படத்துக்கும் கொடுக்காத முக்கியத்துவத்தை சிம்ரன் இப்படத்துக்குக் கொடுத்து வருகிறார். கமலைப் போன்று தேசிய விருது பெறும் ஆசையில் சிம்ரன் சிரமப்பட்டு நடிக்கிறார்

## காதல் சாம்ராஜ்யம்

காதல் கோட்டை என்ற மிகப் பெரிய வெற்றிப்படத்தைக் கொடுத்தும் தொடர்ந்தும் சொதப்பலான படங்களைக் கொடுத்ததால் கோடம்பாக்கத்திலிருந்து காணாமல் போனார் அகத்தியன். ஹிந்தி, தெலுங்கில் இரண்டு படங்களை எடுத்தார். அங்கும் தாக்குப் பிடிக்க முடியவில்லை. எனவே தாய் மண்ணே வணக்கம் என்று தமிழ் நாட்டுக்கு மீண்டும் வருகிறார். அகத்தியனின் மறு பிரவேசம் நிகழ்வது 'காதல் சாம்ராஜ்யம்' படத்தின் மூலம். சும்மா இல்லை, திரையுலகின் இன்றைய ட்ரண்ட்டை தெரிந்து கொண்டு!

பிரபல ஹீரோக்களின் கால்ஷீட்டுக்காக வருஷக்கணக்கில் காத்திருந்து வெறுத்துப்போனவர், இப்போது புதுமுகங்களுக்குத்தான் வரவேற்பு என்பதை தெரிந்துகொண்டு இளைஞர் பட்டாளத்துடன் களமிறங்கியிருக்கிறார். அகத்தியனின் இளைஞர் படையில் இருப்பவர்கள் லேசுப்பட்டவர்கள் இல்லை. ஐவரில் நால்வர் பிரபலங்களின் வாரிசுகள்!


பாடகர் எஸ்.பி.பியின் மகன் சரண், மலேசியா வாசுதேவனின் மகன் யுகேந்திரன், கங்கை அமரனின் மகன் வெங்கட் பிரபு, மேஜர் சுந்தர்ராஜனின் மகன் கௌதம் ஆகியோர்தான் அவர்கள். இதில் கௌதம் ஹீரோவாக மட்டுமன்றி படத்தின் நடன இயக்குநராகவும் பணியாற்றுகிறார். ஐந்து ஹீரோக்கள் நடித்தாலும் படத்தில் இரண்டு நாயகிகள்தான். அஞ்சனா மற்றும் சந்தோஷி இருவருமே புதுமுகங்கள். இருவரில் ஒருவரான சந்தோஷி சினிமாவுக்குத்தான் புதுமுகம் சின்னத்திரைக்கு பழைய முகம்தான். பல தொடர்களில் நடித்தவர் இவர். 'காதல் சாம்ராஜ்யம்' இசை சம்பந்தப்பட்ட கதை. கதையில் இசை இருக்கிறதோ இல்லையோ, ஆனால் படத்தில் இசையின் பங்கு அதிகமாக இருக்கும் என்கிற அகத்தியன் முதன்முறையாக இசைஞானியின் மகன் யுவன் ஷங்கர்ராஜா உடன் கை கோர்த்திருக்கிறார். யுவன் ஷங்கர்ராஜா என்றால் இப்போது துள்ளல் இசை என்று அர்த்தம். 'காதல் சாம்ராஜ்யம்' படத்திலும் அதை எதிர்பார்க்கலாம்.

துள்ளல் இசை மட்டுமல்ல அவரது அப்பாவைப் போல மனசக்கு இதம் தரும் அற்புதமான பாடல்களையும் தந்திருக்கிறார் என்கிறார் தயாரிப்பாளர் பஞ்சு அருணாசலம் 'காதல் சாம்ராஜ்யம்' படத்தின் மூலம் தன் பழைய கடன்களை அடைத்து விடுவார் என்பது நிச்சயம். காரணம் 'காதல் சாம்ராஜ்யம்' படம் பூஜை போடப்பட்ட உடனேயே அனைத்து ஏரியாக்களும் விற்றுவிட்ட தாம். அதுவும் சாதாரண விலைக்கு அல்ல. பிரபல ஹீரோக்கள் நடிக்கும் படங்கள் விற்கும் விலைக்கு விற்பனையாகி இருக்கிறதாம். அதனால் சந்தோஷத்தில் துள்ளும் தயாரிப்பாளர் 'காதல் சாம்ராஜ்யம்' படத்துக்கு கணக்கு வழக்கில்லாமல் செலவு செய்து வருகிறாராம்.



நடிகர் 'சரண்' ...லும்
மாதவன் — மீராயாஸ்மின்





'துள்ளுவதோ இளமை' ...

## மிஸ் 'பியூட்டிபுல் ஸ்மைல்'

திரிஷா என்றால் சக்ஸஸ். ரஷ்ய மொழிப்பெயரைத் தேர்வு செய்து தங்கள் ஒரே மகளுக்கு சூட்டியுள்ளார்கள் இவரது பெற்றோர்கள். 'கண்மணி நீ வரக் காத்திருந்தேன்' ஷாம் ஜோடியாக திரிஷா நடிக்க ஒத்துக்கொண்ட முதல் படம். ப்ரியதர்ஷன் டைரக்ட் செய்யும் இப்படத்திற்கு, இப்போது 'லேசா லேசா' என்று பெயரை மாற்றிவிட்ட தகவலை அவரே சொன்னார்.

அடுத்த படம் சூர்யாவுடன் 'மௌனம் பேசியதே', 'எனக்கு 20 உனக்கு 18', தயாரிப்பாளர் ஏ.எம். ரத்தினம் மகன் சூர்யா மூவிஸ்காக டைரக்ட் செய்யும் படம். லேட்டஸ்ட் அஜீத்துடன் 'திருடா' படுபிஸியாக சூட்டிங்கில் நடித்துக் கொண்டிருக்கும் திரிஷா நடித்து திரைக்கு வரும் முதல் படம் ப்ரியதர்ஷன் இயக்கும் 'லேசா லேசா' தான் என்கிறார்.

வீட்டில் அப்பா திரிஷாவை, ஹனி என்றும் அம்மா திருஷ் என்றும் அழைப்பார்களாம். நண்பர்கள் மத்தியில் டிரிஷ் என்பது செல்லப் பெயர். இந்த ஆண்டு முதன் முறையாக, தன்னுடைய பிறந்த நாளை ஹைதராபாத்தில் 'எனக்கு 20 உனக்கு 18' படப்பிடிப்பில் பெரிய கேக் வெட்டி படப்பிடிப்பு குழுவினருடன் கொண்டாடியது மறக்க முடியாதது என்கிறார்.

திரிஷா என்ற தன் பெயரைக் கேட்டவுடன், பலரும் என்னை வட இந்தியப் பெண் என்று நினைத்து விடு கிறார்கள். எங்கள் தாத்தா காலத்திலிருந்து எங்கள் பூர்வீகம் பாலக்காடு. அம்மா பம்பாயில் வாழ்ந்த தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர். நாங்கள் தமிழ் பிராமணர்கள். நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே சென்னையில் தான். ஆரம்பப் படிப்பு சர்ச் பார்க்கில். அதைத் தொடர்ந்து எத்திராஜ் கல்லூரியில் பி.பி.ஏ பட்டப்படிப்பு படித்துக் கொண்டே மாடலிங் உலகில் அடி எடுத்து வைத்தேன்.

1999ம் ஆண்டு என் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. சேலத்தில் நடந்த பேஷன்ஷோவில் 'மிஸ் சேலம் ஸ்டில் சிட்டி'யாகத் தேர்வு பெற்றேன். 2001ம் ஆண்டு நடந்த உலக அழகிப் போட்டியின் பங்கு பெற்ற எனக்கு 'மிஸ் பியூட்டிபுல் ஸ்மைல்'க் கான பரிசு கிடைத்தது. ஏகப்பட்ட சினிமா வாய்ப்புகள் வந்தன. நான் தவிர்த்து வந்தேன். சினிமாவில் நடிக்கப்போவதில்லை என்று கூட சொன்னேன். சினிமாவில் நடிக்கக் கூடிய அளவுக்கு எனக்கு நாடகம், சினிமா அனுபவம் மற்றும் மெச்சூரிட்டி இல்லை. அத்துடன் பட்டப் படிப்புக்கு நிச்சயம் நடிப்பு தடையாக இருக்கும் என்பது என் கருத்து. நடிக்க வராமலிருந்தால் நான் நிச்சயம் ஒரு விளையாட்டு வீராங்கனையாக வந்திருப்பேன். என்னுடைய பள்ளியில் நான் ஹை ஜம்ப், லாங் ஜம்ப், பாஸ்கட் பால் எல்லாம் ஆடுவேன். பங்கி ஜம்ப் எல்லாம் கூடப் பண்ணியிருக்கிறேன். இப்போதும், வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காது. பிஸியாக ஏதாவது வேலை செய்துகொண்டே படித்துக் கொண்டுதானிருப்பேன்.

நடிக்க வந்துவிட்டேன். இதில் முழுமையான ஈடுபாட்டுடன் நடித்து நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்பதுதான் என்னோட இப்போதைய இல்ட்சியம்.

## வேலூர் சுந்தரின் இரண்டு படங்கள்

விஜய், மாதவன் ஆகியோரைக் கதாநரயகனாக வைத்து வேலூர் சுந்தர் இரு படங்களைத் தயாரிக்கிறார். ஜெகன் கதை, திரைக்கதை எழுதி இயக்கும் "கீதை" என்ற படத்தில் விஜய் கதாநாயகனாக நடிக்கிறார். பிரியதர்ஷனிடம் உதவியாளராக இருந்த விக்ரம் கதை, திரைக்கதை எழுதிய இயக்கும் "கள்ளச் சிரிப்பழகா" படத்தில் மாதவன் கதாநாயகனாக நடிக்கிறார். "பகைவன்", "தேவராகம்", "ஜேம்ஸ்பாண்டு" ஆகிய படங்களைத் தயாரித்த வேலூர் சுந்தர் தயாரிக்கும் இப்படங்கள் அக்டோபரில் வெளியாகும்.

## 'டூப்' கதாநாயகனாகிறார்

சித்தி, குடும்பம் ஆகிய தொலைக்காட்சி நாடகங்களில் நடித்த ரியாஸ்கான் "வித்தகன்" என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். "பத்ரி", "ஸ்ரீ", "பாபா" ஆகிய படங்களில் நடித்த இவர் ஆளவந்தானில் கமலின் டூப்பாக நடித்தார். "எங்கே எனது கவிதை" நாயகி ரதி கதாநாயகியாகவும், பிரதீப் என்ற புதுமுகம் இரண்டாவது கதாநாயகனாகவும் நடிக்கின்றனர்.

நாசர், டெல்லி கணேஷ், ரமேஷ் கண்ணா, "சேது" அபிதா, ஆகியோரும் இப்படத்தில் நடிக்கின்றனர். ஜி.நவ பாரதி கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குந ராக அறிமுகமாகிறார். இவர் கஸ்தூரிராஜா, ரகு, ராஜா ஆகிய இயக்குனர்களுடன் இ ணை இயக்குநராகப் பணியாற்றியவர்.


## கர்நாடகாவின் காவேரி எதிர்ப்பு

கர்நாடக ரசிகர்களின் எதிர்ப்பைப் பெற்ற "எச் 2 ஓ", "காவேரி" என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றம் செய்யப்படுகிறது. பிரபுதேவா, உபேந்திரா இணைந்து நடித்த இப்படத்தின் பிரதான பாத்திரமான "காவேரி"யாக திரிவேதி நடித்துள்ளார். காவேரி என்ற பெண்ணுக்காக தமிழ் இளைஞனான பிரபுதேவாவும், உபேந்திராவும் போட்டி போடுகின்றனர். காவேரி தமிழ் இளைஞனுடன் இணையும் முடிவை எதிர்த்த கர்நாடக ரசிகர்கள் தியேட்டர்களில் ரகளை செய்தார்கள்.



## 'காஷ்மீர்'

அபிநய் கதாநாயகனாக நடிக்கும் "காஷ்மீர்" படத்தில் அபிதா, சாருலதா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கின்றனர். சரண்ராஜ், ரகுவரன், சாருஹாஸன், தாமு, பிரேமா, ஸ்ரீவித்யா, சுமித்ரா, "ஓ போடு" ராணி ஆகியோரும் நடிக்கின்றனர்.



'இவன்' பார்த்தீபன்—மீனா

## சிரிக்க நீங்க ரெடியா?

வெளிநாட்டுக்குச் சென்ற ஓர் இலங்கையரிடம் செலவுக்குப் போதிய பணம் இல்லை. மலிவான ஹோட்டல் ஒன்றைத் தேடிய லைந்தவர் இலங்கை ரெஸ்டுரண்ட் ஒன்றைக் கண்டுபிடித்தார். சாப்பிடுவதற்காக உள்ளே நுழைந்தார். அதில் ஐரோப்பா, சீனா, இலங்கை என மூன்று பிரிவுகள் இருந்தன. இலங்கைப் பிரிவுக்குச் சென்றார். அதில் சைவம், அசைவம் என்று இரு பிரிவுகள் இருந்தன. அதிலும் நெய் - வனஸ்பதி என்று இரு பகுதிகள் இருந்தன. வனஸ்பதி பிரிவுக்குச் சென்றார். அதில் காசு - கடன் என இரண்டு பிரிவுகள் இருந்தன. உடன் காசு கொடுக்காமல் சாப்பிடலாம் என்ற நிம்மதிப் பெருமூச்சுடன் கடன் பிரிவுக்குள் நுழைந்தார். அங்கே 'வெளியே போகும் வழி' என்ற பெயர்ப்பலகை மாட்டியிருந்தது.

–புவக்பிட்டிய றிஸானா

## கொத்து ரொட்டி



∴பேரியல்

| | |
|---|---|
| வயது . | : அரைச் செஞ்சரிக்கு அப்பால் |
| பதவி | : வெறும் எம்.பியாகி சும்மா இருக்கும் உம்மா |
| நண்பர்கள் | : சேகு இஸ்ஸதீன், ஹிஸ்புல்லாஹ் |
| புதிய நண்பர்கள் | : அனுர பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்த்தனா, விமல்வீரவன்ஸ |
| ஒரே எதிரி | : ரவூ∴ப் ஹக்கீம் |
| சமீபத்திய கவலை | : கிழக்கு கலவரங்கள் |
| சமீபத்திய சந்தோஷம் | : புலிகள் - மு.கா. இடையிலான விரிசல் |
| பொழுதுபோக்கு | : வடகிழக்கை வேடிக்கை பார்ப்பது |
| பிடித்த படம் | : சின்னமேடம் |
| பிடிக்காத படம் | : ஆண்பாவம் |
| பிடித்த பாடல் | : எங்களுக்கும் காலம் வரும்.... |
| பிடித்த பழமொழி | : துப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை |
| எழுதப்போகும் சுயசரிதை | : ஒரு இரவல் கதிரை பேசுகிறது |
| கூற விரும்புவது | : கொஞ்சநாள் போகட்டும்! அப்புறம் எல்லோருமே முக்காடு போட்டுகிட்டு அலையப் போறாங்க.... ஹி....ஹி...ஹி... |

கற்பனை: சுபி

## ஏமாற்றலாகாது



–திருமலை ஜெகன்–

ஊழலற்ற அரசாங்கம் வேண்டுமையா!
ஒழுக்கமுள்ள குடியரசும் வேண்டுமையா!
வாழுகிற குடிமக்கள் எல்லாரும்தான்
வாழவழி வகுத்திடுதல் வேண்டுமையா!

அரசாங்க வரியாலே பணமேவந்தால்
அணுவளவும் பாழாக்கக் கூடாதையா!
தரமான திட்டங்கள் போட்டுத்தானே
சமுதாயத் துக்குழைக்க வேண்டுமையா!

அரசுகளும் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து
அமைதியினை வளர்த்துவிட வேண்டுமையா!
அரசாங்கம் இந்நாட்டு மக்கள்தம்மை
ஆனந்தம் பெறச்செய்ய வேண்டுமையா!

வாக்கையே கேட்கின்ற நாளில் மட்டும்
வாக்காள னைக்காணல் கூடாதையா!
எக்காளம் இடுகின்ற ஊழல் செய்து
ஏமாற்றக் கூடாது கேளுமையா!

## கைக்குழந்தைக்கு விஷம் கொடுத்துக் கொலை செய்ய முயற்சித்த வேலைக்காரி

ஹைதர் அலி ஒரேயடியாகக் கதறி அழுது கொண்டு இருந்தான். 11/2 வயது சிறுவனான அவனை வீட்டில் அறையில் விட்டுவிட்டு அப்போதுதான் தாயார் நஸ்ரீன் குளிக்கச் சென்றாள்.

குழந்தையின் அழுகுரல் கேட்டதும் நஸ்ரீன் பாத்ரூமுக்குள் இருந்து குரல் கொடுத்தாள். "இதோ அம்மா வந்துடுறேன்டா... அழாதடா செல்லம்..."

ஆனாலும் ஹைதர் அலி அழுகையை நிறுத்தவில்லை. பசியால்தான் அழுகிறான் என நினைத்த நஸ்ரீன் தொடர்ந்து சமாதான குரல் கொடுத்துக் கொண்டே இருந்தாள். அவசர அவசரமாகக் குளித்து முடித்துவிட்டு வெளியே வந்தாள். துணியைக் கூடச் சரியாக மாற்றவில்லை. பால் பாட்டிலை எடுக்க ஓடினாள்.



அதைக் கையில் எடுத்தபோது லேசான துர்நாற்றம் அடித்தது. பூச்சி மருந்து வாசனை போல தெரிந்தது. பக்கத்து வீட்டில் ஏதேனும் பூச்சி மருந்து அடிக்கிறார்கள். அதனால்தான் அந்தத் துர்நாற்றம் இங்கு வீசுகிறது என்று நினைத்தாள்.

பாட்டிலை கையில் எடுத்துக் கொண்டு பால் ஊற்றுவதற்காக சமையல் அறைக்குள் சென்றாள். அங்கு போன பிறகும் அதே துர்நாற்றம். மூளையில் சந்தேகம் பொறிதட்டியது. பாட்டிலை முகர்ந்து பார்த்தாள். பாட்டிலில் இருந்து தான் பூச்சி மருந்து துர்நாற்றம் வந்தது.

ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட நஸ்ரீன் குழந்தையை நோக்கி வேகமாக ஓடி வந்தாள். அங்கே ஹைதர் அலி நுரை தள்ளியவாறு அழுது துடித்தான். அவன் வாயில் இருந்தும் பூச்சி மருந்து நாற்றம் அடித்தது.

'அய்யய்யோ...' என அலறிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினாள். குழந்தையைப் பரிசோதித்த டாக்டர், பாலுடன் விஷம் கலந்து குழந்தைக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

தீவிர சிகிச்சைக்குப் பின் ஹைதர் அலியைக் காப்பாற்றிவிட்டனர். இது நடந்தது மும்பை பாந்திராவில். பின்னர் பொலிஸில் முறைப்படி புகார் செய்யப்பட்டது. பொலிஸார் வந்து விசாரித்தனர். நஸ்ரீன் எடுத்த எடுப்பிலேயே தனது சந்தேகத்தைக் கூறினாள்.

நஸ்ரீன் வீட்டில் பிஸ்மில்லா என்ற 13 வயது வேலைக்காரச் சிறுமி வேலை பார்த்து வந்தாள். 2 நாட்களுக்கு முன்பு அவள் காசு திருடிவிட்டாள். எனவே அவளைத் திட்டி வேலையை விட்டு நிறுத்திவிட்டேன். அவள்தான் இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும் என்று நஸ்ரீன் கூறினாள்.

உடனே பொலிஸார் பிஸ்மில்லாவைப் பிடித்து வந்தனர். அவளிடம் விசாரித்தபோது உண்மையை ஒத்துக் கொண்டாள். "என்னை நஸ்ரீன் அக்கா அடித்தார்கள். இதற்குப் பழிக்குப் பழிவாங்கதான் ஹைதர் அலிக்கு விஷம் கொடுத்தேன். அக்கா பாத்ரூமில் இருந்தபோது நைசாக வீட்டுக்குள் நுழைந்து விஷத்தை பாலில் கலந்து குடிக்க வைத்தேன்" என்றாள் பிஸ்மில்லா.

கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்து பொலிஸார் அவளை கைது செய்தனர். 13 வயதே ஆவதால் ஜெயிலுக்குப் பதில் சிறுவர்சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டாள்.

மணவை அசோகன்

## தூறல்...

ஷோபிதா இராமலிங்கம், மாபோலை.

என்னிதயம் கவர்ந்த இடியே! உன் அனைத்து அம்சங்களுக்கும் ஒரு சபாஷ். இடியே! உன் முழக்கத்தில் சில மாறுதல்களைக் காண ஆசைப்படுகின்றேன். கவிதை முத்துக் கள், கவி முழக்கம் என இரு பக்கங்கள் தேவைதானா? நான் தேடும் துணைவன் , துணைவி என்ற புதுமை தந்தால் என்ன? பேனா நட்பு பக்கத்திற்கு பாராட்டுக்கள். வாரம் ஒரு கலைஞர் சந்திப்பு தரலாம் புதிய பெண்மையை ஒரு பக்கமாக அதிகரிக்கலாம்.

உன் வருகைக்காக வாராவாரம் காத்திருப்பது நிஜம். உன் பக்கங்களைப் புரட்டும்போது அம்மம்மா... அப்படியொரு சுவாரஸ்யம்! அதிகம் சிங்கள பத்திரிகைகள் வாசிக்கும் எனக்கு தாய்மொழியில் இடி தேனமுதுதான். நான் விரும்பும் கோணத்தில் அனைத்து ஆக்கங்களும் அமைந்துள்ளன. உதாரணமாக சினிமா, ஆடுகளம், மலையக செய்தி, சிறுகதை, இலக்கியம் என்பன.

உன் சேவைக்கு என் மனமார்ந்த நேசம் என்றென்றும் கிடைக்கும். வாழ்க வளர்க தொடர்க உன் சேவை.

வினோஸா ஹனீபா, கல்முனை-6.

என் அபிமான இடிக்கு,

வாரந்தோறும் வசந்தங்களை அள்ளி வழங்கி, உன்னைக் காணத்துடிக்கும் கண்களுக்கு விருந்துபடைக்கிறாயே! சூடான அரசியல், அளவோடு சினிமா, சிரித்திட நகைச்சுவை, சிறப்பான சிறுகதைகள், மனம் மகிழ கவிதைகள், தரமான விமர்சனங்கள் அப்பப்பா!

இதைவிட உன் தனித்துவத்திற்கு ஏது இணை. நீ பல்லாண்டு காலம் இதே தனித்துவத்துடன் ஜொலிக்க வாசகி இவளின் வாழ்த்துத் தூறல்கள்.

எம்.டபிள்யு.நஸீர்தீன், கொழும்பு-14.

இடி பத்திரிகை தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். அற்புதமாக ஒவ்வொரு ஆக்கங்களும் இருக்கின்றன இன்றுபோல் என்றும் வெற்றி நடை போட வாழ்த்துக்கள்.

றஸீனா புஹார், லுணுகல.

"இடி" இப்போது இன்னும் தரமாகவும், பயனுள்ளதாகவும் இருக்கின்றது. இப்பணி இன்னும் (தரமாய்) தொடர எமது நிறைந்த பிரார்த்தனைகள். அரசியல் கட்டுரைகள். மிகவும் பயனுள்ளதாய் சிந்திக்கச் செய்கின்றன.

"இடி" க்கு இப்போது நிறைய வாசகர்கள் உள்ளனர். என் ஆக்கங்களை வெளியிடும் இடிக்கு நன்றிகள் பல.

ரமணி, புத்தளம்.

அன்பின் 'இடி'யே உன் வரவால் இன்று என் மனச்சோலை பூத்திருக்கிறது. நீ வாராவாரம் தரும் அற்புதமான ஆக்கங்களால் என் சோகங்களை நான் மறக்கிறேன். எனக்கு நீ ஆலோசனை தருவதில் நல்ல ஆசானாக இருக்கிறாய். எனக்கு சிறந்த தோழியாய் என்றும் நீ இருக்க உன்னை வாழ்த்துகிறேன்.

யாதவன், முகத்துவாரம்.

'இடி' பத்திரிகையை வாராவாரம் வாசித்து மகிழும் வாசகர்களில் நானும் ஒருவன். உன் சேவையால் இன்று நான் நிறைய பலன்களைப் பெற்றிருக்கிறேன். வாழ்க உன் சேவை, வளர்க உன் பணி.

# இமயம் தாண்டும் இணையற்ற கிரிக்கெட் வீரர்கள்

## சேர் கார்பில்ட் சோபர்ஸ்

தொடர் 03


# ஆடுகளம்

செய்யித் இர்பான் மௌலானா



அதி உன்னதமான சகலதுறை ஆட்டக்காரன் என உலகம் வியக்கும் மேற்கிந்திய தீவுகள் அணியின் நட்சத்திர நாயகன கார்பில்ட் சோபர்ஸ். இவர் கிரிக்கட்டை காதலித்தார். கிரிக்கட் இவரை விரும்பியது. 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலகின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் என இவரை உலகம் வியந்தது. இடதுகை சுழற்பந்து வீச்சாளர். எல்லோரோடும் அன்பாகவே பழகும் சுபாவம் கொண்டவர்.

ஒரு முறை இங்கிலாந்து பாதை வழியாக பயணம் செய்து கொண்டிருந்தார் சோபர்ஸ். ஒரு வயதான மூதாட்டி கண் பார்வையற்ற தனது மகளுக்காக கௌரவப்பிச்சை கேட்டுக் கொண்டிருந்தார். அவளின் நிலை கண்டு இரங்கிய சோபர்ஸ் மிகவும் கவலை கொண்டார். அந்தத் தாய்க்கு உதவவேண்டும். என்கின்ற வெறி அவரிடம் உதித்தது. தன் மணிபர்சிலும் காசில்லை. இவர் ஒரு உத்தியைக் கையாண்டார். தன் பாடும்வல்லமையின் நம்பிக்கை கொண்டு தெருவோரத்தில் பாடினார். பணம் கொட்டோ கொட்டென வசூலானது. அதனை ஏழைத்தாய்க்கு வழங்கினார். எவ்வளவு தான் சகலதுறை ஆட்டக்காரராக இருந்தாலும் தலைமைத்துவத்தைக் கொண்டு நடத்தும் திறமையற்றவர் என பலராலும் விமர்சிக்கப்பட்டவர். 39 டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை தாங்கிய



சோபர்ஸ் 9 டெஸ்ட்டில் மாத்திரமே வெற்றி பெற்றார். இவரின் வாழ்வில் மறக்க முடியாத தொடராக 1966ம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணி கலந்துகொண்ட 5 டெஸ்ட்டில் 3 இல் வெற்றிவாகை சூடியதை குறிப்பிடலாம். இப்போட்டியில் மொத்தமாக 722 ஓட்டங்கள். சராசரி 103.14. 20 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.

1936ம் ஆண்டு ஜுலை 28 செல்சியா வீதி சென்மைக்கல் நிலப்பரப்பு பார்படோஸில் இவர் பிறந்தார். மிகவேக பந்து வீசும் இவர், இடதுகை சைனோமேன் முறையிலும் ஆடுவார். ஒரு நாள் ஆட்டம் ஒன்றில் மாத்திரமே 1973ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் புருடென்சல் கோப்பைக்காக ஆடினார். 1975ம் ஆண்டு சேர் பட்டம் பெற்றார். 1964ம் ஆண்டு விஸ்டென் தரப்படுத்தலில் முதலிடம் பெற்றார். இந்த நூற்றாண்டின் 9 வீரர்களில் இவரும் ஒருவராக கணிக்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் போட்டிகள் 93ல் 160 இனிங்ஸில் ஆடி 21 முறை ஆட்டமிழக்காமல் 8032 ஓட்டங்களை பெற்றார். ஆட்டமிழக்காமல் 365 ஓட்டங்களைப் பெற்று உலக சாதனைபடைத்தார். இச்சாதனை பிற்காலத்தில் பிரைன்லாராவால் முறியடிக்கப்பட்டது. செஞ்சரிகள் 100. அரைச் செஞ்சரிகள் 30. பிடிகள் 109.

பந்து வீச்சில் 21.599 பந்துகளில் 974 ஓட்டமற்ற ஓவர்கள் 7.999 ஓட்டங்கள் கொடுத்து 235 விக்கட்டுக்கள் சராசரி 34.03. சிறந்த பந்து வீச்சு பெறுதியாக 6 விக்கட்டுக்கள் 73 ஓட்டங்களுக்கு 6 முறை ஐந்து விக்கட்டுக்களை வீழ்த்தியுள்ளார். ஒரே ஒரு ஒரு நாள் போட்டியில் மாத்திரமே ஆடினார். எந்தவித ஓட்டமும் பெறவில்லை. ஆனால் ஒரு பிடி மூலம் எதிரணி வீரரை ஆட்டமிழக்கச் செய்தார். 10.3 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு ஒரு விக்கட்டைக் கைப்பற்றினார். 1952-1974 ம் ஆண்டு வரை அவர் ஆடிய 383 முதற்தர போட்டிகளில் 609 இன்னிங்ஸ்களில் 93 முறை ஆட்டமிழக்காமல் ஆடியுள்ளார். 28.314 ஓட்டங்களைப் பெற்றார். 365 ஆட்டமிழக்காத அதிசய ஓட்டம். சராசரி 407 பிடிகள், செஞ்சரிகள் 86 அரைச்செஞ்சரி 121.

70.786 ஓவர்கள் பந்து வீசினார். இவற்றில் 2.890 ஓட்டமற்ற ஓவர்கள். 28.941 ஓட்டங்கள் கொடுத்து 1043 விக்கட்டுக்கள். சராசரி 38.29. 9 விக்கட்டுக்கள் 49 ஓட்டங்களுக்கு சிறந்த பெறுமதி. 36 முறை 5 விக்கட்டுக்கள், 10 விக்கட்டுக்கள் ஒருமுறை பெற்றார்.

கார்பில்ட் சோபர்ஸ் அலங்கார துடுப்பாட்ட வீரர். இவர் பிறக்கும் போது இரு கரங்களிலும் மேலதிக விரல்களைக் கொண்டிருந்தா. பின் அவை கிரிக்கட்டுக்காக சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. தனது 16வது வயதிலேயே தேசிய அணியில் இடம்பிடித்துக் கொண்ட இவர் கூடைப் பந்தாட்டம், கோல்ப், உதைபந்தாட்டம் என்பனவற்றிலும் சிறந்த வீரராக விளங்கினார். இவரின் சாதனைகள் எண்ணிலடங்காதவை. பாகிஸ்தானுக்கு எதிராகப் பெறப்பட்ட 365 ஓட்டங்கள் போன்று ஒரு ஓவரில் 6 பந்துகளிலும் 6 சிக்ஸர்களை விளாசித்தள்ளி சாதனை படைத்தார்.

மல்கெம்நாஸ் என்ற பந்து வீச்சாளருக்கே இக்கதி நேர்ந்தது. 1971ம் ஆண்டு 254 ஓட்டங்கள் பெற்ற ஓட்ட வீதம் பாராட்டுக்குரியது. அவுஸ்திரேலியா அணிக்கெதிராக ஓய்வு பெற்ற வீரர்கள் குழுவில் இணைந்தே இந்த ஓட்டங்களைப் பெற்றார். தென் அவுஸ்திரேலியா அணிக்காகவும் சோபர்ஸ் ஆடினார்.

அழகான பெண்கள் கடவுளின் அருட்கொடைகள் என அடிக்கடி கூறும் இவர் அழகை ஆதரிக்கும் கலை நுணுக்குடையவர். இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வீரன் உலகில் இதுவரை தோன்றிய கிரிக்கட் வீரர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 வீரர்களுள் 3ம் இடம் பெற்றிருப்பதில் இருந்து இவரின் பெருமையை அறியலாம்.

பிரட்மன் வியந்த, பிரட்மனை விட அற்புதமாக ஆடியவர் என உலகால் வியக்கப்பட்ட அற்புத வீரன் இவர்.

## சுசந்திகா பாதை மாறினார்



கொமன் வெல்த் போட்டிகளில் இலங்கைக்குப் பதக்கங்கள் பெற்றுத் தருவார் என எதிர்பார்க்கப்பட்ட சுசந்திகா பாதை மாறி ஓடியதால் இலங்கையின் தங்கக் கனவு கலைந்தது.

இலங்கை அணியுடனான பிரச்சினைகளும், கணவருடனான பிணக்குமே சுசந்திகாவின் மனதில் ஏற்படுத்திய வடுக்களால் அவரால் பதக்கம் பெறமுடியாமல் போனது என்ற செய்தி இலங்கை ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கொமல் வெல்த் போட்டிகளில் கலந்துகொள்ளச் சென்ற இலங்கை அணி பெருத்த ஏமாற்றத்துடன் நாடுதிரும்பியது.

## கிரிக்கட் சுற்றுப் போட்டி

இலங்கையின் முதற்தர வானொலி சூரியன் எப்.எம், முதற்தரப் பத்திரிகை இடி, ஹிதாயத் நகர் விளையாட்டுக் கழகம், சூரியன் நேயர் வட்டம் ஆகியன இணைந்து நடத்தும் நாடளாவிய ரீதியிலான கிரிக்கட் சுற்றுப் போட்டி ஹிதாயத்நகர் (காக்கையன் குளம்) விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 22ம் திகதி முதல் 25ம் திகதி வரை நடைபெறும்.

10 ஓவர்கள் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட இச்சுற்றுப்போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு 7 ஆயிரம் ரூபாவும், இறுதிப் போட்டியில் தோல்வியடையும் அணிக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

ஆட்டத்தின் தொடர் நாயகன், இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகன், சிறந்த களத் தடுப்பாளர், ஹட்ரிக் வீரர் ஆகியோருக்கு வெற்றிக் கேடயமும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

அனைத்து சான்றிதழ்களிலும் கேடயங்களிலும் சூரியன், இடி, ஹிதாயத் விளையாட்டு கழகச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. உங்கள் விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் இருபதாம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ பின்வரும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

CBS, 47, Colombo road, Palari.

தொலைபேசி:- 032165689.

SOORIYAN FM 103.2

1ம் பரிசு:-
7000/= ரூபாவும் கேடயமும், சான்றிதழ்களும்.
2ம் பரிசு:-
5000/= ரூபாவும் கேடயமும், சான்றிதழ்களும்.
3ம் பரிசு:-
ஆறுதல் பரிசில்களும், சான்றிதழ்களும்.

இத்துடன் அணியின் தொடர் நாயகன், இறுதிப்போட்டியின் நாயகன் மற்றும் சிறந்த வீரர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

President.
A.L.Bilal,
H.N.S.Club
Hidhayath Nagar,
(Kakkayan Kulam)
Madurankulli.
Tel: 077-533256

NEW FAHIM ENTERPRISES (PVT) LTD.
No.283/1, 1/2,1/3, Main Street, Colombo - 11.
Tel: 438030, 423935, 330692. Fax: 431773, 688284

C B S
Computer Business Systems
#47, Colombo Road, Palavi.
E-Mail: cbs123@isplanka.lk Tel: 032-65689

# சொற்குளித்தல் போட்டி -இல.12

**முடிவு திகதி 31~08~2002**

ஆழக் கடலில் மூழ்கி முத்தெடுத்தலுக்கு முத்துக் குளித்தல் என்பர் ஆன்றோர். இங்கேயும் ஒரு சதுரக் கடல் உள்ளது. இதில் மூழ்கி நீங்கள் சொற்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அதனாலேயே இது 'சொற்குளித்தல் போட்டி' எனப்படுகிறது.

நடுவில் பெரிதாக இருக்கும் எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டே எல்லாச் சொற்களும் இருக்கும். இம்முறை நடுவிலுள்ள பெரிய எழுத்து "உ". உங்களுக்குத் தரப்பட்டிருக்கும் தரவுகளுக்கேற்ப அவ்வச் சொற்களைக் கண்டுபிடித்து எமக்கு எழுதி அனுப்புவதுதான் உங்கள் பணி. கேள்விகளுக்கான இலக்கத்தை எழுதி எதிரே விடையை மட்டும் எழுதினால் போதும்.

*உதாரணம் : 1. உப்பு*

முற்றிலும் சரியான விடையை எழுதுவோரில் அதிர்ஷ்டசாலியான வாசகருக்கு ரூ.500/- பரிசாகக் கிடைக்கும். பாராட்டுக்குரிய ஏனையோரின் பெயர் முகவரிகள் இடமிருக்கும் வரை பிரசுரமாகும்.

ஒருவர் எத்தனை போட்டிப் படிவங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு படிவமும் இங்குள்ள முகவரிக் கூப்பன் ஒட்டப்பட்ட தபால் அட்டையிலேயே அனுப்பப்பட வேண்டும்.

சரி போட்டிக்கு வருவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ம் | த் | ப் | ர | ர் |
| மி | ன் | த் | த | றை |
| கு | தி | ண | ர | ழ |
| ம் | ன் | **உ** | ழ் | த |
| ம் | ம | க் | யோ | பு |
| யு | டு | வ | ள் | நீ |
| க | தி | ல் | டு | ஷ் |

*தரவுகள் :*

01. கடல் நீரிலிருந்து கிடைப்பது.
02. இரத்தம்.
03. எச்சில்.
04. தங்குமிடம்.
05. வெப்பம்.
06. விவசாயம் செய்பவன்.
07. குறிசொல்லும் இசைக்கருவி.
08. "இது" புருஷலட்சணம் என்பார்கள்.
09. சிறந்த குணங்களை உடையவன்.
10. பெண்கள் சாயம் பூசும் உடற்பகுதி.
11. உலக்கையுடன் இணைந்திருப்பது.

*அனுப்ப வேண்டிய முகவரி :*

**சொற்குளித்தல் போட்டி ~ இல.12**
மே/பா இடி
**417/2, Galle Road,**
**Colombo-03.**

## சொற்குளித்தல் போட்டி இல – 09 இற்கான சரியான விடைகள்

01. அலை 02. அந்தப்புரம் 03. அணை
04. அரக்குமாளிகை 05. அரண்மனை
06. அதிசயம் 07. அந்தாதி 08. அந்தகன்
09. அத்தை 10. அழகி 11. அடி

## சொற்குளித்தல் போட்டி இல–9 இல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**ஏ.ஆர்.எப்.நஸ்மின்,**
இல - 37, 3ம் குறுக்குத் தெரு,
ஒழுங்கை 12, புத்தளம்.

### பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்:~

01. ஏ.மல்லிகாதேவி, அல்மா குரூப், கந்தப்பளை.
02. எம்.சீரங்கன் செல்வக்குமார், மஸ்கெலியா.
03. ஆர்.நிர்மலா, பலாங்கொடை குரூப், பலாங்கொடை.
04. எம்.ஏ.அப்னீநத் அஹமட், காத்தான்குடி-02.
05. தி.தியாகேஷ்வரி, செங்கலடி.
06. எம்.எஸ்.ஜமாலியா, அலியார் வீதி, கல்முனை-6.
07. வினோஸா ஹனீபா, 310, கல்முனை-06.
08. எம்.எம்.மஸீனா அஹமட், பண்டார கொஸ்வத்த.
09. திருமதி.ஆயிஷா ரிழா ஏ.எம், புத்தளம்.
10. இரா.குமரேசன், கினிலன், எல்ல.
11. க.கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர்-03.
12. இராசையா ஸ்ரீபிரகாஷ், 1ம் பிரிவு, மண்டூர்.
13. பாத்திமா நுஸ்லா, நீர்கொழும்பு.
14. தெ.கலையரசி, செங்கலடி, மட்டக்களப்பு.
15. எம்.ஏ.எம்.இப்லால், நிவ்செட்ல்மன் வீதி, புத்தளம்.
16. திருமதி என்.எஸ்.றவூப், 91/7, கொழும்பு-09.
17. மொஹமட் மின்ஸாத், மஸ்ஜிட் றோட், புத்தளம்.
18. முஜாஸிறா ஜவ்பர், மடவளை பஸார், மடவளை.
19. திருமதி.எம்.சுந்தரேசன், மஸ்கெலியா.
20. பி.மங்களேஸ்வரி, நூரி தோட்டம், தெரணியகலை.
21. செல்வி கே.நித்தியகுமாரி, சுண்டிக் குழி, முருங்கன்.
22. திருமதி.எம்.எச்.ஹைருனிஸா, இல - 430, கண்டி.
23. க.ராமச்சந்திரன், 75, பிரதான வீதி, லுணுகலை.
24. எம்.இளையராஜ், இல 174/1, கொட்டகலை.
25. செல்வன் உமா சங்கர் ந.ராஜா, கந்தப்பளை.
26. ஜி.மன்சப் அஹமட், இல - 184, மருதமுனை-01.
27. எம்.பி.எப்.பஸ்ரினா, 32 C, வெலிகம.
28. செல்வி.சரோஜினி பர்னாந்து, ராஜகிரிய.
29. எம்.கே.டீன், இல - 06, கொட்டகல.
30. எம்.ஏ.எப்.முனீரா, இல - 62, சாய்ந்தமருது-05.

# இலக்கங்கள் பூர்த்தி செய்யும் இலட்சியங்கள்! ~ 41

## விவாகப் பொருத்தங்களும் மணவாழ்க்கைக்கான குறிப்புகளும்

1 எண் உடைய பெண்ணை மணந்து கொண்டு வம்பு பண்ணினால், அப்பெண்மணி புருஷன் வேண்டாமென்று கூறிப் போய்விடுவாள். 8 எண்ணில் பிறக்கும் பெண் 2 எண்ணுடைய ஆணை மணந்தால் பெண் சிரமப்படக்கூடும். 2 எண்ணுக்குக் குடும்ப வாழ்க்கையில் விவகாரம் உண்டாகும். இவர்களுக்குச் சரியாக நடந்து கொள்ளத் தெரிவதில்லை. இந்த எண்ணில் பிறந்தவர்களே மற்றவர்களால் கோர்ட்டுக்கு இழுக்கப்படுகிறவர்கள். இவர்களுக்குக் காதல் நன்மை தருவதில்லை. ஏனெனில் இவர்களுக்கு மாறும் சுபாவம் உண்டு. காதல் ஏமாற்றத்தையும் தூஷணைகளையும் உண்டாக்கி வைக்கும். இவர்களுக்கு 7, 1 எண்கள் உடையவர்களிடம் கவர்ச்சி உண்டாகும். 9 எண் உடையவர்களைத் தவிர்க்கவும்.

3 எண்ணில் பிறப்பவர்கள் 3, 9, எண்களில் பிறந்தவர்களையே நேசிப்பர். கூட்டு எண்ணுக்குப் பொருத்தமான எண்கள் உடையவர்களை மணக்கலாம். நற்குணங்களும் நேர்மையும் மிக்க இவர்கள் 3 எண்காரர்களையே மணக்க குறைவற்ற வாழ்க்கையும் திருவருளும் உண்டாகும். 8 எண்காரரை மாத்திரம் மணக்கவேண்டாம். 2 எண்காரர்களாலும் சுகப்படலாம். புத்திரப் பேறும் உண்டு.

4 எண்காரர்கள்தான் கட்டுப்பட்டு நேசிக்க மனைவியோ, புருஷனோ வேண்டுமானால் 1 எண்காரரை மணக்கலாம். தன்னை நேசித்து அடங்கி நடப்பவரை மணக்கவேண்டுமானால் 8 எண்காரர்கள் உளர். 4 எண் உடையவர்கள் நல்ல தினத்தில் மணந்து கொண்டால் நீண்ட நாள் சுகமாக மனமொத்து வாழலாம். புத்திரபேறு உண்டு. செலவாளியானதால் 4 எண் ஆண்கள் 6 எண்ணுடைய பெண்களை மணந்தால்தான் செல்வந்தராவார்.

5 எண்காரர்களுக்கு 5, 9 எண்களில் பிறந்தோரிடம் கண்டதும் காதல் ஏற்படும். கூட்டு எண்ணுக்குப் பொருத்தமானவர்களை மணந்தால் விவாக வாழ்க்கை நீடிக்கும். கூட்டு எண்ணும் 5ஆக இருந்தால் 1, 3, 6 திகதிகளில் பிறந்தவரை மணக்கலாம். 5 எண் குறிக்கும் 5, 14, 23 திகதிகளில் பிறந்தவர்களுக்குப் புத்திரபாக்கியம் குறைவு. கூட்டு எண் 5 ஆக இருந்தாலும் அப்படியே. இவர்கள் 5 எண் உடையவர்களை திருமணம் புரிந்து கொண்டால் புத்திரபேறு ஏற்படுவது சந்தேகமே. கூட்டு எண்கள் வலிமையானவையாக இருந்தால் நாட்பட்டு ஏதோ ஒன்றோ இரண்டோ குழந்தைகள் உண்டாகும். பெயரை அனுசரித்து புத்திர பாக்கியம் உண்டாகும்.

6 எண்ணுடையவர்கள் தன்னைப் போன்ற 6 அழகான எண்காரரிடமே மனதைப் பறிகொடுப்பர். திகதி, கூட்டு எண் இரண்டும் 6 ஆக இருந்தால் மற்றவர் 1, 4, 9 எண் உடையவராக இருத்தல் நலம். மற்றவரும் 6 எண்ணை உடையவராக இருந்தால் கூட்டு எண் வலிமையுடையதாக இருந்தால்தான் பிள்ளைப் பேறு உண்டாகும். கூட்டு எண் 2, 7, 8 முதலியவையாக இருந்தால் ஒரு காலத்திலும் புத்திரோற்பத்தி இல்லை. 6 எண்காரர்கள் பெண்களையே அதிகம் பெறுவர். 5 எண் உடையவர்களையும் மணக்கலாம்.

(அதிர்ஷ்டம் தொடரும்.......)

# இந்த வாரம் எப்படி?



**18-08-2002** தொடங்கி **24-08-2002** வரைக்கும்

*சோதிட மனோதத்துவ ஆலோசகர்* **பி.கே.சாமி கங்காதரன்**

### – மேடம் –
போடும் திட்டங்களில் வெற்றி கிட்டும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் தென்படும். பிரிந்த உறவுகள் ஒன்று கூடும். வண்டி. வாகனத்தால் நன்மையும். தூரப் பயணங்களால் இலாபமும் கிட்டும்.

### – இடபம் –
எதிலும் இழுபறி நிலை காணப்படும். எனினும் காரியங்கள் வெற்றி தரும். பொருளாதார நிலை மந்தமாக இருக்கும். பெற்ற கொடுத்த கடன்களை வசூலிக்க. கொடுக்க இழுபறி நிலை தொடரும். சுபீட்சம் நிலவும்.

### – மிதுனம் –
வருவாய்க்கு ஏற்ற செலவுகள் அதிகரிக்கும். தொழில் முயற் சியால் நன்மை கிட்டும். பெரியோர் உதவியால் நீண்ட நாள் திட்டங்கள் நிறைவேறும். நண்பர்களால் வீண் பிரச்சினை ஏற்படும். தூர இடத்துச் செய்தியால் மனதில் மகிழ்ச்சி .

### – கடகம் –
சமூகத்தில் கௌரவம், புகழ்ச்சி சிறந்து காணப்படும். பண வருவாய் அதிகரிக்கும். மனதிற்கு ஏற்ற இட மாற்றங்கள், பதவி உயர்வு கிட்டும். சமூகத்தினரால் உதவி, ஒத்தாசை, நன்மை கிட்டும். தீராப் பிரச்சினைகள் இவ்வாரம் தீர்ந்துவிடும்.

### – சிங்கம் –
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். குடும்பத்தில் சில சில சச்சரவு களுக்கு முகம் கொடுக்க நேரிடும். பொறுமை. அவசியம். மேலதிகாரிகளின் உதவி, ஒத்தாசை கிட்டும்.

### – கன்னி –
அதிர்ஷ்டமான வாரமே. கொடுக்கல், வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும். புதிய முயற்சிகள் வியாபாரங்களை ஆரம்பிக்க வழிவகைகள் ஏற்படும். எதிர்பார்த்த பதவி மட்டங்கள் கிட்டும்.

### – துலாம் –
அதிக முயற்சியும். ஊக்கமும் தேவை. தொழிலில் சில சகிப்புத் தன்மையால் சோம்பல் ஏற்படும். எனினும் வருவாய்கள் ஓரளவு அதிகரிக்கும். வண்டி. வாகன வீடு யோகம் உண்டு. வார இறுதியில் அதிக நிதானம் தேவை.

### – விருட்சிகம் –
மனதில் சுறுசுறுப்பு. தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அரசாங்கங்களில் உதவிகள். அரசியல் லாபங்கள் கிட்டும். வழக்கு வம்புகளில் வெற்றி. அதிகாரிகள் சரணடைவர். எதிர்பாராத உதவியால் மிக இலகுவில் சாதித்துவிடலாம். புதிய முயற்சியால் நன்மை உண்டாகும்.

### – தனு –
வருவாய்கள் அதிகரிக்கும். செல்வாக்கைக் காப்பாற்றலாம். தொழில் ரீதியில் சிற்சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் கௌரவத்திற்குப் பாதிப்பில்லை. கொடுக்கல், வாங்கல்களில் நிதானம் தேவை. தூரப் பிரயாணங்களால் நன்மை கிட்டும். இறைவணக்கத்தை தொடரவும்.

### – மகரம் –
எதிர்பார்ப்பு கைகூடும். கொடுக்கல் வாங்கல்கள் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த கடன் தக்க சமயத்தில் கிடைக்கும். நண்பர்களின் உதவி உண்டு. புதிய முயற்சிகளால் நன்மை கிட்டும். உடல் ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகமான வாரமே.

### – கும்பம் –
எதிலும் எதிர்பாராத முட்டுக் கட்டைகள் நிகழும். பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படும். தொழில் முயற்சிகளில் ஓரளவு நன்மை கிட்டும். குடும்ப சூழ்நிலை சுமுக நிலையில் காணப்படும்.

### – மீனம் –
பெரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. ஓரளவுக்கு சுமூகமான வாரமே. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் முயற்சியில் மேலதிகாரிகளின் பாராட்டு கிட்டும். வார இறுதியில் எதிர்பாராத பண உதவிகள் கிட்டும்.

# கவிதை முத்துக்கள்

### இருக்காது
சொல்வதெல்லாம்
செய்வதென்றால்
சோகம் இருக்காது!
அல்லல் எல்லாம்
இல்லை என்றால்
ஆனந்தம் குறையாது!
இல்லை என்பது
இல்லை என்றால்
மகிழ்ச்சி குறையாது!

*—அ.அங்கயற் கண்ணி, சேனையூர்-06.*

### பிரிவு
இருளான என் மனதில்
சூரியனாய் வந்தாய்!
அதனால்தான்
சுட்டெரிக்கவும்
துணிந்துவிட்டாயோ?
என் மனதில்
உன் பிரிவு
சூறாவளியாய்ச்
சுழன்றடிக்கிறது!

*—எம்.வை.றியாஸ் முஹம்மட், பள்ளேகம.*

### வா
இளைய சமுதாயமே
எழுந்து வா!
எல்லையென்று எதுவுமில்லை
தாண்டி வரக் கோடுமில்லை
துன்பமிங்கு நிரந்தரமுமில்லை!
வாசலுக்கு வா...!
கலங்கிக் கவிழ்ந்து விட்டால்
உலகம் கேலி செய்யும்
துணிந்துவிட்டால்
சிகரமும் தலைவணங்கும்
தீயைச் சுட்டு வைப்போம்
தீயதைப் போட்டு வைப்போம்
எழுந்து வா!

*—கே.ஜெகன், திருமலை.*

### இமை
எந்தத் தேசத்தின்
அரியணை ஆட்சிக்காக
இந்த வெண்சாமரை
வீசப்படுகிறது?

*—து.பிரபாகர், ஹப்புத்தளையூர்.*

### கடிதம்
முகவரி சேர்ந்ததுமே
என்னைத் துகிலுரிவது
எந்த விதத்தில் நியாயம்?

*—நிலாக்கவி இர்ஹாம், காத்தான்குடி.*

### ஓய்வு
விண்ணில் கொட்டும்
மழைத்துளியும்
மண்ணில் பட்டு
மறைந்துவிடும்!
இரவில் குளிரும் நிலவு கூட
சூரியன் வரவால் ஓய்வு பெறும்!
விழித்திருக்கும் போதே
என்னிதயத்தைத் திருடிக்
கொண்ட
உன்னால்
எப்போது என் விழிகளுக்கு
ஓய்வு வரும்?

*—கே.இளங்கோ, கம்பளை.*

### நிலை
தாய்ப்பால் குடிக்காது
பசுப்பால் குடித்தேன்!
தாலாட்டு கேட்காது
ஒப்பாரி கேட்டேன்!
தாய் மடியில் தூங்காது
இப்போது
பங்கருக்குள் துயில்கிறேன்!

*—அச்சுதன், சேனையூர்.*

### சமாதானம்
ஆயுத கலாசாரம்
அகிலத்தில் அழியவேண்டும்!
சாதி, மத, பேதங்கள்
சத்தியமாய் ஒழியவேண்டும்!
உயிர்கள் அனைத்தும்
ஒன்றிணைய வேண்டும்!
அந்த நாள் வந்தால்தான்
சமாதானம்
சாத்தியமாகும்!

*—யூ.கே.எம்.பௌசர், பாலமுனை-05.*

# இலக்கியப் பக்கம்

செ. யோகநாதன்

## தமிழில் வானொலிச் செய்திகள் யாருக்காக? எப்படி?

செய்தி கேட்பதற்காக வானொலியைத் தயார்படுத்திவிட்டு, செய்தி முடிந்த பின் இதெல்லாம் ஒரு செய்தியா என சலிப்படைபவர்கள் கண்டிப்பாகப் படிக்க வேண்டிய புத்தகம் என்.குருபரன் எழுதிய "தமிழில் வானொலிச் செய்திகள் யாருக்காக? எப்படி?"

செய்திகளின் தரம், அவற்றின் முக்கியத்துவம், அச்சு, இலத்திரனியல் செய்திகளின் வேறுபாடு என்பனவற்றை ஆதியோடு அந்தமாக விளக்கும் வகையில் இப்புத்தகம் தொகுக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை வரலாறு, வானொலி, வானொலிச் செய்தியின்


–ரமணி–

வரலாறு என்பன சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இலங்கை வானொலியினதும், தனியார் வானொலிகளினதும் செய்திகளின் வளர்ச்சி, பீ.பீ.சி, வெரித்தாஸ், ஐ.பி.சி, ரி.பீ.சி, இந்திய வானொலிச் செய்திகள் என்பன இலங்கைத் தமிழர்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் என்பனவற்றை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

1983களின் பிற்பகுதியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) "தமிழீழத்தின் குரல்" என்ற பெயரில் இரகசிய வானொலியை ஒலிபரப்பியது. 1990களின் பிற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கம், "புலிகளின் குரல்" என்ற வானொலியை ஆரம்பித்தது.

"தமிழீழத்தின் குரல்" செய்திகள் இலங்கை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. "புலிகளின் குரல்" செய்திகளும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதைத் தகுந்த இடத்தில் சுட்டிக்காட்டி வானொலிச் செய்திகளின் வரலாற்றில் விடுதலைப் போராளிகளின் பங்களிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

மொஸ்கோ வானொலி, பீக்கிங் வானொலி, சிங்கப்பூர் வானொலி ஆகியவற்றின் தமிழ் ஒலிபரப்புச் செய்திகளையும் இடம்பெறச் செய்




திருந்தால் மேலும் சிறப்பாக அமைந்திருக்கும்.

சூரியன் எப்.எம் செய்தியின் வளர்ச்சி எத்தகையது என்பதை ஆசிரியர் விலாவாரியாக எடுத்துக் காட்டியுள்ளார். செய்திப் பணியின் ஆரம்பக்கர்த்தா காசி.நவரத்தினத்துக்கு உரிய இடம் வழங்கியுள்ளார். எம்.இந்திரஜித், வி.எஸ்.சிகாமணி, என்.குருபரன் ஆகிய மும்மூர்த்திகளின் செயற்பாட்டில் சூரியன் எப்.எம் செய்திகள் மிளிர்வதை இப்புத்தகத்தின் மூலம் அறிய முடிகிறது.

நடுநிலைச் செய்திகள் கூட பக்கச் சார்புச் செய்திகளாக எப்படி மாற்றமடைகிறது என்பதை உரிய காரணகாரியங்களோடு ஆசிரியர் விளக்கியுள்ளார். குண்டு வெடிப்பு, ஊர்வலம் போன்ற செய்திகளை நேரடியாக ஒலிபரப்பும் போது ஏற்படும் சிரமமும் ஆபத்தும் எத்தகையன என்பதை ஆசிரியர் அனுபவபூர்வமாக விளக்கியுள்ளார்.

ந.குருபரன் சூரியன் எப்.எம் செய்திச் சேவையை சுயவிமர்சனம் செய்துள்ளார். தாம் அடைந்த வெற்றிகளையும் அனுபவித்த துன்பங்களையும் பட்டியலிட்டுள்ளார்.

அதேவேளை பின்னிணைப்பாக வாழ்த்துக்கள், நேயர்களின் கருத்துக்கள், சூரியன் எப்.எம்மின் மூன்றாவது ஆண்டு நிறைவினை ஒட்டி பத்திரிகைகளில் வெளிவந்த வாழ்த்துக்களும், விமர்சனங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்பில் உள்ள பல கருத்துக்கள் சூரியன் எப்.எம் செய்தியில் தவறுகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றினைக் கவனத்திலெடுத்தால் சூரியன் எப்.எம் செய்திகள் மேலும் சிறப்படையும் என்பது உறுதி.

சூரியன் எப்.எம் செய்திகளில் உள்ள குறைபாடுகளை வெளிக்காட்டும் குறிப்புகள் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டது நடுவுநிலைமை தவறாததை எடுத்துக் காட்டுகிறது. சூரியனுடன் மட்டும் நின்றுவிடாது ஏனைய வானொலிச் செய்திகளையும் தொட்டுக் காட்டி இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

நடராஜாகுருபரன்.
புதிய கார்த்திகேயன் அச்சகம்.
11 ஏ, பாத்திமா மாவத்தை.
தெஹிவளை,
களுபோவிலை,
077-356036,
விலை ரூபா 200/-

## அஸீமின் 'விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்' நூல் வெளியீடு

கொள்ளுப்பிட்டி ரன்முத்து ஹோட்டல் மண்டபத்தில் 18ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணிக்கு றோயல் கல்லூரி மாணவன் சிலாவத்துறை ஏ.ஆர்.அஸீம் எழுதிய "விஞ்ஞானமும் தொழினுட்பவியலும்" நூல் வெளியீட்டு விழா இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர் அவர்களின் முன்னிலையில், மொரிசியஸ் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் திரு.தெ.ஈஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

கல்ஹின்ன கலைமுத்துப் பிரசுரத்தின் வெளியீடான இந்நூல் வெளியீட்டுவிழாவில் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான அல்ஹாஜ் ஏ.எச்.எம்.பௌஸி, கொழும்பு மாநகர சபையின் பிரதிமேயர் அல்ஹாஜ் அசாத்சாலி ஆகியோர் பிரதம அதிதிகளாகவும்,

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு.எஸ்.தில்லை நடராஜா சிறப்பு அதிதியாகவும், அதிபர்கள், ஆசிரியர்கள், சிரேஷ்ட பத்திரிகையாளர்கள், சமூகப் பிரமுகர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.என்.ஜயூப் சிறப்புரையும், றோயல் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியரும், கல்வி அமைச்சின் பேரவை உறுப்பினருமான கே.நந்தகுமார் வரவேற்புரையும் கவிமணி என்.நஜ்முல் ஹுசைன் கவி வாழ்த்தும் நிகழ்த்துவர். நிகழ்ச்சித் தொகுப்பு: ஏ.ஆர்.எம்.ஜிப்ரி.

## 'ராகதீபங்கள்' இசை நிகழ்ச்சி



மருதானை டவர் மண்டபத்தில் எதிர்வரும் 30ம் திகதி வெள்ளிக்கிழமை "சைக்லோன்" இசைக்குழுவினரின் "ராகதீபங்கள்" இசை நிகழ்ச்சி நடைபெறும்.

வானொலி தொலைக்காட்சிக் கலைஞர் ஏ.எம்.யேசுறட்னத்தின் புதல்வர்களான ரெறன்ஸ் றொட்றிகோ, கிளறன்ஸ் ரஜீவன், கிளமென்ஸ் றேகன் ஆகிய மூவரும் இணைந்து "சைக்லோன்" என்ற புதிய இசைக் குழுவை அமைத்துள்ளனர்.

இவர்களுடன் புதிய பல இளம் கலைஞர்களும் "ராகதீபங்கள்" இசை நிகழ்ச்சியின் மூலம் மேடையேற உள்ளனர். அனுமதிச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

## கண்கள் சொல்லும் கவிதைகள்

கண்களுக்குள் காதலியை வைத்து இமை மூடாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றான் இந்தக் காதலன். "கண்ணுக்குள்ளே உன்னை வைத்தேன்" கண்விழிகளால் கொல்லலாம் என அறிந்திருக்கின்றோம். இந்த இரு விழிகளும் தவணை முறையில் அல்லவா அவனைக் கொல்கிறது.

"பார்த்தேன், பார்த்தேன்,
பார்த்தேன்
சுடச் சுடச் ரசித்தேன் ரசித்தேன்
ரசித்தேன்
இரு விழி தவணை முறையில்
என்னைக் கொல்லுதே"

மேலும் காதலன் சொல்கின்றான், உடம்பில் சிறந்தது எது வென்று தெரியாது தவித்தானாம். ஆனால் அவனது கண்கள்தான் அவளைக் காட்டியது என்பதால் கண்தான் சிறந்தது என்கின்றான்.

"கண்ணே உன்னைக் காட்டியதால் என் கண்ணே சிறந்ததடி"

இது பழைய பாடலானாலும் இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பாடல்... "ஓராயிரம் பார்வையிலே உன் பார்வையை நானறிவேன். உன் காலடி ஓசையிலே உன் காதலை நானறிவேன்" எத்தனை பார்வைகள் இருந்தாலும்

–கார்த்திகா–

காதலியின் பார்வை காதலனுக்கு மட்டுமே புரியும்.

நேற்றுவரை நீயாரோ நான் யாரோ... என்ற பாடல் மனது மறக்காத இனிய பாடல். அதிலே வரும் வரிகள் இவை.

"உன்னை நான்
பார்க்கும்போது மண்ணை நீ
பார்க்கின்றாயே
விண்ணை நான்
பார்க்கும்போது என்னை நீ
பார்க்கின்றாயே
நேரிலே பார்த்தாலென்ன
நிலவென்ன தேய்ந்தாபோகும்
புன்னகை புரிந்தாலென்ன
பூமுகம் சிவந்தாபோகும்"

இப்பாடல் வரிகள் வள்ளுவரின் குறளோடு அழகாகப் பொருந்துகிறது.

"யான் நோக்கும் காலை நிலன்
நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்."

காதலி நேருக்கு நேர் தன் காதலன் முகத்தைப் பார்க்க நாணுவாள். நிலம் நோக்கி இருக்கும் அவள் கண்கள் காதலன் தன்னைப் பார்க்கவில்லை என்று உணர்ந்ததும், நிமிர்ந்து அவனைப் பார்க்கும். திடீரென அவன் திரும்பி அவளைப் பார்த்துவிட்டால் உடனே நிலத்தை நோக்குவாள். இந்தப் பார்வைகளின் விளையாட்டைத் தான் மேலேயுள்ள பாடல் கூறுகிறது.

இதோ மற்றொரு காதலன் இப்படிச் சொல்கிறான் "பார்வை ஒன்றே போதுமே பல்லாயிரம் சொல் வேண்டுமா...? பார்வைகளே வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்ளும்போது அங்கு வாய் வார்த்தைகள் எதற்கு?"

இது கணினியுகம். அதனால்




கண்களை கணினியோடு உவமைப்படுத்தி ஏராளமான பாடல்கள் வெளியாகி உள்ளன. உதாரணத்திற்கு ரெட் திரைப்படத்தில் இடம் பெற்ற ஒரு பாடல் "காதல் வெப்சைட் ஒன்று கண்டேன் உந்தன் கண்ணில்..." என்ற பாடலைக் குறிப்பிடலாம்.

பேசாத கண்ணும் பேசுமே என்ற திரைப்படத்தில் இடம்பெற்ற "விண்ணை விட்டுப் போகாதே..." என்ற பாடலில் "கண்கள் என்னும் மின்னஞ்சல் இலட்சம் தகவல் சொல்கிறது. காதல் என்னும் கணிப்பொறியில் எல்லாம் ஒன்று சேர்க்கிறது..." என்ற வரிகளில் கண்களை மின்னஞ்சலுக்கும் காதலை கணினிக்கும் ஒப்பிட்டிருக்கிறார்கள். ஆரம்ப காலங்களில் இயற்கையோடு கண்களை உவமைப்படுத்தியவர்கள். நவீன யுகத்தில் இயந்திரங்களோடு கண்களை உவமிக்கின்றார்கள். இருப்பினும் கவிதையின் சுவையில் மாற்றமில்லை.

காலத்துக்குக் காலம் கவிதை அமைப்பும் கண்களின் உவமைகளும் மாறலாம். ஆனால் எப்பொழுதும் கண்களின் தனித்துவமான அழகும் அவை கவிதைகளாக வார்த்தைகளில் அரங்கேறி வரும் பாங்கும், பார்வைகளாலே பன்மொழி பேசும் சிறப்பும் எப்பொழுதும் மாறாது. அவை எம் கண்களில் என்றும் கவிபாடிக் கொண்டே இருக்கும்.

(முற்றும்.....)

## ஒப்பாந்தமிழில் நீர் கவிதை

அல் அஸூமத்

KF

படிமம் இல்லாது கவிதை எழுதக் கூடாதா? என்று நீங்கள் வினவலாம்.

இயல்பு நவிற்சியணி என்ற தமிழ்க்கவிதை மரபுதான் அது. எழுதலாம். ஆயினும் அது உயர் சீர்களால் ஓசையோடாவது அமைதல் வேண்டும். இல்லாது போனால் வசன கவிதை என்று சொல்லப்பட்டுவிடும். அல்லது கவிதையே அல்ல எனப்பட்டுவிடும்! படிமம் இருப்பதுதான் யாப்பிலிக் கவிதைக்கழகு. இல்லாவிடிற் குறியீடாவது இருத்தல் அவசியம்.

'நாங்கள் சேற்றுக்குள் கால் வைப்பதால்தான்
நீங்கள் சோற்றில் கை வைக்கிறீர்கள்'
என்ற கவிதையில் படிமம் இல்லை.
ஆனால் குறியீடு இருக்கிறது.

### கவிதை பற்றிய வழிகாட்டித் தொடர் 60

சேற்றுக்குள் கால் வைத்தல் என்பது எதைக் குறிக்கிறது? வயலில் உழுவதைக் குறிக்கிறது. எனவே வயலில் உழைப்பதைக் குறிப்பதற்குப் பயன்படும் அந்தச் சொற்றொடர்தான் குறியீடு.

நாங்கள் என்ற வார்த்தையும் ஒரு குறியீடுதான்: நாங்கள் என்று இங்கே கூறுபவர்கள் உழவர்களாகத்தான் இருக்கமுடியும். எனவே உழவர்களுக்குக் குறியீடாக நாங்கள் இருக்கிறது. நீங்கள் என்ற சொல், சோற்றில் கை வைக்கும் எல்லோருக்கும் குறியீடாக இருக்கிறது. சோற்றில் கை வைத்தல் எனும் குறியீடு, சாப்பிடுவதற்கு அமைகிறது.

இவ்வாறு குறிப்பால் ஒன்றை உணர்த்தும் வார்த்தைதான் குறியீடு எனப்படுகிறது.

விளையும் பயிரை முளையிலே அறியலாம் என்கிறோம். இதன் பொருள் நமக்குத் தெரியும். எனவே, விளையும் பயிர் எனப்படுவது வளர்ச்சி பெறுகிறர்வர்களுக்கும், முளை எனப்படுவது ஆரம்பம் அதாவது வளரும் இளம் பருவம் என்பதற்கும் குறியீடுகளாக அமைகின்றன.

வாசகருக்கு முன்பின் தெரியாத ஒரு பொருளையோ கருத்தையோ குறியீட்டின் மூலமோ படிமத்தின் மூலமோ விளக்கிவிட முடியாது.

(தொடரும்.....)

# கதைகள்


## அண்ணனின் காதலி!

-செ.துஷ்யந்தன்-
பாண்டிருப்பு

கொஞ்ச நாட்களாகவே என்மனதிற்குள் சஞ்சலம். ஒழுங்காக சாப்பிட முடிவதில்லை, படுக்கைக்குப் போனால் நித்திரை வருவதில்லை. வண்ண வண்ணக் கனவுகள். இதற்கெல்லாம் காரணம் கவ்யா. கவ்யாவைப் பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும்.

எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் புதிதாக குடி வந்திருப்பவள்தான் கவ்யா. பெரிதாக அழகு இல்லா விட்டாலும், சுமாரான அழகு. தனியார் நிறுவனம் ஒன்றில் இலிகிதராக கடமை புரிகின்றாள். என் தங்கை மாலாவுடன் அடிக்கடி வீட்டுக்கு வருவாள். இதனால் எனக்கும் அவளுக்குமிடையே நட்பு மலர்ந்தது. அந்த நட்புத்தான் இன்று என் மனதில் காதலாக மலர்ந்திருக்கின்றது.

கவ்யா என்னிடம் சிரித்து சிரித்து பேசும் போது அவள் கன்னத்தில் விழும் குழி என் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். என் மனதிற்குள்ளே அவளை ஒருதலையாகக் காதலித்து வந்தேன். எப்படி என் எண்ணங்களை அவளிடம் சொல்வது என்று தெரியாமல் தவித்திருந்தேன். சிலவேளை கவ்யா என் காதலை ஏற்றுக் கொள்ளாவிட்டால்...பல எண்ணங்கள் என் மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்த போதுதான் "நாளை பெப்ரவரி 14ம் திகதி உலகத்திலுள்ள காதலர்கள் எல்லாம் தங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்வதற்காக "காதலர் தினத்தைக்" கொண்டாடுவதற்கு தயாராகி வருகின்றனர்" என்ற வானொலிச் செய்தி என் காதில் விழுந்தது.



ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். எத்தனை நாளைக்குத் தான் ஒருதலையாக மனதிற்குள் அவளை நினைத்து ஏங்கி கொண்டிருப்பது? எப்படியோ நாளை அவளிடம் எனது விருப்பத்தைத் தெரிவித்து விடவேண்டும் என்ற முடிவுடன் நாளை அவளிடம் என்ன கதைப்பது? எதிலிருந்து தொடங்குவது? என்பது பற்றி எனக்குள்ளே ஒத்திகைப் பார்த்துக் கொண்டேன். அவளின் நினைவுகளுடன் அன்றிரவு பொழுது கழிந்தது. விடிந்ததும் அவளைச் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் புது மாப்பிள்ளை போல் என்னை அலங்கரித்துக் கொண்டு அவள் வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானேன். அப்போது....

"மாலா, மாலா" என்றவாறு கவ்யா என்ற என் அழகு தேவதையே வீடுதேடி வந்தாள். கும்பிடப் போன சாமி குறுக்கே வந்தது போலிருந்தது எனக்கு. "சுரேஸ் வீட்டில யாருமில்லையா?" கவ்யா கேட்டாள். என்னை சுதாரித்துக் கொண்டு சொன்னேன். "மாலா கிளாசுக்குப் போயிருக்கிறாள். அம்மா கடைக்குப் போயிருக்கிறார், அருண் அண்ணன் இப்பத்தான் வெளியில போகிறார். என்ன விசயம்?" என மூச்சுவிடாமல் கேட்டேன்.

"வீட்டில ஒருவருமில்லாதது நல்லதாய் போயிட்டுது. நான் உங்களோடதான் கொஞ்சம் கதைக்க வேண்டும்" கவ்யா சொன்னதும் என் மனதிற்குள் ஆயிரமாயிரம் மின்னல்கள். வானத்தில் பறப்பது போன்ற நினைவு. என்னைப் போலதான் அவளும் இரவு முழுக்க தூங்காமல் விழித்திருக்க வேண்டும். அவள் கண்கள் சிவந்திருந்ததிலிருந்து கண்டு கொண்டேன். நானும் உங்களோட கதைக்க வேணும் என்றிருந்தேன் என்று சொல்ல வாயெடுத்துவிட்டு சொன்னேன்.

"என்ன கவ்யா எதுவாயிருந்தாலும் மனம் விட்டு கதைக்க வேணும். சொல்லுங்க"

கவ்யா தொடர்ந்தாள்.... "சுரேஸ் நான் இங்கே வந்ததிலிருந்து உங்களோட மட்டும் தான் பேசியிருக்கிறேன்; பழகியிருக்கிறேன். மற்றவங்க என்ன நினைக்கிறாங்க என்பது பற்றி எனக்குக் கவலயில்லை. நீங்க எனக்கொரு உதவிசெய்யவேணும்?" என்றாள். "என்ன உதவி செய்யவேணும். சொல்லுங்க கவ்யா, செய்யிறன். உங்களுக்காக என்னுயிரைக் கொடுத்தாவது உதவி செய்ய காத்துக்கிட்டிருக்கிறேன்..." என்றேன்.

கொடுப்புக்குள் சிரித்துவிட்டு சொன்னாள். "சுரேஸ் நானும்... உங்கட அண்ணன் அருணும் ஒருத்தர ஒருத்தர் காதலிக்கிறோம்... நீங்கதான் வீட்டில சொல்லி... இரண்டு வீட்டார் சம்மதத்தையும் பெற்றுத் தரவேணும். செய்வீங்களா சுரேஸ்...?" கவ்யா கூறி முடித்ததும்...

என் மனதிற்குள் அவளைப் பற்றி கட்டி வைத்திருந்த காதல் கோட்டை இடிந்தது. உடல் நடுங்கியது. கண்களில் கண்ணீர் வர எத்தனித்தது. என்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு நா தளதளக்க சொன்னேன். "உங்களுக்காக இதக்கூட செய்யாம இருப்பேனோ?" நான் கூறி முடித்ததும் அவள் கையில் வைத்திருந்த கடிதத்தை அண்ணனிடம் கொடுத்துவிடுமாறு கூறி, சிட்டாய்ப் பறந்தாள்.

*(யாவும் கற்பனை.)*

## கட்டாயம் வாங்க வேண்டும்

-றஸீனா புஹார்-

எப்படியாவது இந்த வருடம் "அதை" வாங்கிவிட வேண்டும். இன்ஷா அல்லாஹ்! இறைவன் நிச்சயம் உதவி செய்வான். நெடுநாள் முயன்றும் எதிர்பார்த்து (இதுவரை) ஏமாந்து, என்ன செய்வது. ஒரு சராசரி ஆசிரியனாக இருந்தால் இப்படி கஷ்டப்படத்தான் வேண்டும். மாதச் சம்பளம் கிடைக்கும் தனக்கே இப்படி என்றால்... தினக்கூலிகள் என்ன செய்வார்கள்...? நினைத்தும் பார்க்க முடியாது, அவர்களால் "அதை".

எத்தனையோ பேரிடம் சொல்லியாகி விட்டது. போன வருடம் ஒன்று சரிவரும் போல் இருந்தது. ஆனால் விலை கொஞ்சம் அதிகம் என்பதால் வசதி உள்ள வேறு ஒருவர் வாங்கிக் கொண்டார். இனி... என்றாலும் "அது" அவசியம் தேவை. நாட்கள் வாரங்களாகி; வாரங்கள் மாதங்களாகி; மாதங்கள் வருடங்களாகி; ஏழு எட்டாகப் போகின்றது. கவலை நெஞ்சைப் பிசைந்தது.

ஆஸ்பத்திரியில் பார்த்தால் "அரை"யைக் கேட்கும்; கோர்ட் வாசலில் நின்றாலோ, "காலை"த் தேடும்;வேறு ஒரு உயர்ந்ததைத் தேடினால் அதுவும் காலையோ காலுக்கு சற்று கீழேயே கேட்கும். சரிதான் என்று சந்தையில் சாதாரண ஒன்றை வாங்கலாம் என்றால் அதுகூட இரண்டு, மூன்று வரும். இருக்க இடமும் தேவை. அதற்கு மேல் லத்தீப் சேரால் யோசிக்க முடியவில்லை. வெற்றுத் தரையில் வெறுப்போடு அமர்ந்தார்.

என்றாலும் செக்குமாட்டைப் போல் சிந்தனை மறுபடி, மறுபடி விட்ட இடத்தையே தொட்டுத் தொட்டு வந்தது.

அவரின் இளமை நாட்களில் என்றால் இத்தனை அலைச்சலும், கஷ்டமும் இல்லை. தேவையென்றால் ஊர்பெரியவர்களே அதற்கான ஏற்பாட்டை சும்மாவே செய்வார்கள். படிப்பறிவற்ற அன்றைய மக்களிடம் இருந்த பரந்த மனம் ஏன் இன்றைய மனிதர்களிடம் இல்லாமல் போனது... இப்போது இருப்பவர்கள் எவ்வளவு புத்திசாலிகள். எத்தனை அறிவாளிகள். ஆனால் இவர்களிடம் ஏன் இரக்கமும் அன்பும் இல்லை. எல்லாவற்றுக்கும் காசையே கணக்குப் பார்க்கும் வியாபாரிகளாக...

காய்த்து குலுங்கிய வேலியோரத்து மாமரத்தில், அழகான ஒரு சோடிக் கிளிகள் அவை. அலகு கோதி இறகுகளால் ஒன்றை ஒன்று வருடி எத்தனை சந்தோஷமாய், சுதந்திரமாய்... சட்டென திரும்பிப் பார்த்தப் போது அவரின் மகள் ஜஸ்மினும் கண்கொட்டாது அதையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. எல்லாத் திறமைகளோடும் அடக்கத்தோடும் இருந்த ஜஸ்மின். அவர் வாழ்வின் ஜீவனே அவள் தான். அந்த ஒற்றைப்பதினாறில் ஒரு தேவதையாய், மல்லிகையாய், மயக்கும் அழகோடு. ஆனால் இப்போ இரண்டு பதினாறுகளை எட்டப்போகும் அவளது இளமை. ஆனால் அவள் இன்னும் ஒற்றைப்பனைமர மாய், ஆண்டவனே இது என்ன சோதனை!..

மகளின் முகத்தில் ஏக்கமும் எதிர்பார்ப்பும். மகள் ஜஸ்மின் மிக நல்லவள். சிறுவயதிலிருந்தே பெற்றோரை எதுவும் கேட்டுத் தொந்தரவு தராதவள். என்ன வாங்கிக் கொடுத்தாலும் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்பவள். சின்னச் சின்ன தாய் சிறுவயதில் சமாளித் தாகிவிட்டது. ஆனால் இப்போ 'அதைத்தான் கட்டாயம் வாங்க வேண்டும்' அதன் தேவை மகளுக்கு மிக முக்கியம். அவைகள் கட்டையாக, நெட்டையாக, கறுப்பாக, சிவப்பாக, ஒல்லியாக, குண்டாக எப்படி இருந்தாலும் சொன்னால் சொன்ன விலை தான்.

வருடங்கள் போகப் போக மனதின் வருத்தங்கள்தான் அதிகமாகும். தரமானதைப் பார்த்துப் பார்த்து தவறிப்போனவை ஏராளம். இனியும் தாமதிக்க முடியாது. பயன் அதிகமாக இல்லாது விட்டாலும் பாதுகாப்புக்காகவேனும் ஒரு வயதுபோன "காளை"யைச் சரி கையில் இருப்பதைக் கொடுத்து வாங்கிவிட வேண்டியது தான்.

## காரணம் புரிந்தது

கா.சுபாஷ், டிக்கோயா

ஏன் இப்படி ஒரு திடீர் மாறுதல், 'ஓவர் நைட்' மாறுதல் ஏற்பட்டது இளங்கோவிடம் என்று எனக்குப் புரியவில்லை. இலக்கிய ஆர்வம் உள்ளவன், விமர்சிக்கும் திறமை உள்ளவன், நிறைய கதைகள், கவிதைகள் எழுதி (திரும்பி வந்தது) வைத்திருக்கிறான். பல போட்டிகளுக்கு அனுப்பி வெற்றிக் கோப்பையைப் பெற முடியாமல் வருந்துபவன், ஆணித்தரமான அபிப்பிராயங்களுக்குச் சொந்தக்காரன். அரசியல் துஷ்பிரயோகங்களை எதிர்ப்பதில் முன்னிற்பவன், குறிப்பாக மலையக அரசியல்வாதிகளைத் தமது பேனை எனும் ஆயுதத்தால் நிலை தடுமாறச் செய்தவன்.

அவனுடைய தூண்டுதலின் துணையுடனேயே இந்த வாசகர் மன்றத்தினை ஆரம்பித்தோம். இலக்கியம் என்ற பெயரில் ஆபாசத்தை - போலியைப் படைக்கிறார்கள்; விற்கின்றார்கள். அதுவும் வாசகர்கள் இதைத்தான் விரும்புகிறார்கள் என்று நம்மீது பழி போடுகின்றார்கள். தற்போது வெளிவரும் தமிழ் சினிமா பாடல்களில், தமிழில் இல்லாத சொற்களை எழுதி, அர்த்தம் கேட்டால் "இதைத்தான் இசைப்பிரியர்கள் எதிர்பார்க்கிறார்கள்" என்பவர்கள் போல இதை மாற்ற ஒரு 'வாசகர் மன்றம்' ஆரம்பிக்க வேண்டும். வருகிற கதைகளைத் தூண்டித்துருவிப் படிக்க வேண்டும். தரக் குறைவான எழுத்துக்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும். தீர்மானம் எடுக்க வேண்டும். ஆசிரியருக்குக் கடிதம் எழுத வேண்டும்...!

இந்த அவனின் இலட்சியத்தின் பேரில் தான் இந்த வாசகர் மன்றத்தைத் ஆரம்பிக்க இன்று கூட்டம் போட்டோம். நான் கஜன், ரவி, தினேஷ், பாபு, சசி, சித்ரா, ஆனந்த், கல்யாணி எல்லோரும் கூடிவிட்டோம். இப்போது பேசுகிறான் இளங்கோ. "எது ஆபாசம்? எது ஆபாசம் இல்லை? இதற்கு ஏதாவது அளவு கோல் சொல்லும் உரிமை எவருக்குமே கிடையாது. இந்தக் காரியத்தை என்று செய்கிறோமோ அன்று இலக்கியத்திற்கு இருண்ட காலம் ஆரம்பித்துவிட்டது என்று அர்த்தம்."

"இல்லை இளங்கோ! இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் மனசு கெட்டுப் போவது" கஜன் குறுக்கிட்டான்.

ஏளனச் சிரிப்புச் சிரித்தான் இளங்கோ.

"கதையைப் படித்துக் கெட்டுப் போவது என்பது வேடிக்கைதான். இப்படிப் பார்த்தால் நாம் ஆத்திசூடி, நாலடியாரை வைத்து பஜனை பண்ணிக் கொண்டிருக்க வேண்டியது தான்" என்றான்.

விடவில்லை கஜன். "இருந்தாலும் எதை எழுதுவது, எதை எழுதக் கூடாது என்று ஒருவிவஸ்தை இல்லையா? எவ்வளவு அசிங்கமாக எழுதுகிறாகள்!"

எது அசிங்கம் என்று தான் கேட்கிறேன். கம்பனும், காளிதாசனும், வால்மீகியும், வாத்ஸ்யாயரும் அசிங்கத்தையா எழுதினார்கள்? கோயில் சிற்பங்களும், அழகிய சிலைகளும் அசிங்கத்தையா வடித்திருக்கின்றன? எதுவுமே நாம் பார்க்கிற பார்வையில தான் இருக்கு..." என்றான்.

சரி, இவனுடன் பேசிப் பயனில்லை என்று எல்லோரும் கலைந்து சென்றோம். திடீரென்று "எதிர்க் கட்சி" வக்கீலாக அல்லவா மாறி விட்டான்? ஏனிந்த மாற்றம்? என்ன நடந்தது? விஷயம் புரியாமல் வீட்டை நோக்கி நடை போட்டோம். வழியில் "மலைக்குரல்" இதழை வாங்கிப் புரட்டினோம்.

முழுபக்க அளவில் கிட்டத்தட்ட முழு நிர்வாணமாய் பெண். பக்கத்தில் ஒரு கவர்ச்சிக் கதை எழுதியவர் இளங்கோ என்ற பெயருடன் கதை பத்திரிகையில் பிரசுரமாகி விட்டது.... அவனுடைய மன மாற்றத்திற்குக் காரணம் புரிந்தது இப்போது...!

சிறுகதை

# நினைத்ததெல்லாம் நடந்துவிட்டால்

எம். ரீ. தஸ்லீமா, சம்மாந்துறை 01

ஆதவன் மெல்ல மெல்ல அஸ்தமித்து ஆனந்த மாலையை வரவேற்கும் நேரம்; இதமான தென்றல் இதயங்களைத் தாலாட்டிக் கொண்டிருக்க பூத்துக் குலுங்கும் பூமரங்கள் காற்றின் அசைவுக்கு பூக்களைச் சொரிந்து கொண்டிருந்தன.

அந்தப் பூங்கா எங்கும் காதலர்கள் பட்டாம் பூச்சிகளாய் சுதந்திரமாகச் சுற்றித்திரிந்தனர். அத்தனை பேருக்கும் மத்தியில் அமைதி யாக நடந்து வந்தார்கள் அன்ஸாரும், றிஸ்பானாவும்.

"அன்ஸார்.... ஏதாவது பேசுங்களேன்..." என்றவள் கீழே கிடந்த சிறிய கல்லில் கால் தடுக்கி விழுந்தாள். அவள் விழுந்ததும் அன்ஸார் துடித்துப் போனான்.

"என்ன... றிஸ்பானா இது... பார்த்து நடக்கக்கூடாதா?"

"அன்ஸார் பார்த்தீங்களா... இதுக்குத்தான் நான் இந்த இடங்களுக்கெல்லாம் வரமுடியாதென்றேன்..."

"சாரிம்மா... என்ன மன்னிச்சுடுங்க... அடிக்கடி உன்ர நிலையை நான் மறந்திடுறன்..." என்றவாறு அவள் தலையை வருடினான்.

"அன்ஸார், ஒரு கால் ஊனமான நான் உங்களோட நொண்டி நொண்டி நடக்கிறத மற்றவர்கள் வேடிக்கை பார்க்கிறப்போ அது உங்களுக்கு அவமானமா இல்லையா..?"

"றிஸ்பானா, என்ன பேச்சு இது... ஊனமெல்லாம் ஒரு குறையே இல்ல... அல்லாஹ் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு குறைய வெச்சிருக்கான்... இல்லேன்னா அல்லாஹ் இருப்பதையே எல்லாரும் மறந்திடுவாங்க... ஒம்மனசுக்கு ஆறுதலா இருக்குமேன்னுதான் உன்ன இங்க கூட்டி வந்தேன்.. என்கூட வாழப்போறது நீதானே... எனக்கு மத்தவங்களப் பற்றி கவலையே இல்ல..." என்ற அன்ஸாரின் கண்கள் கலங்கின. அதனைக் கண்ட றிஸ்பானா அன்ஸாரைப் பாசத்தோடு நிமிர்ந்து பார்த்தாள்.

"அன்ஸார் உங்களை நினைக்கும்போது எனக்குப் பெருமையாகத்தான் இருக்கு. இருந்தாலும் நான் உங்களுக்கு எந்த வகையிலும் பொருத்தமில்லையே... நீங்க பத்திரிகை ஆசிரியரா ஒரு பொறுப்பான பதவியில இருக்கீங்க... நான் முடமாகவும்; ஏழையாகவும் பிறந்திட்டேனே... நம்ம காதல் உங்க வீட்டுக்குத் தெரிஞ்சா உங்களோட உம்மா, வாப்பா சம்மதிப்பாங்களா....?"

"றிஸ்பானா.. நீ இதப்பத்தி வீணா கவலைப்படாதேடா... எங்க வீட்ட சொல்லி சம்மதம் கேட்கிறேன்.. எல்லாம் அல்லாஹ்வின் நாட்டப்படிதான் நடக்கும்..."

இருவரும் பேசிக்கொண்டே அவ்விடத்தை விட்டுச் சென்றனர். மறுநாட்காலை அன்ஸார் வேலைக்குப் போக ஆயத்தமாகிக்கொண்டிருந்தபோது,

"என்ன மகன் அவசரமா வெளிக்கிர்றீங்க... நான் இரவு சொன்னதைப் பத்தி என்ன முடிவெடுத்திருக்கீங்க..."

முகம்மட் தம்பி கேட்டதும் அன்ஸார் தடுமாறினான்.

"வாப்பா நான் என்ன சொல்றதின்னே தெரியல..."

"என்னப்பா ஏன் தயங்குற.... யாரையாவது விரும்புறியா?"

"வாப்பா நான் வந்து... வந்து.. றிஸ்பானா என்ற பிள்ளைய விரும்புறன்.. அவ ஏழைன்னாலும் நல்ல குணமும், அழகும் நிறைஞ்சவ..."

"இதபாரு அன்ஸார் நீ விரும்பிறதில தப்பேயில்ல... ஏழைன்னு சொல்ற. இருந்தாலும் உனக்காகச் சம்மதிக்கிறேன்.... கல்யாணத்த தள்ளிப் போடக்கூடாது. இன்னிக்கே பெண் பார்க்கப் போகலாமா..."

முகம்மட்தம்பி அப்படிக் கேட்டதும் அன்ஸாருக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. தனது வாப்பா இவ்வளவு சுலபமாய் காதலுக்குப் பச்சைக்கொடி காட்டுவார் என்று கனவிலும் நினைக்கவில்லை. சந்தோசத்தில் தனது தந்தையைக் கட்டியணைத்து முத்தமிட்டான். அவனைச் சுற்றிலும் சந்தோசச் சிறகுகள் சாமரம் வீசின. வேலைக்குச் செல்ல நேரமானதும் சிட்டாகப் பறந்தான். சந்தோச மிகுதியால் அவனது கவனம் வேலையில் லயிக்கவில்லை. இடையிலேயே விடுமுறை எடுத்துக்கொண்டு றிஸ்பானாவைச் சந்தித்து விடயத்தைக் கூறினான்.

நேரம் மாலை ஐந்து மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அன்ஸார் தனது பெற்றோருடன் றிஸ்பானாவின் வீட்டிற்குச் சென்றான். றிஸ்பானாவின் தாயார் அவர்களை அன்போடு வரவேற்றாள். அனைவரும் நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு பெண்ணை வரச்சொன்னார்கள்.

றிஸ்பானா பெண்மைக்கேயுரிய நாணத்துடன் அவர்கள் முன் தலைகுனிந்து நடந்து வந்தாள். அந்த அழகு நிலவு நொண்டி நொண்டி நடக்கத் தடுமாறியதைக் கண்டதும், முகம்மட் தம்பி விருட்டென எழுந்து நின்றார்.

"டேய்... அன்ஸார் எழுந்திரு!.."

"வாப்பா... என்ன சொல்றீங்க...!"

"சொல்றதுக்கு இன்னும் என்ன இருக்கு... ஏழைன்னாலும் பரவாயில்லைன்னு பார்த்தா... போயும் போயும் ஒரு நொண்டிய விரும்பியிருக்கிறியே... உனக்கு அறிவு எங்கே போச்சு... நம்ம தகுதிக்கும், அந்தஸ்திற்கும் இதெல்லாம் சரிப்பட்டுவராது... ம்... ம்.. உனக்கொரு தடவ சொல்லணுமா...?" என்று மனைவியையும் தட்டிவிட்டு, அன்ஸார் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் விறுவிறுவென்று வெளியேறிவிட்டார். இதனைப் பார்த்ததும் றிஸ்பானா தனது தாயைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

"உம்மா என்ன அழகாப் படைத்த இறைவன் கால மட்டும் ஊனமாக்கிவிட்டானேம்மா...."

மகளின் அழுகையைத் தாங்கமுடியாத அந்தத் தாயுள்ளம் துயரால் துடித்தது. தன்னால் முடிந்தளவு மகளைத் தேற்றினாள் அந்தத் தாய். தனது தாயின் வார்த்தைகளால் ஆறுதலடைந்த றிஸ்பானா அன்ஸாரின் வரவிற்காகக் காத்திருந்தாள். அவள் எதிர்பார்த்தது போலவே சிலநாட்கள் கழித்து அன்ஸார் றிஸ்பானாவைச் சந்தித்தான்.

"றிஸ்பானா அன்று நடந்ததற்கு என்ன... மன்னிச்சிடு... நான் எப்படியாவது வாப்பாவை சம்மதிக்க வெச்சிடுறன்... எனக்காக காத்திரு..."

"வேண்டாம் அன்ஸார்... உங்களுக்கு நான் எந்த விதத்திலும் தகுதியில்ல. என்னைக் கட்டிக்கிட்டு நீங்க ஏன் கஷ்டப்படணும்... உங்கள் வாப்பா சொல்றதும் சரிதானே... அவங்க சொல்றதக் கேட்டு நடந்துக்கங்க..."

"ப்ளீஸ்... றிஸ்பானா... நீ எதுவும் பேசவேண்டாம். நான் நல்ல முடிவோடு உன்னைச் சந்திக்கிறன்." என்றவன் விடைபெற்றுச் சென்றான். முகம்மட் தம்பி தம் மகனுக்குப் பெண் தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். அன்ஸார் தனது தந்தையிடம் தன்னால் முடிந்தளவு மன்றாடினான்.

"வாப்பா தயவுசெய்து நான் சொல்றதக் கேளுங்க.."

"டேய்.. என் கோபத்தைக் கிளறாத.. நான் சொன்னா சொன்னதுதான்...."

"வாப்பா அப்படிச் சொல்லாதீங்க வாப்பா... நம்மைப் படைத்த அல்லாஹ் எல்லாவற்றையும் பார்த்திட்டிருக்கான்... எத்தனை தடவ ஹஜ்ஜுக்குப் போயிருக்கீங்க... நன்மைதீமையெல்லாம் அறிஞ்ச நீங்களே இப்படிச் செய்யலாமா?_ ஒரு பெண்ணை ஏமாத்துறது கொடிய பாவம் வாப்பா... தயவுசெய்து றிஸ்பானாவை எனக்கு நிக்காஹ் செய்து வைங்க..."

"அன்ஸார் மூடு வாய... உனக்கு யாரக் கட்டி வைக்கணும்னு எனக்குத் தெரியும்... இப்போ வெளிக்கிடு. என் நண்பன் வீட்டுக்குப் போகணும்..."

வாப்பாவின் சொல்லைத்தட்ட முடியாத அன்ஸார் ஏன், எதற்கு என்று கேட்காமல் அவருடன் காரில் புறப்பட்டுச் சென்றான். அவர்கள் சென்ற சில நிமிடங்களில் எதிர்பாராத விதமாக எதிரே வந்த வாகனத்தில் மோதுண்டு கார் விபத்திற்குள்ளானது. இருந்தாலும் சிறுசிறு காயங்களுடன் இருவரும் உயிர் தப்பினார்கள். இறைவனுக்கு மனமுருகி நன்றி செலுத்தினார்கள். இதுதான் சந்தர்ப்பம் என நினைத்த அன்ஸார் பழைய பல்லவியைத் தொடங்கினான்.

"பார்த்தீங்களா வாப்பா.. அல்லாஹ் நெனச்சிருந்தா இந்த இடத்திலேயே நம்ம உயிர்போயிருக்கும்... நாம இந்த உலகத்தில வாழப்போறது கொஞ்சகாலம்தான்... அதற்குள்ள ஏன் அகம்பாவத்தோட வாழணும்... இறைவனை வணங்கிட்டு, கிடைக்கிறத கொண்டு திருப்திய டைஞ்சு மனசுக்குப் பிடித்த வாழ்க்கையை அமைச் சோம்னா.... ஒவ்வொருத்தரோட வாழ்க்கையும் பூஞ்சோலையா மாறிடும்"

றிஸ்பானா கால்ல சிறு ஊனம் என்றதால அவள நீங்க ஏத்துக்கல.... இந்த விபத்தில நம்ம உயிர் பிரிஞ்சிருந்தா ஒரு பெண்ண ஏமாற்றின பாவத்தோட தானே மரணிச்சிருப்போம்... இனியாவது உங்க மனச மாத்திக்கங்க வாப்பா..." என்று அன்ஸார் கெஞ்சினான்.

மகனின் பேச்சை அவர் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. அன்ஸாரை முறைத்துப் பார்த்துவிட்டு "ம்..ம்.. எனக்குப் புத்தி சொல்லத் தேவையில்லை... காரில் ஏறு" என்று உத்தரவிட்டார். அன்ஸாருக்குத் தந்தை மீது வெறுப்புத்தான் வந்தது.

"ச்சே... என்ன மனுசன் இவர்... இந்த விபத்திலேயே நான் மவுத்தாகியிருக்கணும்..." என முணுமுணுத்துக் கொண் டான். சிலமணி நேரங்கழித்து;


"அன்ஸார் இறங்கு...." என்ற சத்தம் கேட்டதும் சிந்தனையோடு வந்த அன்ஸார் கதவைத்திறந்து கொண்டு இறங் கியதும், தான் நிற்கும் இடத் தைப் பார்த்து வியப்படைந்தான்.

றிஸ்பானா வீட்டு வாசலில் கார் நின்றிருந்தது. எதிரே றிஸ்பானாவும் அவள் தாயாரும் கலவரத்துடன் நின்றனர்.

"என்னம்மா... அப்படிப் பார்க்கிறீங்க... நான்... அன்று அல்லாஹ்வை மறந்து அறியாத்தனமா பேசிப்போட்டன். அதையெல்லாம் மனசில வெச்சிக்காதிங்க... இன்னிக்கு ஒரு விநாடியில நானும் என் மகனும்.. கையகால ஏன் உயிரையே இழந்திருப்போம் அல்லாஹ்... எங்கள காப்பாத்திட்டான்... ஊனமெல்லாம் ஒரு குறையில்லங்கிறத அந்த இறைவன் புரிய வெச்சிட்டான்..."

"உங்க மகள எம்மகனுக்கு நிக்காஹ் செய்துவைக்க... நான் முழுமனதோட சம்மதிக்கிறேன்... இறைவன் சேர்த்து வைச்ச ஜோடிகள நாம ஏன் பிரிக்கணும்... நானும் என் மனைவியும் ஒரு நல்ல நாளா தீர்மானிச்சு உங்கக்கிட்ட சொல்லுறம்... இப்போ சந்தோஷம்தானே!"

முகம்மட் தம்பி மூச்சுவிடாமல் பேசியதைக் கேட்டதும்... அன்ஸார் அல்ஹம்துலில்லாஹ் என்று இறைவனுக்கு நன்றி செலுத்தினான். றிஸ்பானா அன்ஸாரைப் பார்த்து நன்றியோடு புன்னகைத்தாள். ■



# காத்திருக்கிறேன் 15

சுபா

"அபிதா எங்கே என்று உங்களுக்குத் தெரியும்... ஆனால் உங்கள் மனைவிக்கு?"

"என்ன சொல்கிறாய்?"

"டெனிஸ் விளையாட காலையில போன மகள் இன்னும் திரும்பவில்லையே என்று உங்கள் மனைவிக்கு சந்தேகம் வந்து பொலிஸிற்கு போன் செய்து விட்டால்?"

"என்னைக் கேட்காமல் அப்படியெல்லாம் செய்யமாட்டாள்."

"சில நாட்களுக்கு முன்புவரை அப்படி இருந்திருக்கலாம். உங்கள் மனைவி உங்களை தெய்வமாக நினைத்திருக்கலாம்... ஆனால் காதம்பரி காஸெட்டைப் பார்த்த பிறகும் அந்தப் பழைய மரியாதை அப்படியே இருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா என்ன?"

சந்திரமோகன் குறும்புச் சிரிப்போடு கேட்டாலும் கூட அதில் அர்த்தமிருப்பதாக



பரமேஷ்வருக்குத் தோன்றியது.

"என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

"இந்நேரம் அபிதாவே உங்கள் மனைவிக்கு போன் பண்ணி பேசியிருக்க வேண்டும்... அவள் தோழி யாருக்கோ டென்னிஸ் கோர்ட்டில் ஹார்ட் அட்டாக் வந்து அவசரமாக டாக்டரிடம் அழைத்துப் போனதாகவும், அங்கிருந்து அப்படியே அவளை அழைத்துக் கொண்டு பெங்களூர் போவதாகவும் சொல்லியிருக்கலாம்... உங்கள் மூலம் மூன்று நான்கு செட் மாற்றுத்துணிகளைத் தந்துவிடச் சொல்லியிருக்கலாம்..."

"இதெல்லாம் உன் ஏற்பாடா?"

"எதையும் யோசித்து செய்ய வேண்டியிருக்கிறது சார்... என்னை விட புத்திசாலிகள் நிறைந்த உலகம் இது. நான் கவனமாய் இருக்க வேண்டியிருக்கிறது அல்லவா? எதற்கும் ஒரு நடை உங்கள் வீட்டுக்குப் போய்ப் பார்த்து விட்டு அப்புறம் ஆபீஸ் போவோமே!"

"அபிதா கடத்தப்பட்டது தெரிந்தால் என் மனைவியை யாராலும் கட்டுப்படுத்த முடியாது... நிச்சயம் அவள் பொலிஸில் தான் போய் நிற்பாள்..."

"அது அபிதாவிற்கு எவ்வளவு ஆபத்து! நாம் நேரத்தை வீணடிக்காமல் நகர்வோமே!"

பரமேஷ்வர் காரை வீட்டை நோக்கித் திருப்பினார்.

சந்திரமோகன் காரிலேயே காத்திருந்தான். பரமேஷ்வர் பரபரப்பாக இறங்கி வீட்டிற்குள் போனார்.

ஹால் மேஜை மீது ஒரு சிறு பயணப்பை தயாராக இருந்தது. அபிதாவின் பயணப்பை.

அவரைப் பார்த்ததும் மனைவி ஜானகி பையை சுட்டிக் காட்டினாள்.

"அபிதா உங்களிடம் பேசி விட்டாளா?" என்றாள்.

"பேசினாள்..." பரமேஷ்வர் தன் பரபரப்பை மறைத்துக் கொண்டார். "உன்னிடம் என்ன சொன்னாள்?" என்று கேட்டார்.

"அவள் தோழிக்குத் திடீர் என்று இதயவலியாம்... ஹாஸ்டலில் இருக்கும் பெண். அதனால் பிளேனில் அவள் அப்பா அம்மா ஊருக்கு அழைத்துப் போகிறாளாம்... மூன்று நாட்களுக்கான உடைகள் தயாராய் வைத்திருக்கிறேன்..." என்று அந்தப் பயணப்பையை அவரிடம் தூக்கிக் கொடுத்தாள்.

"அபிதாவிடம் இந்தப் பையைக் கொடுக்கப் போகும் போது நானும் வரட்டுமா?"

"வேண்டாம்" என்று அவசரமாக மறுத்தார், பரமேஷ்வர். "நான் அவளை நேரில் பார்க்க முடியுமா தெரியவில்லை.... யாரோ ஒரு டிரைவரை அனுப்பியிருக்கிறாள்.... அவனிடம் தான் கொடுத்து அனுப்பப் போகிறேன்."

பயணப்பையை வாங்கிக் கொண்டு பரமேஷ்வர் அவசரமாக வெளியே வந்தார்.

சந்திரமோகன் அவரை ஆச்சரியப்படுத்தத் துவங்கியிருந்தான். எவ்வளவு தூரம் முன்யோசனையுடன் செயல்படுகிறான்!

இவனிடம் வெகு கவனமாக இருக்க வேண்டும். அவனை முதலில் ஆழ்ந்து கவனித்து அவன் செயல்களிலிருந்து அவனுடைய பலவீனம் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அவசரப்பட்டு எந்த அடியும் எடுத்து வைத்து விடக்கூடாது.

பரமேஷ்வரின் வக்கீல் அலுவலகம். அவருடைய பிரத்யேக அறை. மிக செல்வாக்குள்ள வாடிக்கையாளர்கள் அமர்வதற்காகப் போடப்பட்ட உயர்ரக குஷன் நாற்காலியில் சந்திரமோகன் அமர்ந்திருந்தான்.

"மல்லையா என்பவரும், கிருஷ்ணதாஸ் அவருடைய பார்ட்னராகவும் நடத்திக் கொண்டிருந்த மல்லையா லேத் ஓர்க்ஸ் நினைவிருக்கிறதா?" என்றான் சந்திரமோகன்.

பரமேஷ்வரின் முகத்தில் ஒரு நிழல் ஓடியது.

"நினைவிருக்கிறது... இப்போது பிரமாதமான லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது..."

"அந்தத் தொழிற்சாலை இப்போது யாருக்குச் சொந்தம்?"

"மல்லையா இறந்த பிறகு அவருடைய முதலீட்டிற்கு ஒரு தொகை கணக்கிட்டு அவர் குடும்பத்தாரிடம் கொடுத்தாயிற்று. அவர் அங்கு இறந்ததால் அந்தத் தொழிற்சாலையில் அவர் குடும்பத்தினருக்கு ஆர்வம் இல்லை... பங்கு பிரித்து கொடுத்த பின் இப்போது அது முழுக்க முழுக்க கிருஷ்ணதாஸிற்குத்தான் சொந்தமாய் இருக்கிறது."

"அந்தக் கம்பனிக்கும் நீங்கள்தானே லீகல் அட்வைஸர்?"

"ஆமாம்!"

"கம்பனியின் பர்ஸனல் மனேஜரையும் கூப்பிட்டுக் கேளுங்கள்... அங்கு இப்போது இருக்கும் அத்தனை தொழிலாளர்களின் பெயர்... மற்றும் ஐந்து வருடத்திற்கு முன்னால் ரங்கசாமி என்று ஒரு சீனியர் தொழிலாளி தொழிற்சாலை விபத்தில் மாட்டி இறந்தாரே... அந்த நாளில் தொழிற்சாலையில் வேலை செய்து அப்புறம் ஓய்வு பெற்ற தொழிலாளிகளின் பெயர்கள் இரண்டையும் சேகரியுங்கள்...."

"சேகரித்து?"

"மல்லையா லேத் ஓர்க்ஸ் கம்பனியின் அத்தனைப் பங்குகளையும் அந்தத் தொழிலாளர்களுக்கு சமமாகப்பிரித்துக் கொடுத்து தொழிற்சாலையை அவர்கள் அத்தனை பேருக்கும் கூட்டாக வழங்கப் போகிறார், கிருஷ்ணதாஸ்... அதற்கான பத்திரம்தான் நாம் இப்போது எழுதப் போகிறோம்..."

"உனக்கென்ன பைத்தியமா? கிருஷ்ணதாஸ் ஒரு நாளும் இதற்குச் சம்மதிக்கமாட்டார்.."

"பத்திரம் எழுதப் போவது நாம். அவர் எப்படி சம்மதிப்பார், எப்படி கையெழுத்துப் போடுவார் என்பதற்கெல்லாம் பொறுப்பு நான்! பத்திரம் எழுதும்போது மறக்காமல் கிருஷ்ணதாஸ் இதையெல்லாம் சுய நினைவோடு சொந்த புத்தியோடு எந்த வற்புறுத்தலும் இல்லாமல் எழுதிக் கொடுத்ததாக வாசகம் வர வேண்டும்... பத்திரம் மறுபடி மாற்ற முடியாதபடி இர்ரிவோக்கபில் (IRREVOCABLE) என்று சொல்வார்களே அந்த அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும்.."


"நீ போகாத ஊருக்கு வழி தேடுகிறாய்... கிருஷ்ணதாஸ் உயிரே போனால் கூட இந்தப் பத்திரத்தில் கையெழுத்து போடமாட்டார்..."


"உயிரே போனால் கூட.."

சந்திரமோகன் 'உயிரே' யை அழுத்திக் கேட்டான்.

*(காத்திருப்போம்........)*

## வித்தியாசங்கள் என்ன?





இரண்டு படங்களுக்கும் இடையில் குறைந்த பட்சம் ஐந்து வித்தியாசங்கள் காணப்படுகின்றன. கண்டுபிடிக்க முடியாவிடின் 22ம் பக்கம் செல்லவும்.

## காலத்தின் பாடல்

*மெட்டு :* **பொம்பிளைங்க காதலைத்தான் நம்பிவிடாதே..**

எம்பிமாரு கதைகளைத்தான் நம்பிவிடாதே... நம்பிவிடாதே...
நம்பியதால் நொந்துமனம் வெம்பி விடாதே வெம்பிவிடாதே....
ஐயான்னு காலில் விழுவார் வாக்கினைக் கேட்டு
ஐயோன்னு கையைவிரிப்பார் ஜெயிச்ச பிற்பாடு
அமைச்சர்கள் எல்லாம் சுயநலவாதி!
அவர்களுள் உண்டோ பொதுநலவாதி?
நம்பி விடாதே! நம்பி நம்பி விடாதே!! (2)

(எம்பிமாரு....)

அரசியலை சாக்கடைன்னு சொல்லிவச்சாங்க
அதில் ஈக்களாக எம்பியெல்லாம் மொய்ப்பதனாலே!
அரசியலை பூக்கடைன்னு சொல்லிவைப்போமே
அங்கு முட்களாக அவர் செயல்கள் தைப்பதனாலே!
அரசியலை கானல் நீரு என்று சொல்வோமே
அங்கு வாக்குறுதி யாவையுமே பொய்ப்பதனாலே!
நம்பி விடாதே! நம்பி நம்பிவிடாதே!! (2)

(எம்பிமாரு....)

பொன்னான வாக்குகளைப் போடுவதுண்டு!
அதைப் போடும் போது துளியேனும் சிந்திப்பதுண்டா?
பொன்னான வாக்குகளைக் கேட்பவருண்டு!
அதைப் பெற்ற பின்பு எமை வந்து சந்திப்பருண்டா?
எம்பிக்காக போஸ்டரத்தான் ஒட்டிவைப்பான்டா
எவராச்சும் ஒரு எம்பி நன்றி சொல்வாரா?
நம்பிவிடாதே! நம்பி நம்பிவிடாதே!! (2)

(எம்பிமாரு....)

வீதியெல்லாம் திருத்துவதாய் வாக்களிப்பாரு
இங்கு வீதியோரம் கற்கள் மட்டும் குவிந்திருக்குமே!
சாதியெல்லாம் ஒழிப்பதாக சவால் விடுவாரு
இங்கு வன்முறையைத் தூண்டிவிட்டு மகிழ்ந்திருப்பாரு!
ஆறாண்டு முடிந்த பின்னர் மீண்டும் வருவாரு
ஐயான்னு காலில் விழுந்து வோட்டுக் கேட்பாரு!
நம்பிவிடாதே! நம்பி நம்பி விடாதே!! (2)

(எம்பிமாரு....)

பாடலாக்கம் : காத்தநகர் நிலாக்கவி



'என்னடா ராமு சிலேட்டு முழுக்க முத்து.... முத்துன்னு எழுதிக்கிட்டு வந்திருக்கே?'

கையெழுத்து முத்து முத்தா இருக்கணும்னு நீங்கதானே சார் சொன்னீங்க!'

கவிராஜன்

# கவி முழக்கம்

## துடிக்கிற மனம்..!

நண்பனே
உன் கவிவரிகளை
இதயராகத்தில்
அடிக்கடி கேட்பதால்
துடிக்கிற என் மனம்
மடிகிறது மறு கணம்
உன்னைப் பார்த்துவிட
முடியாத தூரத்தில்
நானிருப்பதால்

உன் கவி வரிகளுக்காகவாவது
உன்னோடு பேசவும்,
நேசம் கொள்ளவும்,
பாசம் வைக்கவும்
கொள்ளை ஆசை இருக்குது.

ஆனாலும்,
உனக்கான
என் முதல் வரியை
உன் முகவரிக்கு
அனுப்பி வைக்க
உன் முகவரியும்
தொலைந்து போச்சுதடா,
அலையென மனம்
அடிக்குதடா
இந்தக் கன்னி மனம்
மடிந்து
மறுகணம் துடிக்குதடா.

*—கலைப்பிரியை*
*மருதமுனை ஹரீஷா..*

## இறைவனின் படைப்பு!

கடவுள்
சுமைகளைத் தந்து...
கூடவே
தோள்களையும் தந்துள்ளார்...!
ஆனால்
சுமக்க முடியவில்லை...!

கடவுள்
விழிகளைத் தந்து
கூடவே
வேதனையும் தந்துள்ளார்...!
அதனால்
பார்க்க முடியவில்லை...!

கடவுள்
மனதையும் படைத்து
மனம் மாறும்
மங்கையரையும்
படைத்துள்ளார்...!
அதனால்
காதலிக்க முடியவில்லை...!

ஆண்டவன்
ஆத்மாக்களைப் படைத்து...!
அதனோடு
ஆயுதத்தையும்
படைத்துள்ளார்...
அதனால்
அமைதியாய் இருக்க
முடியவில்லை...!

இனங்களைப் படைத்த
இறைவன் - கூடவே
இனவாதிகளையும்
படைத்துள்ளார் - அதனால்
இன்பமாக
வாழ முடியவில்லை...!

*—எஸ்.தமிழாம்பிகை*
*ஜெகன்,* நானாட்டான்.

## மாறிப்போனதாலோ..!

நான் காணும்
நட்புகளெல்லாம்
கானல் நீராகிப்
போவதேனோ...?
நான் பெற்று வந்த
வரத்தின்
பிறவிக் குணம்
அதுதானோ...?
தோள் கொடுத்து
வாழ நினைக்கிறேன்
தோன்றி மறைவதேனோ..?
கொஞ்சும் மொழிகளில்
பேசி -
நஞ்சாய்ப் போவதேனோ...?
ஒருதாய்
பெற்ற பிள்ளைகள் போலிருந்து
இரு தாய்
பெற்ற தென்பதை
நிரூபிப்பதேனோ...?
'காலமது'
மாறிப் போனதனாலோ!

*—சிபானா அஹமட்,*
*காத்தான்குடி.*

## கருகும் இரவுகள்..!

அமாவாசை கவ்விய இரவு
அடுக்கடுக்காய் கரும்
அலைகள்...

நீர் சுற்றிய வீடாய்
விலாசமற்ற படகோட்டம்...

தூரமிதக்கும் தாரகைகள்
மன்னவளின் மதியாய் கண்
சிமிட்டும்...

வான் வெளியும் நீர்க்கொதியும்
புகட்டும் பாடங்கள்...

தாலாட்டும் படகாட்டம்
தூக்கத்தைப் பதம் பார்க்கும்...

அட்டகாசம் செய்யும் ஆழ்கடல்
பனிதுவண்டு முகம்
மறைக்கும்...

இறுக்கிய கம்பளி
உரிக்க முடியாது உடல்
உறைக்கும்...

நாவரண்டு ஒலிக்கும் கீதங்கள்
என்னவள் நினைவூட்டும்...

கடற்பஞ்சாய் நான் மிதக்க
எரிபஞ்சாய் அவள் மன
மிருகும்...

பூங்கொடியை கிரகணங்கொள்ள
துடிக்கும் மனது
பயணிக்கும் இரவுகள்
எரிகற்களாய் கருகிறது
உயிரினிலே...?

*—மருத நிலா,*
*சாய்ந்தமருது 17.*

## மறவாதே கண்மணி!

உறங்கிடா என் நெஞ்சுக்கு
உன் ஏக்கமே காரணமா

தேடிய என் காதலுக்கு
கானலாய் ஒரு முகவரியா

தள்ளி நீ இருந்தாலும்
துள்ளி நான் திரிந்ததாலா
தவறி நாம்
விழுந்து விட்டோம்
வழியறியா நரகினிலே...

உன் நினைவில்லா
என் நெஞ்சம்
உறங்கிடாது ஒரு போதும்

சக்கரையாய் கரைந்து
போனோம்
காதலென்னும்
கடலுக்குள்ளே

காத்திருந்து நீ பூத்ததாலே
என் கண்மணியாய்
நீ ஆனாய் பெண்ணே!

மின் மினியாய் நீ பறக்கையிலே
பொன் மணியாய்
உனை காப்பேன் நானே...

என் உருவத்திலிருந்து
உயிர் பிரிந்தாலும்
என் உயிரிலிருந்து
உன் உறவு பிரியாது..
என்றுமே...

*—காத்தநகர் மபூசன்.*

## உனக்குள் நான்

என் வாழ்நாட்கள் இன்று
வசந்த நாட்களை
அனுபவிப்பது
உன்னால்தான்.

உன் காதலால் என்
சோகங்கள் அனைத்தும்
காணாமல் போகிறது

நீ என்னில் காட்டும்
பாசத்தை நினைக்கையில்
மனமோ
இன்பராகம் பாடுகிறது.

உன் நினைவுகளால் நான்
என்னை
மறந்து போகிறேன்

உனக்குள் நான்
என்னையே
தொலைத்து விட்டேன்

*—எம்.எஸ்.நசீஹா,*
*ஏத்தாலை.*




# இசை தரும் இன்பம்

இன்றைய நவீன உலகில் மனிதன் இயந்திரமாகச் சுழலுகின்றான். பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்கே முழு நேரத்தையும், செலவழிக்கின்றான். ஆனாலும் அவன் மனதுக்கு அமைதியோ ஆறுதலோ கிடைக்காமல் அலைமோதுகின்றான். அதற்காக சிலர் புகைத்தலிலும், மது அருந்துவதிலும் ஏதோ ஒரு இன்பம் இருப்பதாக எண்ணி ஆரோக்கியமான உடலையும் வீணாக அழித்துக் கொள்கின்றனர்.

ஆனால், இசைக்கு விருப்பமுள்ளவன் ஒரே வித இன்பத்தை அனுபவிக்கின்றான். "ஆம்" இசை மனதை இளகச் செய்கிறது; கல்லை கனியாக்குகிறது; பட்ட மரத்தையும் துளிர்விட செய்கிறது; பாலைவனத்திலும் நீர் சுரக்க வைக்கிறது; இசை ஒரு தெய்வீக கலை. இசையை ரசிப்பதற்கு இனம், மொழி என்ற பேதங்களில்லை.

அல்லும் பகலும் அயராது உழைத்து களைக்கும் இளம் நெஞ்சங்களே... உங்கள் வாழ்விலும் நிம்மதி, சந்தோஷம் வேண்டுமென்றால்... அன்றாட வேலைகளின் பின் குறைந்தது ஒரு மணி நேரமாவது உங்களுக்கு பிடித்த இசையைக் கேளுங்கள். ஒன்றுமே அறியாத பச்சைக் குழந்தைகூட, தாயின் தாலாட்டில் அமைதியாக உறங்குகின்றது. புன்னாகவரளி பாடும் போது, பாம்பு கூட படமெடுத்து ஆடுகின்றது.



அறிவில்லா ஜந்துகளையும், அசையாத ஜடங்களையும் கூட இசை தன் வசப்படுத்திக் கொள்கின்றது. இளைஞர்களே...! இயற்கையைப் பாருங்கள் எங்கோ தொலைவில் இடைவிடாது கேட்கும் கோவில் மணியோசை காற்றோடு சங்கமித்து, இசையாகிறது. மலை பாறையிலிருந்து வந்து விழும் நீரருவியின் ஓசையும்; ஓடும் நதியின் சலசலக்கும் சத்தமும் கூட சங்கீதமே..., சற்று சிந்தித்துப் பாருங்கள். திரைப்படத்தை எடுத்துக் கொண்டால் அதன் பின்னணியில் ஒரு இசை ஒலித்து கொண்டேயிருக்கும். இதற்குக் காரணமென்னவென்றால் ரசிகனின் முழுக் கவனமும் திரைப்படத்தில் ஊன்ற வேண்டும் என்றுதான்.

அத்துடன் வீணை, வயலின், கிடார் போன்ற நரம்புக் கருவிகளில் பிறக்கும் இசையானது காது நரம்புகளை சுகப்படுத்தி, மனதையும் மென்மையாக்குகின்றது. சில வகையான அலைகள் நமது உடம்பையும் அசைய வைத்து, பதற்றம் போன்ற நிலையிலிருந்து மீட்சி பெறவைக்கின்றது. இது விஞ்ஞான ரீதியிலும் கண்டறிந்த உண்மையாகும். இந்து மதத்தில் இறைவன் என வணங்கும் ஒவ்வொரு வடிவங்களுக்கும் "இசை" ஆதார வடிவமாக அமைந்துள்ளது.

வீணையை ஏந்தி நிற்கும் கலைமகள், மத்தளம் வைத்திருக்கும் நந்தி, புல்லாங்குழல் ஊதும் கிருஷ்ணன், மட்டுமின்றி இன்னும் நிறையவே உதாரணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மதத்திலும் இறைவனை வழிபடும் போது இசையுடன், ராகத்துடன் வழிபடும் போது மனம் ஒரு நிலையில் நிலை நிறுத்தப்படுகின்றது. இதனால் இறை பக்தியும், கூடவே ஆத்மாவுக்குப் பெரும் திருப்தியும் கிடைக்கிறது.

இசையைப் பற்றி கவியரசு கண்ணதாசன் கீழ்க்கண்டவாறு சொல்கின்றார்.

"இன்ப உணர்வின் போது பல பிரச்சினைகள் மறக்கப்படுகின்றன. அதை இசையிலே கேட்கும் போது கேள்விச் சுகமே கூடப் போதுமானதாக இருக்கின்றது. கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து, அனுபவிப்பதைவிட இசைக் காமத்தில் ஆன்மாவுக்கு ஒரு லயம் இருக்கிறது. சுகமான சங்கீதம், சுகமான பாடல் நெஞ் சுக்கு நிம்மதி"

இளம் நெஞ்சங்களே... கண்விழித்த நேரம்முதல் கண்ணுறங்கும் வரை அன்றாட வாழ்வினில் சோகம், வேதனை, விரக்தி, போட்டி, பொறாமை, கோபம் என பலவிதமான கசப்பான அனுபவங்கள் நம்மை ஆட்டிப்படைக்கின்றன. அதே மன நிலையோடு நித்திரைக்குச் செல்லும் போது ஒரு போதும் நிம்மதியான உறக்கம் வருவதில்லை. மாறாக வெவ்வேறு சிந்தனைகளால் குழம்பித் தவிக்க வேண்டி வரும். எனவே, இரவில் இனிமையான இசையை செவிமடுத்த பின், அந்த இசையே உங்களை ஆழ்ந்த அமைதியான உறக்கத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பூபாளம் பாடிக் கொண்டே உதயம் பிறக்கிறது. ஆனந்த பைரவி பாடிக் கொண்டே உலகம் இயங்குகின்றது. நீலாம்பரி பாடிக் கொண்டே உலகம் உறங்குகின்றது. மொத்தத்தில் இயற்கையின் இயக்கமே இசை. எம் இதயம் துடிப்பது கூட இசையின் லயத்தினால் தானே.

தாலாட்டு கேட்டால் தூக்கம் வரும்; சோககீதம் கேட்டால் அழுகை வரும்; துள்ளிசை கேட்டால் ஆட்டம் வரும்; காமரஸப் பாட்டு கேட்டால் உணர்ச்சிகள் தூண்டப்படும்; இறை பக்திப் பாடல் கேட்டால் நெஞ்சம் நெகிழும். ■

**செ. சுசீலா, பலாங்கொடை.**

## நாங்கள் பேனா நண்பர்கள்



பெயர் : இரா.கந்தையா
வயது : 23
பொ.போ. : பத்திரிகை வாசித்தல், விளையாடுதல்.
முகவரி : தபாலகம் நெடுந்தீவு



பெயர் : எஸ்.தமிழாம்பிகை ஜெகன்
வயது : 23
பொ.போ. : கவிதை எழுதுவது, பத்திரிகை வாசித்தல், கலைத்துறையில் ஈடுபாடு
முகவரி : பள்ளன் கோட்டை, நானாட்டான்.



பெயர் : எம்.ஐ.முகம்மது ஷியாம்
வயது : 17
பொ.போ. : இடி பத்திரிகை வாசித்தல்
முகவரி : முஹம்மதியா வீதி, பிறைந்துறைச்சேனை, வாழைச்சேனை –05.



பெயர் : கே. பிரேமன்
வயது : 18
பொ.போ. : பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கிரிக்கெட் விளையாடுதல்.
முகவரி : அடப்பன் குளம், நேரியகுளம், வவுனியா.

புதிய பெண்மை

ஸ்நேகிதி

# திருமண வாழ்க்கை சிறப்பாக அமைய...!



திருமண வாழ்க்கை என்பது எல்லோருக்கும் அமைந்துவிடுவதில்லை. என்னதான் படித்து பட்டம் பெற்று நல்ல உத்தியோகத்தில் இருந்தாலும், திருமண வயதைக் கடந்தும் சிலர் திருமணம் கைகூடாமல் இருப்பதை நாம் காண்கின்றோம்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்கிறார்கள். ஆனால், சில பெண்களுக்கு சொர்க்கத்தில் மட்டுமல்ல பூமியில் கூட நிச்சயிக்க முடியாது போய்விடுவது கவலைக்குரியதே.

சிலருக்கு எல்லா வசதிகயும் இருந்தும் திருமணம் என்பது கைகூடாத ஒரு கனவாகவே இருந்து விடுகிறது. சிலர் திருமண வயதை அடைந்தாலும், வசதி வாய்ப்புக்களை எதிர்பார்த்து திருமணத்தைத் தள்ளிப் போடுகிறார்கள். இன்னும் சிலர் திருமண வாழ்க்கையில் நாட்டமற்று இருக்கிறார்கள். வேறு சிலரோ திருமணக் கனவுகளை மனதிலே சுமந்து கொண்டு வசதிகள் வாய்ப்புகள் இல்லாததால் திருமணம் ஆகாமலே கனவுகளோடு தம் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டு இருக்கிறார்கள்.

சில பெண்கள் பெற்றோரை எதிர்த்து திருமணம் செய்து கொண்டு சிறப்பாக வாழ்கிறார்கள். இந்தவகையில் சீரழிந்து கெட்டாரும் உண்டு. எது எவ்வாறாயினும் எல்லாமே மனிதனின் கைகளில் தான் தங்கியுள்ளது. திருமண வாழ்வில் சொர்க்கத்தைக் காணுவதும் நரகத்தில் வீழ்வதும், அவரவர் நடந்து கொள்ளும் விதத்தைப் பொறுத்தே அமைகிறது.

திருமண வாழ்வு என்பது சிலருக்கு கரும்பு போல் ஆரம்பத்தில் இனித்தாலும் காலப் போக்கில் கசக்க ஆரம்பிக்கும். சிலருக்கு ஆரம்பத்தில் கசந்தாலும் காலப் போக்கில் இனிப்பதுமுண்டு. எப்படியிருப்பினும் நாம் திருமண வாழ்வை ஓர் அர்த்தமுள்ள வாழ்வாக்க வேண்டும்.

திருமணமானவுடன் புகுந்த வீடு செல்லும் பெண்களுக்கு அக் குடும்பத்தின் உறவினர்கள், பழக்க வழக்கங்கள் என்பவற்றை அறிந்து கொள்வதற்கு நீண்ட நாட்கள் எடுக்கலாம். புதிய மனிதர்களோடு பழகும் போது புதிய அனுபவங்களைப் பெறக்கூடியதாக இருக்கும். எனவே, பெண்களுக்குப் புகுந்த வீடு புதிய பிறப்பு என்று கூடச் சொல்லலாம். அங்கு அவள் தன்னைத் தானே மாற்றிக் கொண்டு செயற்பட வேண்டும்.

தம் வீட்டிற்கு திருமணமாகி ஒரு பெண் வந்து விட்டால் அவள் உடனே தங்கள் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என கட்டாயப்படுத்தக் கூடாது. பிறந்தது முதல் அவள் கடைப்பிடித்து வந்த அவளது குடும்பப் பழக்கவழக்கங்கள் வேறுபட்டிருக்கலாம். அதைத் திடீரென மாற்றுவது என்பது கடினமே! அதற்காக அவளைக் குறைசொல்லக் கூடாது. மெல்ல மெல்ல உங்கள் நடைமுறைக்கு ஏற்ப அவளை மாற்றலாம்.

சில பெண்கள் இன்று வந்த இவர்கள் என்ன சொல்லுவது நான் எப்போதும் இருந்தது போலவே இருப்பேன் யாருக்காகவும் என்னை நான் மாற்றிக் கொள்ள மாட்டேன். என அடம்பிடிப்பர். அது தவறு. அப்படி நடந்து கொள்வதால் தான் சிலருக்கு கல்யாணம் கசப்பாக அமைந்து விடுகிறது.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரினதும் குணங்களையும் அறிந்து, அதற்கு ஏற்றாற் போல் நடந்து கொள்ளுங்கள். ஒருவரைப் பற்றி மற்றவரிடம் குறைகூறாதீர்கள். இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது பொறாமை. என்ன பிரச்சினை என்றாலும் எடுத்தவுடன் கோபப்படாதீர்கள். திருப்பி நாலு வார்த்தை கேட்க வேண்டும் போல் இருந்தாலும் உடனே கேட்டு விடாதீர்கள். பொறுமையோடு மௌனத்தையும் கடைப்பிடித்து அமைதியாக இருங்கள். எல்லாம் ஓய்ந்து ஆறுதலாக இருக்கும் போது உங்கள் பக்க நியாயத்தை எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

குடும்பத்தில் பிரச்சினை ஏற்படுத்துவதற்கென சிலர் இருப்பார்கள். அவர்களைச் சமாளித்து, அவர்களுக்கு வளைந்து கொடுத்து செயற்படுங்கள். உங்கள் குடும்பத்தின் நன்மைக்காக நீங்கள் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டி வரும். அது தப்பில்லை. குடும்பத்திற்காக நீங்கள் செய்யும் தியாகம் என நினைத்துச் செய்யுங்கள். உங்கள்திருமணவாழ்க்கை இனிதாக அமையும்.

~கார்த்திகாயினி~

# நீங்கள் எப்படிப்பட்டவர்கள்?

## வயிறு

மங்கையரின் வயிறு, பாம்பின் வயிற்றைப் போல் உரோமங்களின்றி வழுவழுப்பாகவும் படிமானமாகவும் இருந்தால் இத்தகையவர்கள் தங்கள் ஆயுள் முழுமையும் சுகபோக சௌகரியங்களுடன் சகல செல்வங்களும் நிறைந்தவர்களாக இருப்பார்கள்.

பெண்களின் வயிறு பானை வயிறு போலப் பெரிதாக இருந்தால், வாழ்க்கையில் மேன்மையடையும் யோகமிராது. என்றாலும், குடும்ப வாழ்க்கையின் நிர்வாகத்தில் இவர்கள் சிறந்து விளங்குவார்கள்.

வயிறு இளைத்திருந்தால் மிகவும் பாக்கியசாலிகளாகத் திகழ்வார்கள். சகல சம்பத்துக்களும் விருத்தியடையும். இவர்கள் நல்ல மனமுடையவர்களாகவும், இளகிய சுபாவமுடையவர்களாகவும், பரோபகாரிகளாகவும் இருப்பார்கள்.

வயிறு மேடுபள்ளங்களையுடைய வயிறாக இருப்பின், குடல் சம்பந்தமான நோய்களுண்டாகும். பொருள் நஷ்டமும், மனத்தளர்ச்சியும் உண்டாகும்.

உள்ளங்கையைப் போல வயிறு நடுவில் ஒட்டினாற் போல இருக்கும் பெண்களுக்கு, லட்சுமிகடாட்சமுடைய குடும்ப வாழ்க்கை அமையும்.

தவளையின் வயிறுபோல அமைந்துள்ள வயிறுடைய பெண்களுக்கு சந்தான விருத்தியும், சம்பத்து விருத்தியும் சுபமாங்கல்யமும் உண்டாகும்.

பெண்களின் வயிற்றின் மேல் உரோமங்கள் காணப்படுமாயின் அவர்கள் பரமதரித்திர நிலையை அடைவார்கள். இத்தகைய பெண்கள், கபட குணமும், கலகஞ் செய்யும் குணமும் கொண்டவர்களாக விளங்குவார்கள்.

வயிறு தொங்கிக் கொண்டிருந்தால், மாமனாரை இழந்து விடுவார்கள். வயிறு விசாலமாக இருந்தால் காலம் கடந்து தாயாவாள்.

# ஸ்பெஷல் தவறி ரிங்ஸ்

*தேவையான பொருட்கள் :–*

முழு வெள்ளை உழுந்து - 1கப், தயிர்- 2கப், பால்- அரைகப், பச்சை மிளகாய்-2, முந்திரி-6, பாதாம்-6, உப்பு, எண்ணெய்- தேவையான அளவு, மிளகாய்த்தூள் ஒரு தேக்கரண்டி, சீரகம்- ஒரு தேக்கரண்டி.

*செய்முறை :–*

உழுந்தை ஒரு மணி நேரம் ஊறவைத்து கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் தெளித்து பொங்கப் பொங்க ஆட்டிக் கொள்ள வேண்டும். தயிரை நன்கு கடைந்து அதில் பாதியளவு எடுத்து பால், சிறிதளவு உப்பு சேர்த்துக் கலக்கவும். மீதமுள்ள தயிரில் பச்சை மிளகாய், முந்திரி, பாதாம் பருப்பு ஆகியவற்றை அரைத்து உப்புச் சேர்த்துக் கலக்கவும். வாணலியில் எண்ணெயைக் காயவைத்து அதில் உழுந்து மாவை துளையிட்டு வடைகளாகத் தட்டிப் போடவும்.

மேற்புறம் அதிகமாக சிவக்காமல் வேகவிட்டு எடுத்து அதை பால் தயிர் கலவையில் ஐந்து நிமிடம் ஊறவைத்து எடுத்து ஒரு தட்டில் அடுக்கவும். பரிமாறுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு அதன் மேல் முந்திரி தயிர் கலவையை ஊற்றி இனிப்புச் சட்டினியை அதன்மேல் விட்டு சீரகத்தூள் மிளகாய்த் தூள் தூவி பரிமாறவும்.

# 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை - 21

ஊற்று பகுதியில் பிரசுரமான 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி கீழுள்ள. கூப்பனை வெட்டி ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். கூடுதல் புள்ளி பெறும் மாணவர்களுக்கு அலாரமுள்ள மேசைக் கடிகாரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கூடுதல் புள்ளி பெற்றிருந்தால் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார். பாராட்டுக்குரியோரின் பெயர், முகவரிகள் பிரசுரிக்கப்படும். கூப்பன் இல்லாத விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

**போட்டிக் கூப்பன் ~ 21**

பெயர் : ..........................................

பாடசாலை முகவரி : ..........................................

..........................................

..........................................

*5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பரிசுப் போட்டி - 21*
**417/2, Galle Road,**
**Colombo-3**

## 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை – 18 இற்கான விடைகளும், பரிசு, பாராட்டுப் பெறுபவர்களின் விபரமும்

### போட்டி 18 இற்கான விடைகள்:

50. 4 51. 6 52. 9 53. 7 54. 3 55. 8 56. 5
57. 2 58. 1 59. செல்வி டில்ஷானி
60. 'பாத்தகம்' குளியாப்பிட்டிய வீதி, தம்பதெனிய.
61. லண்டன் 62. 12.45 63. 2.45 64. லண்டன்
65. ஸ்ரீலங்கன் எயார்லைன் 66. சரி 67. 19,500/-
68. தென்னைச் செய்கை 69. கட்டுநாயக்க 70. பிரிட்டன்

**மேசைக் கடிகாரத்தினைப் பரிசாக வெல்லும் அதிர்ஷ்டசாலி**

**V.கருணாநிதி மனோசாந்தி,**
ப/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்,
பதுளுபிடிய வீதி, பதுளை.

*பாராட்டுப் பெறுவோர்கள்*

1. ந.கயலக்சி,
   யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.
2. வெள்ளைசாமி V. ஷருன்,
   தெய்வகந்தை தமிழ் வித்தியாலயம், சாமிமலை.
3. எம்.எச்..'.ப் . சஜிதா,
   மட்/அல் முனீறா பாலிகா மகாவித்தியாலயம், ஏறாவூர்.
4. ஜே.எம்.ஷர்பி,
   மன்/அல்-அஸ்ஹர் மகாவித்தியாலயம், மன்னார்.
5. M.N. Kannsha Noor,
   St. Mary's College, Trinncomalee.
6. கி.கிஷாந்,
   மட்/உதயபுரம் தமிழ் வித்தியாலயம், பெரியகல்லாறு.
7. சிபானா தாஹிர்,
   சுங்காவில் முஸ்லிம் மகா வித்தியாலயம்,
   சுங்காவில், பொலன்னறுவை.
8. இஷ்ரா இம்ரான்,
   மாறை/மின்ஹாத், தேசிய பாடசாலை, திக்குவல்லை.
9. எஸ். மோகன் லால் (சதிஷ்),
   இந்து மகா வித்தியாலயம், இறத்தோட்டை.
10. ரிஷானி லோபோ,
    நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு 13.

**ஐந்து வித்தியாசங்களுக்கான விடை**
1.கூடையிலுள்ள புத்தகம் 2.மட்காட் லைட் 3.பெடல் 4.ஸ்டான்ட் 5.குழந்தையின் கையிலுள்ள பொருள்

## சிந்தித்தால் சிறப்பு

- ✔ வாழ்க்கை ஒரு போர்க்களம் உன்னால் முடிந்தவரை முயற்சியுடனும் நம்பிக்கையுடனும் போராடு.
- ✔ வாழ்க்கை கற்களும் முட்களும் நிறைந்த ஒரு பாதை. அதில் நடக்க எந்த நிலையிலும் உன் பாதங்களைத் தயாராக வைத்துக் கொள்.
- ✔ விரும்பிய வாழ்க்கை கிடைக்கவில்லையே என வேதனைப் படாதே! கிடைத்த வாழ்க்கையில் உன் மனதை மகிழ்ச்சிப்படுத்து.
- ✔ உள்ளத்தின் காயங்களை கண்கள் கண்டு கொள்வதில்லை. புன்னகையினால் அதனை மறைத்து விடு.
- ✔ ஒருவன் அதிகமாகப் புன்னகைப்பது தனது இன்பத்தை வெளிக்காட்டுவதற்காக அல்ல, பிறர் தனது துன்பத்தைக் கண்டு புன்னகைக்கக் கூடாது என்பதற்காகவே.

–எஸ்.றூபி, மன்னார்.

# ஊற்று

-கே.கார்த்திகாயினி-

## இவ்வாரத் தென்றல்

**கேடுஇல் விழச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை**

*-அதிகாரம்-40 குறள்-10*

ஒருவருக்கு எவற்றாலும் அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஏனைய பொருட் செல்வங்களெல்லாம் அழியக் கூடியனவே. தவிர சிறப்பும் இல்லாதன.

எனவே மாணவர்களே! அழியாத கல்விச் செல்வத்தை நாம் தவறாது கற்க வேண்டும்.

## கண்டு பிடியுங்கள்: இல.71 பரிசு ரூபா. 100/-

தம்பி, தங்கைகளே! இங்கேயுள்ள 16 சதுரங்களிலும் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் நால்வர் ஒளிந்துள்ளனர். அவர்களைக் கண்டுபிடித்து அனுப்புங்கள்.

இடியின் முழக்கம் 72 இல் இடம் பெற்ற கண்டுபிடியுங்கள் இல.69 இன் போட்டி முடிவுகள்:

சரியான விடைகள்:

**1. மூங்கில் 2. தென்னை 3. கமுகு 4. நெல் 5. வாழை**

சரியான விடைகளை எழுதியோரில் பரிசுக்குரியவராகத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலி:

**தி.மத்தியூஸ் லக்ஷன்**
*இராசம்மா தோட்டம், சிலாபத்துறை, முருங்கன்.*

முடிவுத் திகதி: 28-08-2002


| | | | |
|---|---|---|---|
| யோ | ட் | எ | யூ |
| யூ | டி | லி | ன் |
| ட | க | ரி | ச |
| ன் | கி | நி | லி |

கண்டுபிடியுங்கள்-71
'இடி'
417/2, காலி வீதி,
கொழும்பு -03.

பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

01. எஸ்.செல்வராஜ், வெஸ்ட் அப்புத்தளை, ஒகியா போஸ்ட்.
02. துளசி விவேகா, சி.டபிள்யூ.எம்.எஸ்டேட், தலவாக்கலை.
03. ஆர்.கார்த்திக், மாணிக்கவத்தை, புதுக்குடியிருப்பு, ரொஸல்ல.
04. யோ.தர்சனா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
05. எஸ்.வசந்தி, எமில் நகர், மனனார்.
06. ஏ.எம்.அல்-அக்தர், ஆஸ்பத்திரி வீதி, ஏறாவூர்-03.
07. சு.அ.கா.நியாஸ், கொழும்பு வீதி, ரத்மல்யா, புத்தளம்.-
08. எச்.எம்.எம்.அப்ஸல், நாவின்னை, காலி.
09. ஷர்மிளா காதர், யோனகபுர, திக்குவல்லை.
10. சியாஜ் எம்.ஸகீர், வாழைத்தோட்டம், பெரியகுடியிருப்பு, கற்பிட்டி.

## இடி வர்ணம் தீட்டும் போட்டி - 49



**வர்ணம் தீட்டும் போட்டி 47ல் ரூ.50/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**மு.ஜனார்த்தன்,**
ஆண்டு-3பீ, ப.சு.த.ம.கல்லூரி,
ஹாவாஎலிய, நுவரெலிய.

பாராட்டுப் பெறுபவர்கள்


01. ஜே.எம்.ஷர்பி, அல்-அஸ்ஹர் மகா வித்தியாலயம், மன்னார்.
02. இ.சுஜீபன், புத்தளம்.
03. எம்.ஜனார்த்தன், புதியவீதி, கந்தப்பளை.
04. பிரியங்கா, கொழும்பு-15.
05. ஹமீதா அத்தாஸ், மாததறை.

அருகிலுள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி எதிர்வரும் 28-08-2002 இற்கு முன் எமக்கு அனுப்பி வையுங்கள்

**'ஊற்று'**
வர்ணம் தீட்டும் போட்டி-49
417/2, காலி வீதி,
கொழும்பு -03.

## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் - I

* கீழுள்ள வரைபடத்தைக் கவனமாக பார்த்து 1ம், 2ம், வினாக்களுக்கு விடையளிக்குக.




1. ஆங்கில எழுத்து A க்குரிய பெறுமதி என்ன?

2. இவ்வரைபடத்தில் உள்ள 30க்கு குறைந்த இரட்டை எண்கள் எத்தனை?


* கீழுள்ள 3ம் 4ம் வினாக்களில் முதலிலுள்ள இரு சொற்களும் ஒரு வகையில் தொடர்புடையவை. A, B, C எனக் குறித்த சோடிகளுள் இதே வகையில் தொடர்புடைய ஒன்றைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் அந்த எழுத்தை எழுதுக.

3. மின்சாரம் : வயர் (..................)
   A. பந்து : மைதானம்
   B. நீர் : குழாய்
   C. பால் : போத்தல்

4. வெப்பமானி : வெப்பம் (..................)
   A. கலண்டர் : வருடம்
   B. நாடா : நீளம்
   C. அளவீடுகள் : நிறை


* 5ம் 6ஆம் வினாக்களில் உள்ள பெட்டியின் ஆறு பக்கங்களிலும் படங்கள் வரையப்பட்டுள்ளன. நீங்கள் காணும் பக்கத்தினது எதிர்ப்பக்கத்தில் இருப்பதும் அதே படமாகும். பெட்டியைப் பிரித்துப் பார்க்கும் போது அதனைத் திருத்தமாகக் காட்டும் முறையைக் குறிக்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

05




(..................)

06




(..................)

## வாழ்க்கையில் வெற்றி பெற!

அன்பு காட்டு ஆனால் அடிமை யாகி விடாதே!
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து விடாதே!
பணிவாயிரு ஆனால் பயந்து விடாதே!
கண்டிப்பாயிரு ஆனால் கோபப்ப டாதே!
சிக்கனமாயிரு ஆனால் கஞ்சப்ப டாதே!
வீரனாயிரு ஆனால் கோழை யாகி விடாதே!
சுறுசுறுப்பாயிரு ஆனால் பதட்டப் படாதே!
தர்மம் செய் ஆனால் ஆண்டி யாகி விடாதே!
பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே!

*-சாய்ந்தமருது ஜமால்தீன் றிபாய்தீன்.*

## சிந்தனை துளிகள்

1. தற்பெருமை எங்கு முடிகிறதோ அங்குதான் ஆனந்தம் பிறக்கும்.
2. கோபம் கொண்டவன் இழக்கின்றான். பொறுமை உள்ளவன் ஜெயிக்கின்றான்.
3. கருணை நிறைந்த இதயமே கடவுளின் ஆலயம்.
4. மின்மினி பூச்சி பறக்கும் போதுதான் பிரகாசிக்கும். நாமும் முயற்சி செய்தால் தான் முன்னேறலாம்.
5. கல்வி என்ற மரத்தின் வேர்கள் கசக்கும். அதன் பழங்களோ மிகவும் இனிக்கும்.
6. விடா முயற்சியை கடைப்பிடித்தால் மாத்திரமே வாழ்வில் முன்னேற்றம் அடையலாம்.

*-சுப்பையா இளையராஜா, கெடஸ் மஸ்கெலியா.*

ஏணி, கீற்று ஆகியவற்றை முந்திக் கொண்டு...
**3ம் வகுப்புத் தொடக்கம் A/L வகுப்பு மாணவர்கள் வரை படித்துப் பயன்பெறக் கூடிய**

**'கல்விக் களஞ்சியம்'**

செப்டெம்பர் முதலாம் திகதி முதல்
மாதமிரு முறை வெளியாகிறது

5ம் வகுப்பு புலமைப் பரிசிற் பாடங்களுடன் ஏனைய வகுப்புக்களுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ்மொழி, ஆங்கிலம், சிங்களம் ஆகியவற்றுடன் ஏராளமான பொது அறிவு விடயங்களும் உள்ளன அத்தோடு உங்கள் எழுத்தாற்றலை வளர்க்கும் கதைகள், கவிதைகள், சித்திரத் தொடர்கள் மற்றும் மூளைக்கு வேலை தரும் பல பரிசுப் போட்டிகளும் உண்டு.

மாணவர்களுக்கென்று இலங்கையில் மாதமிருமுறை வெளியாகும் முதலாவது பத்திரிகை மட்டுமல்ல - முதற்தர பத்திரிகையும் இதுவே! விலை ரூ 20/-

**வாங்கிப் படிக்கத் தயாராகுங்கள்!**

## தாய்க்கு உதவுவோம்!

அம்மா பணிகள் செய்வாள்!
அதற்கு உதவி புரிவோம்!
சும்மா சோம்பல் கொண்டால்
சோர்வு காணும் தேகம்!

வீடு பெருக்கி வைப்போம்
வேலை கேட்டுச் செய்வோம்!
ஈடு பாடு உடனே
இயன்ற பணிகள் செய்வோம்!

துணிகள் துவைத்துக்
கொடுப்போம்
துணையாய் ஒத்து ழைப்போம்!
பணிகள் செய்து தாயின்
பாரம் தன்னைக் குறைப்போம்!

தம்பி அழுதால் நாமும்
தாலாட் டையே சொல்வோம்!
நம்பிக் கையாய்த் தாய்க்கு
நாளும் உதவி செய்வோம்!

*-கவிமாமா.*











அண்மையில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்ற சூரியன் FM. பிரதம செய்தி ஆசிரியர் நடராசா குருபரன் எழுதிய 'தமிழில் வானொலிச் செய்திகள் யாருக்காக? எப்படி?' என்ற நூல் வெளியீட்டு விழாவில் முதற் பிரதியை விழாத் தலைவர் ஒளிபரப்பாளர் எஸ். விஸ்வநாதனிடமிருந்து, பெருந்தோட்ட அமைச்சர் பெ.சந்திர சேகரன் பெற்றுக் கொள்வதையும், அருகில் நூலாசிரியர் நடராசா குருபரன் நிற்பதையும் முதலாவது படத்திலும், விழாவில் கலந்து கொண்ட (இடமிருந்து வலம்) மனோகணேசன் எம்.பி, அமைச்சர் தி.மகேஸ்வரன், வேலாயுதம் எம்.பி, குருபரன் எம்.பி. இ.ஒ.கூ. முன்னாள் பிரதிப் பணிப்பாளர் திரு. சிவஞானசுந்தரம், ஒலிபரப்பாளர் இளையதம்பி தயானந்தா ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம் : எஸ்.ஆர்.தாஸ்)



அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் பத்து வருட பூர்த்தியை முன்னிட்டு கல்முனை மாவட்ட சென்ஜோன் அம்பியுலன்ஸ் ஆணையாளர் பிரிவு நடாத்திய முதலுதவிப் பயிற்சிப் பாசறையில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட கல்முனை ஸாஹிராக் கல்லூரி மாணவர் அணியையும், உடற்கல்வி பொறுப்பாசிரியர் ஏ.பைஸர், கல்லூரி அதிபர் ஏ.எம். முஸ்தபா, பிரதி அதிபர் ஏ.ஆதம்பாவா, உடற் கல்வி ஆசிரியர் ஏ.ஆர்.எம்.யூசுப் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம் : செயிட் அஸ்லம்.எஸ்.மௌலானா)




இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்ல மலையகக் கிளை, பதுளையில் ஆரம்பித்த சிறுவர் பராமரிப்பு நிலையத்தையும், அதில் இணைந்துள்ள சிறுவர்களையும் படத்தில் காணலாம்.
–களுவாஞ்சிக்குடி நிருபர்–



மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் நடைபெற்ற 'சமாதானம்' சஞ்சிகையின் 10வது இதழ் வெளியீட்டு விழாவில் ஆசிரியர் ஈழ பாரதி மருதூர் வாணர், எழுத்தாளர் செ.குணரத்தினத்துக்கு 'இலக்கியவேந்தர்' என்ற பட்டம் வழங்கி பாராட்டுப் பத்திரத்தைக் கையளிப்பதையும், மருதமுனை மஜீத், ஏ.எம். பதுறுத்தீன், ஒலுவில் அமுதன், எம்.எச்.ஏ.கரீம் யோகராஜாக் குருக்கள், எம்.ஐ.எம். முஸ்தபா ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம் : மருதமுனை நிருபர்)



சாய்ந்தமருதூர் எம்.எம்.எம். நூறுல் ஹக் எழுதிய 'சிறுபான்மையினர் சில அவதானங்கள்' எனும் நூலின் அறிமுக விழா கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் எம்.எஸ். காரியப்பர் மண்டபத்தில் நடைபெற்றபோது தென் கிழக்குப் பல்கலைக் கழக விஞ்ஞான பீடத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் நூலாய்வுரையை நிகழ்த்துவதையும், எஸ்.நஜ்முத்தீனிடமிருந்து முதற் பிரதியை பிரபல வர்த்தகர் அல்-ஹாஜ் ஏ.ஏ.சலீம் பெறுவதையும், நூலாசிரியர் எம்.எம்.எம். நூறுல் ஹக், தேசிய முஸ்லிம் கவுன்ஸில் செயலாளர் செய்யித் அஸ்லம் எஸ். மௌலானா ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.



கொழும்பு ரன் முத்து ஹோட்டலில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏழாவது வருடாந்த மாநாட்டில் 'மீடியா' சிறப்பு இதழின் முதல் பிரதியை புரவலர் ஹாஷிம் உமர், மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடமிருந்து பெறுவதையும், மீடியா போரத்தால் கௌரவிக்கப்பட்ட எம்.ரீ.எம் அளு ஹருத்தீன், எம்.கே.எம். ஸரூக், என்.எம். ஹனீபா, டொமினிக் ஜீவா, ஹாஜி உஸ்மான் ஸாஹிப், மீடியா போரத் தலைவர் என்.எம். அமீன், அமைச்சர் அஸ்வர், அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார், மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோரையும் படங்களில் காணலாம்.
(படம் : பி.எம்.ஏ.சலாஹுதீன்)

காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண் டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு வழி கண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளிநாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக. T.P. 074-519754